ஜெய் ஹிந்த்!


பாரத தேச சுதந்திர இரண்டாவது வருஷ சமயத்தில் எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும்
எங்கள் நன்மையை கோருகிறவர்களுக்கும் எங்கள் வந்தனம்

உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்,

ஸ்தாபிதம்: 1941

உமா மஹால் தந்தி விலாஸம்: UMA மசூலிப்பட்டணம்

உமா கோல்டு கவரிங் போஸ்டாபீஸ்



சுதந்திர பாரத தேசத்தின் 1941 முதல் இன்றையவரைக்கும் பாரததேச ஆசீர்வாதத்தினால் தேச சேவை செய்து எங்கள் வியாபாரம் ஜெயமாய் நடந்துவருகிறபடியால், இந்த சுதந்திர சுப தினத்தில் எங்களால் தயார் செய்யப்பட்ட ஆனந்தமான உமா ஆபரணங்களை உபயோகித்து ஆனந்தமடையவேணும் என்பது எங்கள் கோரிக்கை.

உமா ஆபரணங்கள் 10 வருஷம் உத்திரவாதம்

அசல் தங்கத் தகட்டினால் லோகத்தின்மீது மூடப்பட்டு தயார் செய்தவை.

பாரத தேசத்திலும் மற்ற இதர தேசங்களிலுமுள்ள இந்திய பிரமுகர்கள் அனேக சர்டிபிகேட்டுகள் கொடுத்துள்ளார்கள்.

உமா ஆபரணங்களை நைட்ரிக் ஆஸிட் என்கிற திராவகத்தில் போட்டால் 5 நிமிஷத்திற்குள் கவரிங் செய்த பொன் வரும். அப்படி தங்கம் சுற்றப்படவில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூபாய் 500 இனாம் கொடுக்கப்படும்.

நமது தொழிற்சாலையில் நவீன இயந்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. நல்ல கைதேர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்யப்பட்டவை.

800 டிசைன் கொண்ட கேட்லாக் இனாம்

ஆபரணங்கள் வி. பி. சார்ஜ் 15 அணா மாத்திரம்

மனைவிக்குச் சமைக்கக்கூட முடியாத அவ்வளவு களைப்பு





— "க்ருஷன்"

அவளுக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் திருப்பி யளிக்கும் வரையில்

சரளா மிகவும் கவனக் குறைவுடன் களைப்பும் அடைந்தாள். அவளால் மாலை போஜனத்தைக் கூட சமைக்க முடியவில்லை. அவள் கணவன் காரியாலயத்தினின்று வீடு திரும்பிய போது அவளது சோம்பேறித் தனத்துக்காக அவளை கோபித்துக் கொண்டான். அன்று மாலை அவள் தோழியிடம் தன் கஷ்டத்தை எடுத்துணர்த்தியபோது அவள் தோழி "தினம் காலை உண்டிக்குமுன் 'க்ருஷன்' சாப்பிடு" என்று யோசனை கூறினாள்.

மூன்று வார காலத்திற்குள் சரளா ஓர் புது மனுஷியாகி விட்டாள் — மவுனமாகவும் கவலையுடனுமில்லாமல் சந்தோஷமாகவும் சுறுசுறுப்பாகவும் வீட்டுக் காரியங்களை சுலபமாகக் கவனித்துக்கொள்ள முடிந்தது. மாலை நேரம் ஆனந்தமாக அமைந்தது.

மிருதுவுடன் உத்திரவாதமான 'க்ருஷனி'ன் காரியம் கேவலம் சுத்தப்படுத்துவதைவிட மேலான பணி, உங்களுடைய ரத்தத்தில், ரத்த வோட்டத்தில் ஏன் உடம்பின் ஒவ்வொரு நரம்புகளிலுமே ஓர் உயர்ந்த புஷ்டி மருந்தின் வேலையைச் செய்கிறது. வலுவான தன்மையின் மிருதுவான உணர்ச்சியை உங்களுக்கு அளிக்கிறது. 'க்ருஷன்' தன் அளவில்லாத வகையில் வாழ்க்கையின் சோர்வினின்று உயிரின் சுறுசுறுப்பைப் பெற ஆரோக்கியத்தை அளிக்கிறதென லக்ஷக்கணக்கான மக்கள் அறிவார்கள்.

இன்றே 'க்ருஷன்' வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும்.

விலை ரூ. 1-10. (பஞ்சன் பெட்டியில்)



நீங்கள் கூட அந்த 'க்ருஷன்' உணர்ச்சியை அடையலாம்

DK81. 5.



சீதா :—லலிதா! நான் நேற்று உன் வீட்டிற்கு வந்தபோது நீ இல்லை. ஆனால் எதிரில் மாட்டியிருந்த உன் படம் என்னை நீயே புன்னகையுடன் வரவேற்பதுபோல இருந்தது. தத்ரூபம் உன்னைப் போலவே இருக்கிறதே, எங்கு எடுத்தாய்?

லலிதா :—ஓ! அதுவா. எல்லோருமே அதைப் பார்த்துவிட்டு அப்படித்தான் சொல்லுகிறார்கள். இப்போது மவுண்ட் ரோடில் அந்த "ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் மகமத் இப்ராஹிம் கம்பெனி" இருக்கிறதே அதில் MECO ஸ்டுடியோ என்று ஆரம்பித்திருக்கிறார்களே, அங்கே தான் எடுத்துக்கொண்டேன்.

சீதா :—ரொம்ப நன்றாக எடுத்திருக்கிறார்கள். வர வருஷம் எப்படியும் நம் சித்ராவுக்குக் கல்யாணம் பண்ணியாக வேண்டும். சற்று நீ இன்று வருகிறாயா? அங்கே போய் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டு வந்து விடலாம்.

மேகோ ஸ்டுடியோஸ்

ப்ரொப்ரைடர்ஸ் :—

மஹமத் இப்ராஹிம் & கம்பெனி லிமிடெட்

குளோப் ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை


P. A. R.
சுவர்ணமாளிகை
மகிழ்ச்சிக்குறிய
மகோன்னதமான ஆபரணங்கள்
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
ஜுவல்லர்ஸ் கோயமுத்தூர்
TEL: RAJA
PHONE 268

காட்ஸ்வால்

அவர்கள் தேக சீதோஷ்ணத்தை சமப் படுத்துகிறது.



**உஷ்ணவேளையில்
அவர்களை
குளுமையாகவும்
குளிர்ந்த வேளையில்
கதகதப்பாகவும்
வைத்திருக்கிறது!**

தங்கள் குழந்தைகளை உஷ்ணவேளையிலும் சரி, விளையாட்டுச் சமயங்களிலும் சரி, குளுமையாக வைத்திருப்பதுடன் தேகப் பயிற்சிக்குப் பின் அல்லது குளிர்ந்த வேளையில் அவர்களுக்கு ஜலதோஷம் வராமல் காப்பாற்றவும் கூடியதோர் துணியைத் தான் எல்லாத் தாய்மார்களும் தேடுவது. இதை இப்புதிய ஜவுளி அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறது!

காட்ஸ்வால் இவ்விதவித பாதுகாப்பும் அளிப்பது அதன் அரிய நெசவுத்தன்மை காரணமாகத் தான். அதிலுள்ள ஆயிரக் கணக்கான சிறு துவாரங்களின் மூலம் உடம்போடு சேர்ந்தாற்போல் காற்றோட்டம் எப்போதும் ஏற்பட்டு தேக சீதோஷ்ணம் சம நிலையில் நிறுத்தப் படுகிறது. வியர்வையும் எளிதில் உலர்கிறது.

காட்ஸ்வால் அணிவதற்கு சுகமாகவும், அதி மென்மையான சரீரங்களுக்கும் மிருதுவாகவும் இருப்பது தவிர, பார்வைக்கும் அழகுதான். தாய்மார்கள் தங்களுக்கும் தங்கள் கணவர்களுக்கும் காட்ஸ்வால் ஆடையணிகளை கட்டாயம் விரும்புவர். அநேகவித வர்ணமான கெட்டிச்சாய நிறங்களிலும், கோடுகளுடனும், செக் மோஸ்தரிலும் கிடைக்கும்.

> சலவைக் குறிப்புகள்: உலன் துணிமணிகளைப் போன்றே வெதுவெதுப்பான ஜலத்தில் சோப்புச் செதில்கள் அல்லது வாஷிங் சோப்பால் சலவை செய்யவும்

கரையோரத்தில் இப்பெயரை கவனியுங்கள்
Cotswol
—பிரபல ஆடுமார்க்கையுடன்!

தயாரிப்பவர்கள்:

தி பெங்களூர் மில்ஸ்

தி பெங்களூர் உலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி, லிமிடெட். பெங்களூர் ஸிடி.


ஏஜண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதார்கள்:
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்.

விற்பனைக்குத் தயார்!

புதிய

விக்டோரியா

IV - D மாடல்



★

IV-D மாடல் புரொஜக்டர்கள் 5000 அடி மாகஸின் கொண்டவை. ½ H. P. மோட்டார் ஹை இன்டென்ஸிடி ஆர்க், நூதன C/50 ஆம்ப்ளிபயர் 14 அங்குல ஸ்பீகர் உள்பட

இதர மாடல்கள் :

விக்டோரியா

VI-B, IV-B, IV-C

இந்தியா & பாகிஸ்தான் சோல் ஏஜண்டுகள் :—

Patel Brothers

BOMBAY.

★

தெற்கு பிரதேச விநியோகம்:

என். நாராயணன்,

180, அண்ணா பிள்ளை தெரு, சென்னை—1

ஜூபிடரின்

கன்னியின் காதலி

மகாகவி ஷேக்ஸ்பியரின்
12ம் இரவு கதையைத் தழுவியது

இப்பொழுது கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது


மதராஸ்	...	பாரகன்
மதராஸ்	...	லக்ஷ்மி
மதுரை	...	சிந்தாமணி
கோயமுத்தூர்	...	ராஜா
கோயமுத்தூர்	...	ஷண்முகா
திருச்சிராப்பள்ளி		வெல்லிங்டன்
சேலம்	...	பாலஸ்
திருநெல்வேலி	...	ராயல்
தஞ்சாவூர்	...	நியூ டவர்
கும்பகோணம்	...	டயமண்ட்
சிதம்பரம்	...	வடுகநாதன்
திருப்பாப்புலியூர்		நியூ சினிமா
வேலூர்	...	சாயிபாபா
காஞ்சிபுரம்	...	ராஜா
புதுச்சேரி	...	ரத்னா
நாகப்பட்டணம்..		பேபி
திருவாரூர்	...	பேபி
கரூர்	...	அம்பிகை
தூத்துக்குடி	...	காரனேஷன்
விருதுநகர்	...	நியூ முத்து
புதுக்கோட்டை..		பிரஹதாம்பாள்

11-8-49 முதல்

மாயவரம்	...	சுந்தரம்
விஜயவாடா	...	லக்ஷ்மி
ராஜமஹேந்திரம்		மினர்வா
நெல்லூர்	...	விநாயக்
குண்டூர்	...	நியூ ஸிடி
தெனாலி	...	ஸ்வராஜ்
காக்கிநாடா	..	சினிமா மெஜஸ்டிக்
விஜயநகரம்	...	பூர்ணா
பீமாவரம்	...	வெல்கம்
பெல்லாரி	...	பிரபாத்
எல்லூர்	..	கோபால கிருஷ்ணா
காரைக்குடி	...	நடராஜா

12-8-49 முதல்

பெங்களூர்	...	சுபர்
பெங்களூர்	...	ஸ்ரீ
பெங்களூர்	...	சென்ட்ரல்
பெங்களூர்	...	விஜயா




அதிர்ஷ்ட சக்கரத்தின் சுழற்சியிலே
நேற்று குபேரன் • இன்று குசேலன்
இன்று ஆண்டி • நாளை அரசன்
வாழ்வுப் பாதையின் வளைவு...
நெளிவுகளை வகுத்துக் காட்டும்
உன்னத சித்திரம்..........
முருகன் டாக்கீஸ்
ரத்னகுமார்
P.U.சின்னப்பா • P.பானுமதி • M.G.ராமச்சந்திரன்
K.மாலதி • D.பாலசுப்ரமண்யம் • K.P.கேசவன் • T.S.துரைராஜ்
K.மஹாதேவன் • N.S.கிருஷ்ணன் • T.A.மதுரம்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
MTP
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:- முருகன் டாக்கி பிலிம் கம்பெனி.,
மதுரை • பெங்களூர் சிடி • பெஜவாடா

கலாக்ஷேத்ர பிரசுரங்கள்

அடையாறு. சென்னை - 20

1	கீர்த்தனமாலை பாபநாசம் சிவன் இயற்றியது	ரூ.	4	0	0
2	ராகவிபோதம் (தமிழில் மொழிபெயர்த்தது)	ரூ.	2	8	0
3	ஸங்கீத ரத்னாகரம் (தமிழில் மொழிபெயர்த்தது)	அச்சில்			
4	COLLECTED POEMS *by Dr. J. H. Cousins*	Rs.	6	8	0
5	THE FAITH OF THE ARTISTS ,,	Rs.	3	12	0
6	HOUND OF ULADH ,,	Rs.	5	12	0
7	REFLECTION BEFORE SUNSET ,,	Rs.	3	0	0
8	TWENTYFOUR SONNETS ,,	Rs.	3	0	0
9	THE DISCOVERY OF THE CHILD-*Dr. Maria Montessori*	,,	16	8	0
10	EDUCATION FOR A NEW WORLD ,,	Rs.	4	12	0
11	TO EDUCATE THE HUMAN POTENTIAL ,,	Rs.	5	12	0
12	THE DARK WELL *by Harindranath Chattopadyaya*	Rs.	5	0	0
13	ANCIENT BALLADS AND LEGENDS OF HINDUSTAN	As.	0	12	0


மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலைய வெளியீடுகள்

1	பரதசேனாபதீயம் மூலமும் உரையும்	ரூ.	1	4	0
2	கும்பேசர் குறவஞ்சி நாடகம்	ரூ.	1	8	0
3	குற்றாலக் குறவஞ்சி	ரூ.	0	8	0
4	நவநீதப் பாட்டியல் — மூலமும், பழைய உரைகளும், குறிப்புரையும்	ரூ.	2	0	0
5	மூவருலா — பழையவுரை, குறிப்புரைகளுடன்	ரூ.	4	0	0
6	யாப்பருங்கலக் காரிகை மூலமும் உரையும்	ரூ.	4	0	0
7	தமிழ்ச் சுவடிகளின் நாமாவளி	ரூ.	0	6	0
8	கம்பராமாயணம் பாலகாண்டம்	ரூ.	6	0	0
9	கம்பராமாயணம் அயோத்யாகாண்டம்	அச்சில்			
10	சூளாமணி மூலமும் உரையும்	அச்சில்			

கிடைக்குமிடம்: கலாக்ஷேத்திரம், அடையாறு, சென்னை - 20


விரைவில் வெளிவருகிறது
ராயல்
சுதர்சன்
(தமிழ்)
நடிகர்கள்:
சின்னப்பா • கண்ணும்பா
யோகமங்களம் • சரோஜா
பாலையா • ரெங்காச்சாரி
பாண்டியன் • சாயிராம் முதலியோர்
டைரக்ஷன்: சுந்தர் ராவ் நட்கர்னி...ஸ்டுடியோ: சென்ட்ரல், கோவை
ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ்
மதுரை........ பெஜவாடா......... பெங்களூர்


கூடிய சீக்கிரமே
சென்னையிலும் மற்றும் அநேக
நகரங்களிலும் வெளிவருகிறது...
பாஸ்கர் பிக்சர்ஸ்
நாட்டிய ராணி
பி.எஸ்.ஸரோஜா • வசுந்தரா
ஜெயம்மா • ராஜாமணி •
பாலையா • தவமணி
சார்லி • லலிதா, பத்மினி நடித்தது
டைரக்ஷன்: பி.என்.ராவ்
ஸ்டுடியோ: ஜெமினி
பாட்டுகள்: டி.கே.பட்டம்மாள்



தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்

கல்கத்தா - பம்பாய் - மதராஸ் - டில்லி

கல்கி
சுதந்திர மலர்

பொருளடக்கம்

மலர் 9
இதழ் 2

ஆகஸ்டு 15

விரோதி ஆடி 30உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

கல்கி
சுதந்திர மலர்

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 2

என்ன சேதி?

இடைவிடாத யாத்திரை

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் சுதேச மன்னர்கள் இடைவிடாத வெளிநாட்டு யாத்திரையில் ஈடுபட்டிருந்தார்கள். சுதந்திரம் பெற்றபின் அவர்களுடைய யாத்திரை நின்று விட்டது. எனினும் அந்தக் கைங்கரியத்தை இப்போது வேறு சில கோஷ்டியினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பாரத நாடு சுதந்திரம் பெற்றபின் அரசியல், பொருளாதார, நிதி, தொழில் நிபுணர்கள் என்று ஏராளமானவர்கள் சர்க்கார் செலவில் செக்கோஸ்லவேகியா, ஸ்விட்ஜர்லாந்து போன்ற பல்வேறு நாடுகளுக்கும் யாத்திரை சென்று வருவது சர்வ சகஜமாகி விட்டது. அவர்கள் எதற்காகச் செல்கிறார்கள்? அவர்கள் அவ்வாறு செல்வதால் இந்தியாவுக்குப் பலன் உண்டா?—இவற்றை ஆராய்வோமாயின், அவர்களின் யாத்திரையால் நம் தேசத்துக்குத் தண்டச் செலவைத் தவிர வேறு எவ்வித உருவான பலனும் இல்லை என்று ஏற்படும். இந்திய சர்க்காரின் மந்திரிகள் போன்ற ஒரு சில முக்கியஸ்தர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அந்தந்த நாட்டின் சர்க்கார் தலைவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதைக் குறித்து யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். உதாரணமாக, டாக்டர் மத்தாய் சமீபத்தில் இங்கிலாந்து சென்று திரும்பி வந்தது மக்க உபயோகமான பிரயாணம் என்பதில் சந்தேகமில்லை.

வருகிற அக்டோபரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனின் அழைப்புக் கிணங்க பண்டித ஜவாஹர்லால் நேரு அமெரிக்காவுக்கு விஜயம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார். மகாத்மா காந்தி தங்களுடைய தேசத்துக்கு விஜயம் செய்து தங்களைக் கௌரவிக்க வேண்டும் என்றும், தங்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்றும் அமெரிக்கர்கள் பல ஆண்டுகளாக வேண்டிக் கொண்டார்கள். காந்தி மகாத்மாவும் அமெரிக்காவுக்குச் செல்ல விரும்பினார். எனினும், இந்தியாவில் நடந்து வந்த சுதந்திரப் போராட்டம் அந்த மகான் அமெரிக்கா செல்வதற்கு இடம் கொடுக்கவில்லை. எனவே, காந்திஜிக்கு அடுத்தபடியாக உலகத்தின் நன்மதிப்பைப் பெற்றுள்ள இந்தியாவின் இணையற்ற தலைவர் ஜவாஹர்லால்ஜியை அமெரிக்கர்களின் சார்பில் ஜனாதிபதி ட்ருமன் அழைத்திருப்பது முற்றிலும் பொருத்தமாகும். பண்டித ஜவாஹர்லால் நேரு அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதன் மூலம் இந்தியாவின் பெருமையையும் இந்தியத் தலைவரின் மகத்துவத்தையும் அமெரிக்கர்கள் நேர்முகமாக அறிந்து கொள்ள முடியும். அதன் பலனாக இரு நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படலாம். இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு அமெரிக்கா மிகுந்த உதவி அளிக்க முடியும். அதுபோலவே, ஆசியாவிலும் உலகத்திலும் அமைதியைப் பாதுகாக்கும் விஷயமாக அமெரிக்காவுக்கும் மற்ற நாடுகளுக்கும் இந்தியா பேருதவி புரிய முடியும்.

டாக்டர் முகமது ஹட்டா

இந்தோனேஷியாவின் பிரதம மந்திரி டாக்டர் முகமது ஹட்டா நெதர்லண்ட்சுக்குச் செல்லும் வழியில் புதுடில்லியிலே சில நாள் தங்கினார். ஜவாஹர்லால்ஜியுடன் அளவளாவிப் பேசி

னார். இந்தோனேஷ்யாவின் மீது டச்சு சர்க்கார் தொடுத்த அக்கிரமமான போரைக் கண்டித்து இந்தியா புரிந்த உதவிக்காக நன்றி செலுத்தினார்.

டாக்டர் ஹட்டா இந்தியாவுக்கு விஜயம் செய்ததன் பலனாக இந்தியாவுக்கும் இந்தோனேஷ்யாவுக்கும் உள்ள நல்லுறவு இன்னும் அதிக உறுதி பெற்றிருக்கிறது. இதுபோல் சர்க்காரின் தலைவர்கள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்வதால் அந்தந்த நாடுகளிடையே பரஸ்பரம் நட்பும் ஒத்துழைப்பும் அதிகமாகும். மற்றவர்கள் வெளிநாடு செல்வது வெறும் ஆடம்பரமும் வீண் செலவுமேயாகும்.


சென்ற வாரம் புதுடில்லியில் நடந்த தேசிய பாஷை மகாநாடு அத்தகைய ஆடம்பரங்களில் ஒன்று. இந்தியாவின் தேசிய பாஷை எதுவாக இருக்க வேண்டும் என்பது ஏற்கெனவே முடிவான விஷயம். ஹிந்தியே இந்தியாவின் தேசிய பாஷையாக இருக்க வேண்டும் என்று காந்தி மகான் நிர்ணயித்ததை நம் தேசம் வெகு காலத்துக்கு முன்பே ஒப்புக் கொண்டு விட்டது. அப்படியிருக்க, தீர்ந்துபோன அவ்விஷயத்தை மீண்டும் முடிவு செய்வதற்காக டில்லியில் பாஷா நிபுணர்கள் கூடியதும், அவர்கள் நாள் கணக்கில் விவாதித்து ஹிந்தியே தேசிய பாஷையாக இருக்க வேண்டும் என்று ஏகமனதாக முடிவு செய்ததும் வேடிக்கையாக இல்லையா? இத்தகைய அநாவசிய ஆடம்பர மகாநாடுகளிலும் எடுத்ததற்கெல்லாம் நம் நிபுணர்கள் ஐரோப்பா யாத்திரை போவதிலும் பொது மக்களின் பணம் வீணாக்கப்படுவதை நிறுத்த வேண்டும்.

கவிராயர் திருநாள்

தமிழ் நாட்டுப் பெரியோர்களையும் தமிழுக்குப் பணி செய்தவர்களையும் பாராட்டுவதென்பது சில காலமாகத் தமிழ் நாட்டில் பரவித் தழைத்து வருகிறது. சென்ற மாதத்தில் மாயவரத்தில் தமிழ் சாஹித்ய கர்த்தர்களில் தலைசிறந்த ஒருவரான ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை அவர்களின் திருநாளைக் கொண்டாடினார்கள். ஸ்ரீ ஜோஸப், ஸ்ரீ சரவணபவானந்தர் ஆகிய தமிழன்பர்கள் மூன்று தினம் ரோச் விக்டோரியாவின் தலைமையில் அந்தத் திருவிழாவை நடத்தினார்கள். சென்ற வாரத்தில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் இராமாயண நாடகக் கீர்த்தனைகளைப் பாடிய ஸ்ரீ அருணாசலக் கவிராயரின் திருநாள் தினம் எம். பக்தவத்ஸலத்தின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ அருணாசலக் கவிராயர் தமிழ் நாட்டில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அதாவது சங்கீத திரிமூர்த்திகளாகிய ஸ்ரீ தியாகராஜர் - தீக்ஷிதர்-சாமா சாஸ்திரிகளுக்குப் பல வருஷம் முற்பட்டவர். அந்த நாளிலேயே கர்நாடக சங்கீதம் தமிழ்நாட்டில் தழைத்தோங்கியிருந்ததென்பதற்கு இராமாயணக்கீர்த்தனைகள் சான்று கூறுகின்றன. நாடகம் என்ற பெயர் பெற்றிருந்தாலும் கீர்த்தனைகள் பல்லவி, அநுபல்லவி, சரணங்களுடன் சுத்தமான கர்நாடக ராகங்களில் கச்சிதமான தாளங்களில் அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நாயன்மார்கள்-ஆழ்வார்கள் காலத்திலேயே பிரபலமடைந்த இசைக் கலைதான் வாழையடி வாழையாகத் தழைத்து வளர்ந்து தற்கால கர்நாடக சங்கீதத்தின் உருவம் பெற்றது என்பதற்கு ஸ்ரீ அருணாசலக் கவிராயரின் கீர்த்தனங்கள் தக்க சான்றாகும். இராமாயணக் கீர்த்தனைகளில் உள்ள பக்தி ரஸத்தையும் தமிழ்ச் சுவையையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தஞ்சாவூர் துளஜாஜி மகாராஜாவின் வீரர்கள் சோர்வுற்றிருந்த காலத்தில் அருணாசலக் கவிராயர் அனுமனுடைய வீர தீர பராக்கிரமங்களைப் பற்றிய 'பாய்ந்தானே அனுமன்!' என்னும் கீர்த்தனத்தைப் பாடி அந்த வீரர்களுக்குத் தைரியம் ஊட்டியதையும் அதன் பலனாக அவர்கள் போர்க்களத்தில் வெற்றி கண்டதையும் பற்றி சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் "கல்கி" 1944-ம் ஆண்டு தீபாவளி மலரில் எழுதியிருக்கிறார்கள். அத்தகைய சக்தி வாய்ந்த பக்தியுடைய இசைப்புலவர் அவர்களின் திருநாளைச் சென்னைத் தமிழிசைச் சங்கத்தார் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம். அருணாசலக் கவிராயர் சீர்காழி தாலுகா தில்லையாடி என்னும் கிராமத்தில் பிறந்தவர். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சாது சங்கரானந்தர் அவர்கள் இந்த விழாக் கொண்டாட்டத்திற்கு முக்கிய தூண்டுகோலா யிருந்தார்கள். அவர்களுக்கும் அன்று பல அபூர்வமான இராம நாடகக் கீர்த்தனங்களைச் சிறந்த வர்ண மெட்டுக்களில் பாடிக் கச்சேரி செய்த சங்கீத வித்வான் மாயவரம் வி. வி. கிருஷ்ணய்யர் அவர்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறோம்.



சுதந்திரத் திருநாளில்......



புது டில்லி கொண்டாட்டங்கள்!



உயிரினும் சிறந்ததன்றே?

வாரணத்தை அலங்கரித்து அதன் மேல் தங்க ரதமும் தங்கக் குடையும் அமைத்திருக்கிறார்கள். பூரண பொற்குடம் ரதத்திற்குள்ளே பொலிந்து விளங்குகிறது. வீதிகள் எங்கும் விதவிதமான தோரணங்கள் கண்ணைப் பறிக்கின்றன. காரணமின்றி மக்கள் கண்ணீர் விடுகிறார்கள்; காரணத்துடனே "ஜே ஹிந்த்!" முழக்கம் செய்கிறார்கள்; "சுதந்திர தேவி வாழ்க!" என்று கோஷிக்கிறார்கள். அசோக சக்கரம் தாங்கிய மூவர்ணக் கொடிகள் வானளாவிப் பறக்கின்றன. ஆகாச வெளியில் பறக்கும் வான விமானங்கள் பூமாரி பொழிகின்றன. எழுநிலை மாடங்களின் அழகிய முகப்புகளிலே தேவரையும் தேவியரையும் ஒத்த காளையரும் கன்னியரும் நின்று மங்கல அட்சதைகளையும் மலர்களையும் அள்ளிச் சொரிகிறார்கள்.

எங்கெங்கும் கொண்டாட்டம்; எங்கெங்கும் குதூகலம். மக்கள் தம்மை மறந்து ஆடுகிறார்கள்; ஓடுகிறார்கள்; ஆனந்த கீதங்களைப் பாடுகிறார்கள்.

வருஷம் இரண்டாயிரத்துத் தொன்னாயிரத்து நாற்பத் தொன்பது; மாதம் ஆகஸ்டு மீ; தேதி 15உ. அதாவது இன்றைக்குச் சரியாக ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு பாரத நாட்டில் நடக்கப் போகும் கொண்டாட்டத்தை மேலேயுள்ள சொற் சித்திரத்தினால் வர்ணிக்க முயன்றோம். நமது சித்திரக்காரர் அட்டைப் படத்தில் அதே கருத்தை ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்.

அலங்கரித்த யானையின்மீது தங்க ரதத்தில் தங்கக் குடையின் கீழ் வைத்துள்ள பூரண பொற்குடம் பாரதநாட்டின் பூரண சுதந்திரத்திற்கு அறிகுறியாகத் திகழ்கின்றது.

எனவே, திருவிழா என்ன திருவிழா என்பதையும், கொண்டாட்டங்கள் எல்லாம் எதற்காக நடக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

• • •

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் பாரத நாட்டில் நம்முடைய சந்ததிகள் இந்தப் புண்ணிய பூமி சுதந்திரம் பெற்ற வைபவத்தை ஆனந்த குதூகலத்துடன் கொண்டாடப் போகிறார்கள்; அதில் சந்தேகமேயில்லை.

அந்தத் திருநாளை, பெருநாளை, புண்ணிய நாளை, ஸுதினத்தை, சுப தினத்தை, சுதந்திர தினத்தை இன்றைக்கு நாமும் கொண்டாடுகிறோம்.

பல காரணங்களினால் இந்தக் கொண்டாட்டத்தில் நமக்கு இன்றைக்கு அவ்வளவு குதூகலம் இல்லாமலிருக்கலாம். அன்ன விசாரமும் ஆடை விசாரமும், உத்தியோக விசாரமும் உத்தியோகமில்லா விசாரமும், வீட்டு விசாரமும் வீடில்லாத விசாரமும், இன்றையச் சுதந்திரக் கொண்டாட்டத்தில் நமக்கு அவ்வளவு உற்சாகம் இல்லாமல் செய்துவிடக் கூடும். ஆனால் அவ்விதம் மனச்சோர்வுக்கு நாம் இடங்கொடுத்து விடுவது மிகத் தவறாகும்.

நூறு வருஷம், ஐந்நூறு வருஷம், ஆயிரம் வருஷத்துக்குப் பின்னால் சென்று நின்று இன்றைக்குப் பாரத நாடு பெற்றுள்ள சுதந்திரம் எத்தகைய பெரும் பாக்கியம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அல்லது ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலே சென்று இந்தியா தேசத்தின் சரித்திர நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்து இன்று நாம் அடைந்திருக்கும் பூரண சுதந்திரம் எவ்வளவு மகத்தான முக்கியம் பொருந்தியது என்பதை உணர்ந்து அறிய வேண்டும். அப்போதுதான் நம்முடைய காலத்தில் நாம் அடைந்துள்ள அதிர்ஷ்டத்தின் மகத்துவத்தை நன்றாகக் கண்டவர்களாவோம்.

• • •

அங்க வங்க கலிங்க காஷ்மீர கோசல பஞ்சாப குஜராத மராட்ட முதலான ஐம்பத்தாறு ராஜ்யங்கள் நம் பாரத நாட்டில் நிலைபெற்று நெடுங்காலம் நடந்து வந்ததாக நம்முடைய இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இப்படிப் பல ராஜ்யங்களாகப் பிரிந்திருந்த போதிலும் பாரத தேசம் ஒன்று; பாரத சமுதாயம் என்பது ஒன்று; பாரதத்தின் ஆத்மா ஒன்று; — என்பதாக அனைவரும் ஒப்புக் கொண்டிருந்தார்கள்.

ஐம்பத்தாறு ராஜ்யங்கள் சில சமயம் ஐந்நூற்றறுபது ராஜ்யங்களாகியிருந்தன. ஐந்நூற்றறுபது ராஜ்யங்களின் ராஜாக்களும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்

தார்கள். ஆயினும் அவர்கள் இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்த அரசர்கள்; தங்களுடைய குடிகளின் நன்மையே தங்களுடைய மேன்மை என்று கருதினார்கள். அவர்கள் தங்களுக்குள் போர் செய்த காலத்திலும் தங்கள் குடிகளுக்குத் துன்பம் ஏற்படாதபடி தர்ம யுத்தம் செய்தார்கள்.

சிற்சில சமயம் ஒரு ராஜ்யத்தின் அரசன் திக்விஜயம் செய்யப் புறப்பட்டுப் பல மன்னர்களை வென்று திரும்பி வந்து அசுவமேத யாகம் செய்தான். அத்தகைய அரசனைப் பேரரசன் என்றும் சக்கரவர்த்தி என்றும் மற்ற ராஜாக்கள் ஒப்புக் கொண்டார்கள். அந்த ராஜாக்கள் செலுத்திய காணிக்கையைக் கொண்டு அசுவமேதயாகம் செய்த சக்கரவர்த்தி நாட்டின் பிரஜைகளுக்குப் பல தான தர்மங்களைச் செய்து அவர்களை மகிழ்வித்தான்.

பழைய காலத்துப் பேரரசர்களுக்குள்ளே பரத சக்கரவர்த்தி தலைசிறந்து விளங்கினார். இமயமலையிலிருந்து கன்னியாகுமரிவரையில் அவர் இந்தப் புண்ணிய பூமியை ஒரு குடை நிழலில் ஆண்டார். அதன் காரணமாக இந்த நாடு 'பரத கண்டம்' என்றும் 'பாரத வர்ஷம்' என்றும் பெயர் பெற்றது. பரத சக்கரவர்த்தி எந்த நாளில் ஆண்டார் என்றும், எவ்வளவு நிலப் பரப்பை ஆண்டார் என்றும், அவருக்குப் பிறகு அவருடைய சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்றும் நமக்கு நிச்சயமாய்த் தெரியாது. ஆயினும் பாரத நாடு இந்த நாட்டு அரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தது என்று சொல்லலாம்.

இதிகாச புராண காலம் போய்ச் சரித்திர காலம் வந்தது. அதாவது பிரிட்டிஷார் இந்தியா தேசத்துக்கு வந்த பிறகு எழுதிவைத்த சரித்திரம். அந்தச் சரித்திரத்தை நாம் பள்ளிக்கூடங்களில் படித்தோம்; பரீட்சையில் எழுதி மார்க்கு வாங்கித் தேறுவதற்காக வெகு கவனமாகப் படித்தோம். பலர் போட்டை நெட்டுருச்செய்தார்கள். தேதிகளை உருத் தள்ளினார்கள்.

இப்படிச் சென்ற நாலு தலைமுறைகளில் நாம் படித்த இந்தியாவின் சரித்திரப் புத்தகங்கள் எல்லாம் அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படை எடுத்து வந்த சம்பவத்துடன் ஆரம்பமாயின. பிறகு ஒவ்வொரு சாதியாராகவும் ஒவ்வொரு கொள்ளைக்கார மன்னனாகவும் இந்தியாவின்மீது யார் யார் படை எடுத்து வந்தார்கள் என்பதைப் பற்றிய வரலாறுகளாகவே நாம் படித்த இந்திய சரித்திரப் பாட புத்தகங்கள் அமைந்திருப்பது வழக்கம். ஹூணர்கள் வந்தார்கள்; மிலேச்சர்கள் வந்தார்கள்; பாஹ்லவர்கள் வந்தார்கள்; இன்னும் யார் யாரோ இந்திய நாட்டின் மீது படை எடுத்து வந்த வண்ணமாயிருந்தார்கள்.

இடையிடையே சந்திர குப்தன், அசோகன், விக்ரமாதித்யன், ஹர்ஷன் முதலிய சுதேசப் பேரரசர்கள் சிற்சில சமயம் இந்தியாவை ஆண்டதும் உண்டு என்று பிரிட்டிஷார் எழுதி வைத்த சரித்திரம் கூறுகிறது!

சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் கஜினி முகம்மதுவும் கோரி முகம்மதுவும் பாரத நாட்டின் மீது படை எடுத்து வந்த பிறகு இந்தியா தேசம் அடியோடு சுயாதீனத்தை இழந்து விட்டது என்று சொல்ல வேண்டும். பட்டாணியர் — மொகலாயர்களிடமிருந்து நேரே ஆங்கில சாதியார் இந்தியாவை ஆளும் பட்டயத்தை வாங்கிக் கொண்டார்கள். இடை நடுவில் மகாராஷ்டிர மகாவீரர் சிவாஜியின் காலத்தில் பாரத தேசத்தில் சுதந்திர சூரியன் உதயமாகும் போலத் தோன்றியது. ஆனால் அது ஏமாற்றமாகி விரைவிலேயே மீண்டும் காரிருள் வந்து மூடிக்கொண்டது.

* * * *

பல நூறு வருஷங்களாகப் பாரத தேசம் காணாத காட்சியை இன்று காண்கிறோம். வெள்ளிப் பனி மலையின் உச்சியிலிருந்து நீலத் திரைக் கடல் ஓரத்திலுள்ள குமரிமுனை வரையில் பாரத நாடு ஒரே தேசமாகவும் ஒரே ராஜ்யமாகவும் விளங்குவதை இன்று நாம் கண்டு களிக்கிறோம்.



இந்த விஸ்தாரமான நிலப் பகுதியில் முப்பத்தைந்து கோடி ஜனங்கள் ஒரு குடை நிழலில் ஒரே அரசாங்கத்தின் கீழ் இன்று வாழ்கிறார்கள்.

அலெக்ஸாண்டர் காலத்தில் ஆரம்பமான அடிமை

வாழ்விலிருந்து பரிபூரணமாக விடுதலை அடைந்து இன்று பாரத மக்கள் பூரண சுதந்திர மக்களாக வாழ்கிறார்கள்.

தாங்களே தேர்ந்தெடுத்த தலைவர்களுடைய ஆட்சியின் கீழ் இந்திய மக்கள் தன்னரசு நடத்துகிறார்கள்.

அடிமைத்தனத்தில் இரண்டு வகை உண்டு. அன்னிய நாட்டாரின் கீழ் அடிமைப் பட்டிருப்பது ஒருவிதம்; சொந்த நாட்டு மன்னர்களின் சர்வாதிகார ஆட்சியில் அடிமைப் பட்டிருப்பது இன்னொரு விதம்.

அன்னியரின் அடிமைத் தனத்திலிருந்தும் யதேச்சாதிகார ஆட்சியிலிருந்தும் ஒரே சமயத்தில் விடுதலை யடையும் பாக்கியத்தை நாம் நம் நாளில் பெற்றோம்.

"நாம் எல்லாரும் இந் நாட்டு மன்னர்" என்னும் மகா கவியின் வாக்கு நம்முடைய காலத்திலேயே உண்மையானதைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றோம்.

இந்த ஒப்பற்ற மாபெரும் பாக்கியம் நமக்கு எப்படிக் கிடைத்தது? யாருடைய தபோபலத்தினால் கிடைத்தது? யாருடைய ஆத்ம சக்தியினால் கிடைத்தது?—சொல்லவும் வேண்டுமோ?

அந்த மகா புருஷர் மகாத்மா காந்தி இன்று விண்ணுலகில் இருக்கிறார். விண்ணுலகில் இருந்த வண்ணம் நாம் பாரத சுதந்திரத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சுதந்திர விழாவை நாம் எந்தவிதத்தில் கொண்டாடுகிறோம் என்று கவனிக்கிறார். நாம் பெற்ற பாக்கியம் எத்தகையது என்பதை நாம் நன்குணர்ந்திருக்கிறோமா என்று கவனிக்கிறார். அந்தச் சுதந்திர பாக்கியத்தை நாம் நீடித்துக் காப்பாற்றிக் கொள்வோமா என்றும் சிந்திக்கிறார்.

எந்தையே! சுதந்திரத் தந்தையே! தங்களுடைய ஆசியைக் கோருகிறோம். தங்களுடைய ஆத்மசக்தியால் நாங்கள் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமையையும் தங்களுடைய அருளினாலேதான் நாங்கள்



பெற வேண்டும். அதற்குரிய கடமைகளைச் செய்யும் ஊக்கத்தையும் பலத்தையும் தாங்கள்தான் எங்களுக்கு அனுக்ரகம் செய்ய வேண்டும்.

* * *

பாரத சாம்ராஜ்யத்தின் தலை நகரில், சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் தவமுனிவரைப் போல் வீற்றிருக்கும் நம்முடைய அருமைத் தலைவர், காந்தி மகாத்மாவின் அன்புக்கும் அந்தரங்க நம்பிக்கைக்கும் உரியவராயிருந்த துணைவர், கவர்னர்-ஜெனரல் ராஜாஜி இந்த இரண்டாவது சுதந்திரத் திருநாளில் நம்முடைய கடமை என்ன என்பதை நினைவூட்டியிருக்கிறார்.

ராஜாஜி சுதந்திர விழாவை முன்னிட்டு வெளியிட்ட திருமுகம் தினப் பத்திரிகைகளில் வெளியாகியிருப்பதை நேயர்கள் பார்க்கலாம்.

உலகம் காணாத அதிசய முறையில் நாம் பெற்றுவிட்ட சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள என்னென்ன செய்யவேண்டும் என்பதை ராஜாஜி சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தற்சமயம் நம்முடைய முதற் பெருங் கடமை, எல்லாவற்றிலும் முக்கியமான கடமை, நாட்டின் உணவுப் பொருள் வளம் சம்பந்தமானது.

அந்தக் கடமையை வேதகாலத்து முனிவர்கள் என்றும் நிரந்தரமான ஜீவிய தர்மமாகவே நமக்கு உபதேசித்திருக்கிறார்கள். அந்த உபநிஷத வாக்கியங்கள் பின்வருமாறு:—

அன்னம் ப்ரஹ்மேதி வ்யஜானத்!
அன்னமே பிரம்மம்; இது உறுதி!

அன்னம் ந நிந்த்யாத் தத்விரதம்
அன்னத்தை நிந்திக்க வேண்டாம்;
அதுவே விரதம்.

அன்னம் ந பரிசக்ஷீத தத்விரதம்
அன்னத்தை வீண் செய்ய வேண்டாம்;
அதுவே விரதம்.

அன்னம் பஹு குர்வீத தத்விரதம்
உணவை நிரம்பப் பெருக்கவும்;
அதுவே விரத மாகும்.

நகஞ்ரள வஸநேவ ப்ரத்
யாக்ஷித நத்விரதம்

பசித்தவனுக்கு உண வில்லை என வேண்டாம்; அதுவே விரதம்.

வேத முனிவர்களின் வாக்கு இன்றைய தினமும் நமக்குச் சிறந்த உபதேசமாகிறது என்பதை ராஜாஜி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பாரத நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இன்று நம்முடைய முதன்மையான கடமை உணவு சம்பந்தமானதுதான். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது தமிழ் முதுமொழி. 'மானங் குலங் கல்வி வண்மை அறிவுடைமை' எல்லாம் பசியினால் பறந்து போகும்போது, சுதந்திரம் மட்டும் மிச்சம் இருக்குமா? அதுவுந்தான் போய் விடும்.

ஆகையால், (1) உணவுப்பொருளைப் பெருக்க வேண்டும்; (2) உணவை வீணாக்கக் கூடாது; (3) கிடைத்த உணவை அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

இந்த மூன்று தேசியக் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு நம்முடைய பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு முதலிய மாபெருந் தலைவர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் முயன்று வருகிறார்கள். அவர்களுடன் நாம் பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் தனித் தனியே நம்மால் இயன்ற அளவு அந்தக் கடமைகளை நிறைவேற்ற உறுதி கொள்ள வேண்டும்.

*   *   *

*சு*தந்திரத்தைப் பாதுகாக்க நமது இரண்டாவது கடமை என்ன என்பதையும் ராஜாஜி நமது ஸ்ரீமுகத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய சொந்த வீட்டில் பேய் குடி புகுந்திருக்கிறது என்னும் பேய் வதந்தியை நாமே கட்டிவிடக் கூடாது; அதை நாமே பிரசாரப் படுத்தவும் கூடாது.

நமது வீடு ஆயிரம் வருஷம் அன்னியரின் ஆதிக்யத்தில் இருந்தது.



நம் கைக்கு வந்து இரண்டு வருஷந்தான் ஆயிற்று. அன்னியர்கள் இந்த வீட்டை நன்றாகச் சுத்தம் செய்து பழுது பார்த்து வைத்துக் கொள்ளவில்லை. ஆங்காங்கே வீட்டில் பொக்கை, பொறை இருக்கிறது; குப்பை கூளம் இருக்கிறது. பொக்கை பொறைகளை அடைக்கவும் குப்பை கூளங்களைச் சுத்தம் செய்யவும் நம்முடைய தலைவர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். சுவர் இடுக்குகளில் குடிபுகுந்திருக்கும் மூட்டைப் பூச்சிகளை மருந்து அடித்து ஒழிக்கவும் பிரயத்தனப் பட்டு வருகிறார்கள். அவர்களுடைய முயற்சிகளுக்கு நம்மாலான உதவி செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு, கடுகை மலையாக்கித் துரும்பைத் தூணாக்கி ஹா ஹா ஹூ ஹூ என்று கூச்சலிடுவதில் என்ன பயன்? நம்முடைய வீட்டில் பேய் உலாவுகிறதென்று நாமே வதந்தியைக் கிளப்பினோமானால் வீட்டுக்கு நல்ல வாடகையும் வராது; விலையும் கிடைக்காது. நாம் உற்பத்தி செய்த பேய்க்கு நாமே இரையாகிவிடுவோம்.

ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து விடுங்கள்; தட்டிகளையும் திரைகளையும் ஆக்கிக் கட்டுங்கள். காற்றும் வெளிச்சமும் நன்றாய் உள்ளே வரச் செய்யுங்கள். பேயும் பிராந்தியும் பறந்து போய்விடும்!

நம்மை நாமே குறைத்துக்கொள்ள வேண்டாம். நம்முடைய சொந்தச் சுயாட்சியை நாமே நிந்திக்க வேண்டாம். துவேஷம் வேண்டாம்; பரஸ்பர அவநம்பிக்கை வேண்டாம்.

நமக்குள் ஒருவருக்கொருவர் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம். நம்மிடம் உள்ள நற்குணங்களையும் நல்ல அம்சங்களையும் எண்ணிப் பார்ப்போம். அப்போது உலகத்தாரும் நம்மை நம்புவார்கள். நாடு செழிக்கும்; நன்மைகள் பெருகும்; செல்வங்கள் கொழிக்கும்.

இல்லி நம் ராஜாஜி சொல்லுவதினால் அரசாங்க நடவடிக்கைகளைப் பற்றி நாம் குற்றமே கூறக் கூடாது என்பதல்ல; எது எப்படி நடந்தாலும்

கப்சிப் என்று வாய்மூடி மௌனிகளா யிருக்கவேண்டும் என்பது அல்ல.

"தற்சமயம் சர்க்காரை நடத்துவோர் தங்களுடன் மாறுபட்ட அபிப்பிராயங்களை வரவேற்கிறார்கள்; அவற்றை அடக்கிவிட விரும்பவில்லை" என்றும் ராஜாஜி தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

மாறுபட்ட அபிப்பிராயங்களைச் சொல்லும் உரிமைதான் ஜனநாயகத்தின் அடிப்படை. சர்க்கார் நடவடிக்கையில் குற்றம் கண்டு பிடிக்கவும் எடுத்துச் சொல்லவும் நமக்குச் சகல உரிமைகளும் உண்டு. எதிர்க் கட்சி அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதை நம்முடைய காங்கிரஸ் சர்க்கார் ஒரு நாளும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

ஆனால் நம்முடைய சொந்த சர்க்காரை எதிர்ப்பதற்காகப் பலாத்கார முறைகளைக் கையாள நினைக்கக் கூடாது. நாட்டில் கலகமும் குழப்பமும் உண்டு பண்ணும்படியான எந்தக் காரியத்திலும் தலையிடக் கூடாது.

பிறந்து இரண்டு வயதேயான சுதந்திரக் குழந்தையைப் பலாத்காரமும் குழப்பமும் கொன்றுவிடும்.

சர்க்காருக்கு ஏற்படும் எதிர்ப்பானது நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணும் ஆசையிலிருந்து முளைத்த எதிர்ப்பாயிருக்கக் கூடாது.

எதிர்ப்பு இயற்கையான எதிர்ப்பாயிருக்க வேண்டும்; செயற்கை எதிர்ப்பாயிருக்கக் கூடாது.

சர்க்காருடைய திட்டங்களில் குறை கூறி, அத் திட்டங்களைக் காட்டிலும் நல்ல திட்டங்களைத் தயாரித்து வற்புறுத்துவதும் கிளர்ச்சி செய்வதும் இயற்கை எதிர்ப்பா யிருக்கும்.

எது எப்படியானாலும் இந்த சர்க்காரைக் கவிழ்த்து விடவேண்டும் என்னும் நோக்கத்துடன் கிளப்பும் எதிர்ப்பு செயற்கை எதிர்ப்பாகும். இப்போது மந்திரிகளா யிருப்பவர்களைத் தள்ளிவிட்டுத் தாங்கள் வந்து விடவேண்டும் என்னும் நோக்கத்துடன் எதிர்ப்பது செயற்கை எதிர்ப்பாகும்.

"இத்தகைய செயற்கை எதிர்ப்பில் தலையிடவேண்டாம்; அது நாட்டைப் படுகுழியில் தள்ளிவிடும்" என்று ராஜாஜி எச்சரித்திருக்கிறார். அந்தத் தலைசிறந்த அறிவாளியின் எச்சரிக்கைக்குச் செவி கொடுப்பது நம்முடைய தலையாய கடமையாகும்.

ராஜாஜியின் பேச்சுக்குச் செவி கொடாததால் ஏற்கெனவே நாம் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறோம். இனியும் அத்தகைய தவறை நாம் ஏன் செய்ய வேண்டும்?

• • •

இந்த உலகில் மனிதன் மிக மிக மேலான பாக்கியமாகக் கருதக் கூடியது எது?

அவனுடைய உயிர்தான்!

ஆனால் உயிரையும் கொடுத்து நிலை நிறுத்த வேண்டிய செல்வம் எது?

தாய்நாட்டின் சுதந்திரந்தான்!

உலகத்தின் சரித்திரத்தை எண்ணிப் பாருங்கள். பிறந்த நாட்டின் சுதந்திரத்துக்காக எத்தனை எத்தனை தேச பக்தர்கள் தங்கள் சகல சுகங்களையும் சகல செல்வங்களையும் தியாகம் செய்திருக்கிறார்கள்? எத்தனை எத்தனை வீர புருஷர்கள் வாழ்நாளெல்லாம் சிறைச்சாலைகளில் தவம் கிடந்திருக்கிறார்கள்? எத்தனை எத்தனை தியாக மூர்த்திகள் தாய் நாட்டின் சுதந்திரத்துக்காகத் தங்கள் இன்னுயிரையும் ஈந்திருக்கிறார்கள்?

மனிதர்களாய்ப் பிறந்தவர்களுக்குத் தங்கள் உயிரைக் காட்டிலும் சிறந்த பொருள் சுதந்திரம் ஒன்றுதான்!

தன் உயிருக்காக வேண்டி மற்ற எதையும் தியாகம் செய்யலாம்.

அந்த உயிரையும் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்யவேண்டும்.

சுதந்திர ஆர்வமில்லாதவர்களை மனிதர்கள் என்றே சொல்ல முடியாது. கட்டு வைக்கோலுக்காகவும் தொட்டிப் பிண்ணாக்குக்காகவும் கழுத்தைத் தொழுவத்துக்குக் கொடுக்கும் விலங்குகள் என்றே சுதந்திர தாகம் இல்லாதவர்களைச் சொல்ல வேண்டும்.

"மன்னின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?"

என்று மகா கவி பாரதியார் பாடினார். அவருடைய திருவாக்கை இந்தச் சுதந்திர புண்ணிய தினத்தில் நம் மனதில் பதிய வைத்துக் கொள்வோம். நாம் அடைந்திருக்கிற சுதந்திர பாக்கியம் எத்தகைய பெரும் பாக்கியம் என்பதை உணர்வோம். அதைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எவ்வளவு கஷ்டப்படுவதற்கும் எவ்வளவு தியாகங்களைச் செய்வதற்கும் சித்தமாவோம்.

ஒரு நந்தவனக்



தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்த கதை எல்லோருக்குமே தெரியும். விஷமும் அமுதமும் இரண்டும் ஒன்றி லிருந்தே உண்டாகும். இரண்டும் ஒரே பொருள்; அணு அமைப்பில் மட்டுமே வித்தியாசம். அன்பும் துவேஷமும் ஒரு நொடியில் உருமாறி ஒன்று மற்றொன்றாகும். அடுப்புக் கரியும் மோதிரத்தில் பதிய வைத்துப் பிரகாசிக்கும் வைரக்கல்லும் ஒரே பொருள். அணுவமைப்பிலேதான் வித்தியாசம். ரசாயன பண்டிதர்கள் இதை அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்கள். காந்தம் ஏறிய இரும்பு ஒன்றை இழுக்கும்; அடுத்த நொடியில் அதே வேகத்துடன் தூரத் தள்ளும்படியும் செய்யலாம். விருப்பும் வெறுப்பும், அன்பும் துவேஷமும் உள்ளத்தில் பாய்வது இதைப் போலவேதான். காந்த அலையோட்டத்தைப் போலவே மனோ வேகங்களும். தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்து விலை கடந்த பொருள்களை எடுத்ததுபோல் முனிவர்கள் ஞானக் கடலைக் கடைந்து அற்புதமான உண்மைகளை எடுத்துத் தந்திருக்கிறார்கள். அந்த உண்மைத் தத்துவங்களை உயிரைக் கொல்லும் பொய்யாக நாம் செய்துகொள்ளலாம்.

• • •

பள்ளிகொண்டான் கோயிலுக்குத் தினமும் துளசியும் பூவும் சமர்ப்பித்து வைணவ பக்தர்களுக்கு உதவும்படி ஸ்ரீ வடமலைப் பிள்ளையின் மூதாதையர் இரண்டு ஏக்கரா தோட்ட பூமியை ஒதுக்கி வைத்தார்கள். ஏராளமான மிகுதி சொத்தை அவர்கள் சந்ததியார் சில நாட்கள் வரையில் அனுபவித்து வந்தார்கள். பிறகு கடன் சுமை வர வர அதிகரித்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சொத்தெல்லாம் கரைந்து போயிற்று. கடைசியாக சந்நிதித் தெருவிலிருந்த பெரிய வீடுங்கூடக் கோர்ட்டு ஏலத்தில் போய்விட்டது. நந்தவனம் ஒன்றுதான் மிஞ்சி நின்றது. ஆனால் அதிலிருந்து வருமானம் ஒன்றும் கிடையாது. வடமலைப் பிள்ளை சிறு வயதிலிருந்து ஒரு வியாபாரியிடம் வேலைக்கு அமர்ந்து தம் ஏழ்மை வாழ்க்கையை நடத்தி வந்தார். நந்தவனத்தைப் பெரியவர்கள் விரும்பிய வண்ணம் மேற் பார்த்துத் துளசியும் பூவும் கிரமமாகக் கோவிலுக்குக் கொடுத்து வந்தார்.

• • •

“கோயிலாம்! பூசையாம்! கல்லுச் சாமியாம்! இதெல்லாம் யாருக்கு வேண்டும்?” என்று முழுங்காற் சட்டையும் பகுத்தறிவு முழக்கமுமாக ஒரு பெரும் கூட்டத்தார் நந்தவனத்தில் புகுந்து பூச்செடிகளைப் பிடுங்கி எறிந்து துவம்சமாக்கினார்கள்.

“ஐயோ! இந்த அநியாயத்தைக் கேட்பார் யாருமில்லையா?” என்று வடமலைப் பிள்ளையின் தாயார் கூக்குரலிட்டதை யாரும் கேட்கவில்லை.

கதை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



"இவ்வளவு நிலத்தில் சோளம் விதைத்தால் பத்துக் குடும்பங்கள் நின்று பிழைக்கலாம். பூவும் துளசியும் என்னத்துக்கு உதவும்?" என்று தேசாபிமானிகளும் ஊராரும் சேர்ந்து தீர்மானித்து நந்தவனத்தை உழுது சோளம் விதைத்து விட்டார்கள்.

"ஜே ஹிந்த்!" என்று எல்லாரும் பெரிய கோஷமிட்டுக் குதூகலப் பட்டார்கள்.

* * *

மழையும் பெய்து அடங்கிற்று. வடமலைப் பிள்ளைத் தோட்டத்தில் சோளப் பயிர் தளதள வென்று பச்சையாக வளர்ந்தது. "பார்த்தாயா!" என்றார்கள் தேசாபிமானிகள். தோட்டத்தை உழுது பயிரிட்டவர்கள் அப்போது பிடுங்கி எறிந்த வேலியை அப்படியே விட்டுவிட்டார்கள். ஒருநாள் இரவு ஊர் வண்ணானுடைய கழுதை உள்ளே புகுந்து முளைத்த பயிரில் பெரும் பகுதியை நாசம் செய்து விட்டதைப் பார்த்துக் கிராம முனிசீபு வடமலைப் பிள்ளை நந்தவனத்துக்கு வேலி போட வேண்டும் என்று தாசில்தாருக்கு ஒரு ரிபோர்ட்டு எழுதிப் போட்டார். தாசில்தார் அதைத் தம் மேலதிகாரிக்கு அனுப்பி "உத்தரவு சீக்கிரம் பிறப்பிக்க வேண்டும்: இது நியாயமான செலவு" என்று எழுதினார். பின் ஒன்றிரண்டு நினைப்பூட்டுக் கடிதங்களும் தைரியமாக அனுப்பினார். ஒன்றும் பயன்படவில்லை.

* * *

வண்டிக்கார மாரிமுத்துவின் மாடுகள் இரண்டும் திடீர் என்று நோயில் விழுந்தன. "ஐயோ! என் பிழைப்புப் போய்விட்டதே!" என்று மாரிமுத்து கதறினான். இளஞ் சோளப் பயிரைத் தின்றால் இப்படி மாட்டுக்கு நோய் வருவதுண்டு என்று சில அநுபவசாலிகள் சொன்னார்கள்.

"பள்ளிகொண்டானுடைய கோவம்!" என்றாள் வடமலைப் பிள்ளையின் தாயார். கிழவியின் சாபமே போதுமல்லவா? அனுவசியமாகப் பள்ளிகொண்டானை இதில் இழுத்திருக்க வேண்டியதில்லை!

"நல்ல சோளப் பயிரில் விஷம் எப்படியிருக்கும்? இது சக்கிலித் தெருவார் செய்து விட்ட மோசம். தோலுக்காக மாட்டைக் கொல்ல விஷம் கொடுத்திருக்கிறார்கள். இதை விசாரிக்க வேண்டும்" என்று வண்டிக்கார மாரிமுத்துவின் வீட்டார் போலீசாரிடம் சென்று முறையிட்டார்கள். போலீசாரும் சில ஏழை அநாதைகளைச் சந்தேகித்துக் கைது செய்தார்கள். பிறகு சாட்சியம் போதாது என்று அவர்களை விடுதலை செய்துவிட்டார்கள்.

"இந்தத் தோட்டத்தில் விஷச் சோளம்தான் உண்டாகும். இது உதவாத நிலம்" என்று ஊரார் தீர்மானித்து வடமலைப் பிள்ளைத் தோட்டத்தை நந்தவனத்துக்கே விட்டுவிட்டார்கள். பள்ளிகொண்டான் சந்நிதிக்கு மறுபடியும் துளசிச் சேவை நடைபெற ஆரம்பித்தது.

* * *

பகுத்தறிவும் சோளப் பயிரைப் போலவேதான். முற்றுவதற்கு முன் கால் நடைகள் உள்ளே புகுந்து தின்றால் நோய் நொடிகள் உண்டாகும்.

ஆனால் சோளக் கதிர் முற்றிப் பக்குவம் அடைந்துவிட்டால் மனிதர்கள் உட்கொள்ளுவதற்குத் தகுந்த சத்துள்ள உணவு ஆகும்.

முற்றி விளைந்த சோளத்தட்டை கால்நடைகளுக்கும் நல்ல உணவு.

பகுத்தறிவு முற்றா திருக்கும்போது அதில் விஷம் கலந்திருக்கும்; அந்த நிலையில் உண்மைத் தத்துவங்களும் பொய்யாகத் தோன்றும்.

ஆனால் அதே பகுத்தறிவு முதிர்ச்சியடைந்துவிட்டால் பக்தியாகவும் ஆத்ம ஞானமாகவும் மாறி மனிதர்களைத் தேவர்களாக்கி விடும்.

சுதந்திர தேவி

அமெரிக்க மக்களுக்கு இரண்டு தெய்வங்கள் உண்டு என்று சொல்லுவார்கள். ஒன்று, டாலர் தெய்வம்; மற்றொன்று சுதந்திர தெய்வம்.

உலகத்தில் உள்ள மக்களும் தேசங்களும் சுதந்திர தேவியைத் தங்கள் இதயத்திலே வைத்துப் போற்றி வணங்குகிறார்கள். ஆனால் அமெரிக்கர்களோ சுதந்திர தேவிக்கு ஒரு சிலையையே பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

இந்த இதழ் 65-ம் பக்கத்தில் காணப்படும் பிரம்மாண்டமான சிலை அமெரிக்காவில் நியூயார்க் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது சுதந்திர தேவியை உருவகப் படுத்துகிறது. தேவி கம்பீரமான தோற்றத்துடன் விளங்குகிறாள். தன்னுடைய வலது கையை வானத்தை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கிறாள். அதில் ஒரு பெரிய தீபம் இருக்கிறது. இடது கையில் ஒரு தஸ்தாவேஜு சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதில் அமெரிக்கா சுதந்திரம் அடைந்த தேதி பொறிக்கப் பட்டிருக்கிறது. திருமுடியை ஒரு கிரீடம் அலங்கரிக்கிறது. சிலையின் காலடியில் உடைந்த ஒரு சங்கிலி கிடக்கிறது. சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு தேசத்து மக்களின் அடிமைத்தளைக்குச் சின்னம் அந்தச் சங்கிலி. சிலையின் வலது கையில் பிடித்திருக்கும் விளக்கு இரவில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கும்.

உலகத்தில் உள்ள எல்லாச் சிலைகளையும்விட இது மிகவும் பெரியது. இதைச் செய்வதற்கு ஏறக்குறைய 4,50,000 டாலர் செலவாயிற்றாம். சிலையை வைப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் மேடைக் கட்டடத்தை 3,50,000 டாலர் செலவில் கட்டினார்களாம்.

இந்தச் சிலையின் சிற்ப வேலைப்பாட்டைப் போற்றிப் புகழாதவர்களே கிடையாது. இது செம்பால் செய்யப்பட்டது. இதை அமைப்பதற்கு 88 டன் எடையுள்ள முந்நூறு செப்புத் தகடுகள் வேண்டியிருந்ததாம். சிலையின் உயரம் மாத்திரம் 305 அடி. சிலை வைக்கப்பட்டிருக்கும் மேடையின் உயரம் 151 அடி. அதன் மொத்த எடை 4,50,000 ராத்தல்!

கீழே இருந்து சிலையின் அடிவாரத்துக்குப் போக 'லிப்ட்' உபயோகிக்கப்படுகிறது. அங்கிருந்து சிலையின் தலையில் உள்ள கிரீடம் வரை போவதற்கு இரண்டு சுழல் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிலையின் தலையில் மாத்திரம் ஏககாலத்தில் ஐம்பது பேர் நிற்பதற்கு இடம் இருக்கிறது என்றால் அது எவ்வளவு பிரம்மாண்டமானதாக இருக்கவேண்டும்!

"தேவி நின் ஒளிபெறாத தேயம் ஓர் தேயமாமோ?" என்று கவியரசர் பாரதியார் பாடியிருக்கிறார். சுதந்திர தேவி சிலைவடிவில் சதா ஒளி வீசிக் கொண்டிருக்கும் அமெரிக்கா பாக்கியம் செய்ததுதான்!



GRAM: BULEION PHONE: 226



காந்தியென்னும் பேரொளியே!
    கருணைபொழி வான்முகிலே!
சாந்திநிறை பாத்திரமே!
    சன்மார்க்க சாத்திரமே!
மாந்தருக்குள் மாமணியே!
    மாநிலத்தின் அற்புதமே!
ஏந்துபுகழ் மோகனமே!
    என்சொல்லி அஞ்சலிப்போம்!

— நாமக்கல் கவிஞர்



ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி இந்திய தேசீய மகா சபையின் ஆதிகர்த்தாக்களில் ஒருவர். மூன்று முறை காங்கிரஸ் மகா சபையின் அக்ராசனராகும் சிறப்பைப் பெற்றார். இங்கிலாந்தில் தங்கி ஆங்கிலேயரால் பிரிட்டிஷ்-பார்லிமெண்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாரத நாட்டின் சுதந்திரத்துக்காகப் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் போராடித் தொண்டு புரிந்தார். 'இந்தியாவின் மாபெருங் கிழவர்' என்று கீர்த்தி பெற்ற நௌரோஜி "இந்தியர் கோருவதெல்லாம் 'சுயராஜ்யம்' என்ற ஒரே வார்த்தையில் அடங்கியிருக்கிறது" என்று சுருக்கக் கூறி விளங்கவைத்தார்.



ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே தேச பக்திக்கும் தியாக வாழ்வுக்கும் தன்னல மற்ற சமூகத் தொண்டுக்கும் உதாரண புருஷராக விளங்கினார். 'மிதவாதிகள்' என்று அழைக்கப்பட்ட நிதானக் கட்சித் தலைவர்களுக்குள்ளே அப்பழுக்கற்ற தூய்மை பெற்று விளங்கினார். காந்தி மகானால் "என் அரசியல் குரு" என்று பாராட்டப்படும் பாக்கியத்தை அடைந்தார். ஸ்ரீ கோகலே ஸ்தாபித்த இந்திய ஊழியர் சங்கம் அவருடைய நிர்மாணத் தொண்டின் பெருமையை உலகம் அறிய எடுத்துக் காட்டும் சிறந்த ஞாபகச் சின்னமாக விளங்குகிறது.



ஸ்ரீ பால கங்காதர திலகர் வீர சிவாஜிக்குப் பிறப்பளித்த மகாராஷ்டிர தேசத்தில் பிறந்தார். "சுயராஜ்யம் நமது பிறப்புரிமை" என்ற மகா மந்திரத்தை உபதேசம் செய்து மக்களிடையே தேசிய வெறியை ஊட்டினார். பிரிட்டிஷாரிடம் கெஞ்சுமணியம் செய்து சுய-ராஜ்யம் பெற முடியாதென்றும், போராடியே சுதந்திரம் பெற வேண்டும் என்றும் வற்புறுத்தினார். அரசாங்கத் துவேஷக் குற்றத்துக்காக ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனை அடைந்தார். "தொண்டு, தியாகம் இந்த இரண்டினால் மாத்திரமே உருவான திலகர் மாபெரும் மனித சிரேஷ்டர்" என்று மகாத்மா காந்தியினால் புகழப்பட்டார்.



மௌலானா முகம்மது அலி நவ இந்தியாவை உருவாக்கிய தேசீய வீரர்களில் புகழ் வாய்ந்த ஒருவர். காந்தி மகான் சுதந்திரப் போரை ஆரம்பித்த காலத்தில் அவருக்கு உற்ற துணைவராக இருந்தார். கிலாபத் இயக்கத்திலும் இந்திய சுதந்திர இயக்கத்திலும் ஈடுபட்டுச் சிறை சென்றார். பிரசித்தி பெற்ற காக்கிநாடா காங்கிரஸில் தலைமை வகித்துத் திறமையுடன் நாட்டை நடத்திச் சென்றார். "அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் நான் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் கடைசியாகவும் ஓர் இந்தியனேயன்றி முஸ்லீம் அல்ல" என்று லண்டன் வட்ட மேஜை மகாநாட்டில் கர்ஜித்தார். அத்தகைய சுதந்திர வீரர் தாய்நாடு திரும்பாமலே காலமானது இந்தியாவின் மகத்தான நஷ்டம் ஆயிற்று.



ஸ்ரீ சத்தியமூர்த்தி தென்னாடு முழுவதும் தேசபக்திக் கனலை மூட்டிய தீரர். தேசீய விரோதிகளுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்து வந்தார். சட்டசபைக்குள்ளேயும் சுதந்திரப் போரை நடத்த முடியும் என்று நிரூபித்தார். "சிம்மத்தின் குகைக்குள்ளே சென்று அதன் பிடரியை உலுக்குவோம்?" என்று கர்ஜித்தபடி காரியத்திலும் நிறைவேற்றினார். "சென்னைக் கோட்டையில் தேசீயக் கொடி பறப்பதைப் பார்ப்பேன்" என்று இடைவிடாது முழங்கினார். பூத உடலில் அவர் அதைப் பார்க்க முடியவில்லை. எனினும், புகழ் உடம்பு எய்திய அவரது ஆவி இப்போது அங்கு நமது தாயின் மணிக் கொடி பறப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடையும் என்பதில் சந்தேகமில்லை.



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஐ. சி. எஸ். வர்க்கத்திலிருந்து தப்பித்துச் சுதந்திர வீரர் படையில் சேர்ந்தார். தேசபந்துதாஸின் வலதுகரமாக விளங்கினர். சென்ற மகாயுத்தத்தின் போது பிரிட்டிஷ் இரகசியப் போலீஸின் கழுகுப் பார்வையிலிருந்து தப்பித்து வெளிநாடு சென்ருர். இந்திய தேசியப் படையையும் ஜான்ஸி ராணிப் படையையும் நிறுவினர். "ஜெய் ஹிந்த்" என்ற வெற்றி மந்திரத்தைக் கண்டு பிடித்தார். பர்மாவிலிருந்து இம்பால்வரையில் பிரிட்டிஷ் துருப்புகளைப் பின்வாங்கும்படி செய்தார். சுதந்திர இந்திய பூமியில் முதன் முதலாகப் பாரதத்தாயின் மணிக்கொடியை ஏற்றிவைத்த தனிப்பெருமை அமர வாழ்வுபெற்ற சுபாஷ் போஸுக்கே உரியது.

"அவன் விடுதலை கொடுத்து விட்டால்?......" என்று துரைசாமி ஐயர் கேட்டார். அவருடைய முகம் கோபத்தினால் சிவந்திருந்தது.

"தாங்களே ஊகித்துக் கொள்வீர்கள் என்று நினைத்தேன். சொல்ல வேண்டும் என்றால் சொல்கிறேன். விவாகப் பிரிவினை ஆனபிறகு நானே சீதாவை மணம் செய்து கொள்ளுகிறேன். கலியாணம் செய்துகொண்டு அவளைக் காஷ்மீருக்கு அழைத்துப் போகிறேன். இல்லாவிட்டால் நேபாளத்துக்கு அழைத்துப் போகிறேன். புதிய இடங்களைப் பார்த்துப் புதிய மனிதர்களுடன் பழகினால் சீதாவின் சித்தப் பிரமை நீங்கிவிடும். அத்திம்பேரே! உங்கள் குமாரியைக் கடைசி வரை காப்பாற்றுவதாகச் சத்தியம் செய்து கொடுக்கிறேன்."

துரைசாமி ஐயரின் பக்கத்தில் ஒரு கைத்துப்பாக்கி கிடந்தது. அதை அவர் எடுத்துக் கொண்டார். சூரியாவை நோக்கிக் குறி பார்த்தார். "சூரியா! முன்னொரு தடவை இந்தத் துப்பாக்கி குறி தவறிவிட்டது. இரண்டாவது தடவை நிச்சயமாய்க் குறி தப்பாது. சீதாவைப்பற்றி இப்படி மறுபடியும் ஒரு தடவை பேசினாயோ உன்னைக் கட்டாயம் சுட்டுக் கொன்று விடுவேன்!" என்றார்.

சூரியா சற்று நேரம் தலைகுனிந்த வண்ணமிருந்தான். பிறகு நிமிர்ந்து பார்த்தான்.

"அத்திம்பேரே! எனக்கு நிச்சயமாகப் பைத்தியம்தான் பிடித்து விட்டது. இல்லா விட்டால் இப்படி நான் உளறியிருக்க மாட்டேன்" என்றான்.

"பைத்தியம் பிடித்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறாயல்லவா? அதனால் புத்தித் தெளிவு இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது என்று ஏற்படுகிறது. போகட்டும். நீ இப்போது உளறியதை நானும் மறந்து விடுகிறேன்; நீயும் மறந்து விடு! டில்லிக்குப் புறப்படுவதற்கு யத்தனம் செய்!"

"டில்லிக்குப் போக வேண்டியது தான். ஆனால் இங்கேயுள்ள அகதிகளை விட்டுப் போக வேண்டுமே என்று வருத்தமாயிருக்கிறது. அத்திம்பேரே! பத்து வருஷ காலமாகச் 'சுதந்திரம்! சுதந்திரம்!' என்று அலறிக் கொண்டிருந்தேன். சுதந்திரம் என்னமோ வந்து விட்டது. ஆனால் அந்தச் சுதந்திரம் இவ்வளவு கசப்பு மருந்தாக இருக்குமென்று கனவிலும் கருதவில்லை!" என்றான் சூரியா.

"மருந்து என்றால் கசப்பாகத்தானிருக்கும். அதற்குப் பயப்பட்டு என்ன செய்கிறது?" என்றார் கிழவர்.

துரைசாமி ஐயர் இன்னும் துப்பாக்கியைக் கையிலே வைத்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயம் சீதா அந்த அறைக்கு உள்ளே வந்தாள்.

சூரியாவைப் பார்த்ததும் அவளுடைய முகம் சிறிது மலர்ந்தது. அதற்குள் அவளுடைய பார்வை தன் தந்தையின் கையில் வைத்திருந்த துப்பாக்கியின் பேரில் சென்றது. துரைசாமி ஐயரைச் சீதா துயர முகத்துடன் உற்றுப் பார்த்தாள். அவளுடைய கண்களிலிருந்து சலசலவென்று கண்ணீர் பொழிந்தது.

துரைசாமி ஐயரின் கையிலிருந்து கைத் துப்பாக்கி நழுவி விழுந்தது. அதை எடுத்துச் சீதாவின் கையில் கொடுத்துச் சமிக்ஞையினால் அதைத் தூர எறிந்து விடும்படி சொன்னார். பிறகு சூரியாவைப் பார்த்து, "சூரியா! சூரியா! உன் அத்தங்காளுக்கு மறுபடியும் மயக்கம் வந்து விடப்போகிறது. காந்தி மகாத்மாவைப் பார்க்க அவளை டில்லிக்கு அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்! சீக்கிரம் சொல்!" என்றார்.

சூரியா காந்தியின் படத்தைச் சுட்டிக் காட்டி, அவரைப் பார்க்கச் சீதாவை அழைத்துக் கொண்டு போவதாக ஜாடையினால் தெரிவித்தான்.

சீதா தந்தையின் முகத்தைப் பார்த்தாள். அவரும் 'சரிதான்' என்று சமிக்ஞை செய்தார்.

உடனே சீதாவின் கண்ணீர் நின்றது. அவள் முகம் பிரகாசம் அடைந்தது. அவளுடைய கண்களில் ஒரு புதிய ஒளி பிறந்தது.

அடி சீதா! பேதைப் பெண்ணே! வாழ்க்கையில் உன்னுடைய கடைசி மனோரதமாவது நிறைவேறப் போகிறதா? பிறந்ததிலிருந்து கஷ்டமும் நஷ்டமுமே உன்னுடைய ஜாதக ரீதியாயிருக்கும்போது அந்த மகா பாக்கியம் மட்டும் உனக்கு எப்படிக் கிட்டும்?

துண்டு. அந்த உற்சவத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களோடு உற்சாகமாய்க் கலந்து கொள்ளுவதுண்டு. ஹிந்து—முஸ்லிம்கள் அண்ணன் தம்பிகளைப் போல் பல நூறு ஆண்டுகளாகப் பானிபத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

இப்போதோ,பானிபத் தெருக்களில் ஒரு முஸ்லிம் புருஷனையோ, ஸ்திரீயையோ, குழந்தையையோ பார்க்க முடியாது. அவ்வளவு பேரும் ஊரை விட்டு வீட்டை விட்டு நாட்டை விட்டே போய் விட்டார்கள். மேற்குப் பஞ்சாப்பில் கொடுமைக்காளான ஹிந்து அகதிகள் ஆயிரக்கணக்கில் தங்கள் துயரக் கதைகளைச் சொல்லிக் கொண்டும் தாங்கள் அநுபவித்த கொடுமைகளை முகத் தோற்றத்தின் மூலம் காட்டிக் கொண்டும் மேலும் மேலும் வந்துகொண் டிருந்தபோது கிழக்குப் பஞ்சாப் ஹிந்துக்களின் இரத்தம் கொதித்தது. அவர்களில் பலர் வெறிகொண்டு பழிக்குப் பழி வாங்க எழுந்தார்கள். ஆனால் அதற்குள்ளே முஸ்லிம்கள் மூட்டை கட்டிக் கொண்டு புறப்படத் தொடங்கி விட்டார்கள். டில்லியிலிருந்து அமிருதஸரஸ் வரையில் கிழக்குப் பஞ்சாப் முழுவதிலும் பெயருக்கு ஒரு முஸ்லிம் கூட இல்லாமற் போய் விட்டது. பானிபத்திலும் அப்படியேதான்!

ஊருக்குள்ளே உற்சாகமோ கலகலப்போ இல்லை. வீதிகளில் நடமாட்டமும் குறைவுதான். தப்பித் தவறி வீதிகளில் பார்த்தவர்களின் முகங்கள் களையிழந்திருந்தன.

* * *

சமாரான அகலமுள்ள தெருக்களையும் குறுகலான சந்துபொந்துகளையும் கடந்து சூரியா சென்றான். ஒரு சந்திலிருந்து குறுக்குக் கால் நடைப் பாதை ஒன்று செங்குத்தான மேட்டின்மேலே ஏறியது. அதன் வழியே சூரியா போனான். மேட்டின் உச்சியில் ஒரு மருதி இருந்தது. அநாதையான ஸ்திரீ அகதிகளுக்கு அந்த மருதிக்குள்ளே இடம் தரப்பட்டிருந்தது. அந்தப் பெண்களில் சிலர் ராட்டினத்தில் நூல் நூற்றார்கள். சிலர் தையல் இயந்திரங்களில் குழந்தைகளுக் குரிய சட்டை தைத்தார்கள். சிலர் சிங்காரப் பூக்கூடை பின்னினார்கள். ஆனால் அந்த ஸ்திரீகளின் முகத்தில் உயிர்க் களை கிடையாது. அவர்களுடைய குழி விழுந்த கண்களில் ஒளி என்பதே இல்லை. எதிரில் உள்ளவற்றைக் குருடர்கள் பார்ப்பதைப்போல் அவர்கள் பார்த்தார்கள். யாராவது ஏதாவது சொன்னால் அவர்கள் காதில் விழுந்ததாகவே தோன்றுவதில்லை. உயிரற்ற பிரேதங்களை ஏதோ ஒரு மந்திர சக்தியால் எழுப்பி உட்கார வைத்து வேலை செய்யப் பயிற்றுவதைப் போலவே இருந்தது. நரகத்தை ஒரு தடவை பார்த்து விட்டுத் திரும்பி வந்தவர்களின் முகத் தோற்றம் இப்படித் தான் இருக்கும் போலும்!

இவர்களையெல்லாம் பரிதாப நோக்குடன் பார்த்துக் கொண்டே சூரியா மருதியைக் கடந்து அப்பால் சென்றான். ஒரு மிகக் குறுகிய சந்தில் இருந்த இருளடைந்த வீட்டில் பிரவேசித்தான். அதிலேதான் சீதாவும் அவள் தகப்பனாரும் வசித்தார்கள்.

சீதாவுக்குச் சுய உணர்வு வந்த பிறகு அவள் சமையல் அறையில் காரியம் செய்யப் புகுந்தாள். துரைசாமி ஐயர் முன் அறையில் பத்திரிகை படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"சூரியா! வா! என்ன இவ்வளவு தாமதம்? நேற்று ராத்திரியே ஏன் வரவில்லை?" என்று கேட்டார்.

சூரியா சும்மா இருந்தான்.

"ஏன், அப்பா, மௌனமாக இருக்கிறாய்? டில்லியில் ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டார் துரைசாமி ஐயர்.

"வழக்கமான விசேஷந்தான்; வேறொன்றுமில்லை. எங்கே பார்த்தாலும் துவேஷம், குரோதம், பீதி;—யார் மனதிலும் நிம்மதி இடையாது!" என்றான் சூரியா.

"காந்தி மகாத்மாவின் பிரார்த்தனைக்கு இந்தத் தடவை நீ போகவில்லையா? பிரார்த்தனைக்குப் போனால் மனம் நிம்மதி அடைகிறது என்று சொல்லுவாயே?"

"போனேன்; ஆனால் அங்கேயும் இந்தத் தடவை மனம் சாந்தி அடையவில்லை. மகாத்மா தற்சமயம் டில்லி



அத்தியாயம் 35

பானிபத் முகாம்

பானிபத் என்னும் சிறு நகரம் இந்திய சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. டில்லிக்கு வடக்கே சுமார் முப்பது மைல் தூரத்தில் அந்தப் பட்டணம் இருக்கிறது. இந்தியாவின் சரித்திரப் போக்கை மாற்றி அமைத்த மூன்று பெரிய சண்டைகள் அங்கே நடந்திருக்கின்றன.

பட்டாணிய வம்சத்தின் கடைசி அரசனான இப்ராஹிம் லோடி டில்லியில் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் நொண்டித் தைமூர் என்பவனின் சந்ததியில் வந்த பாபர் டில்லிமீது படையெடுத்து வந்தான்.

பாபருடைய பத்தாயிரம் வீரர்களும் இப்ராஹிம் லோடியின் ஒரு லட்சம் போர் வீரர்களும் பானிபத் நகருக்கு அருகில் விஸ்தாரமான மைதானத்தில் சந்தித்தார்கள். லோடியின் ஒரு லட்சம் வீரர்களும் சோற்றுப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள். பாபரின் பத்தாயிரம் வீரர்கள் கட்டுப்பாடு பெற்ற வீரர்கள். அன்றியும், பாபரிடம் பெரிய பீரங்கிகள் சில இருந்தன. எனவே, இப்ராஹிம் லோடியின் ஒரு லட்சம் வீரர்களும் சொற்ப நேரத்துக்குள்ளே பெருந் தோல்வியடைந்து நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். பாபர் டில்லி பாதுஷா ஆனான். அவனுடைய சந்ததியில் வந்த மொகலாய மன்னர்கள் நெடுங்காலம் டில்லி சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஹிந்துஸ்தானத்தை ஆண்டார்கள்.

பின்னர், பதினான்கு வயதுப் பாலனாகிய அக்பர், அதே பானிபத் போர்க்களத்தில், ஹேமுவின் மாபெரும் சைன்யத்தைத் தோற்கடித்து, ஹுமாயூன் இழந்துவிட்ட டில்லி சாம்ராஜ்யத்தை மீண்டும் அடைந்தான்.

அதற்கு இருநூறு வருஷங்களுக்குப் பிறகு பாரஸீகத்திலிருந்து ஆமத்ஷா என்னும் பெரு மன்னன் டில்லிமீது படையெடுத்து வந்தான். அப்போது மத்திய இந்தியாவில் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்த மகாராஷ்டிரர்கள் ஒரு பெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு போனார்கள். மீண்டும் அதே பானிபத்தில் மிகப் பெரும் சண்டை நடந்தது. அதில் மகாராஷ்டிர சேனை வீரர்கள் படுதோல்வியடைந்தார்கள். அந்தச் சண்

டையிலிருந்து மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தின் அஸ்தமனம் ஆரம்பமாயிற்று.

இத்தகைய சரித்திரப் பிரசித்தி பெற்ற பானிபத் நகரத்தில், சரித்திரத்தை மாற்றி அமைத்த சண்டைகள் பல நடந்த மைதானத்தில், இப்போது ஆயிரக்கணக்கான கூடாரங்கள் போட்டிருந்தன. அவற்றில் பஞ்சாப் அகதிகள் குடியிருந்தார்கள். ஆறு மாதத்திற்கு முன்பு லட்சாதிபதிகளாக இருந்தவர்கள் இப்போது கந்தைத் துணி உடுத்தி வயிற்றுப் பசியை ஆற்றக் காய்ந்த ரொட்டிகள் எப்போது கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். பெண்டு பிள்ளைகளை இழந்தவர்களும், பெற்றோர்களை இழந்தவர்களும், கணவனை இழந்தவர்களும், தம்மைத் தவிர குடும்பம் அனைத்தையும் இழந்தவர்களும் அந்தக் கூடாரங்களில் வசித்தார்கள். தங்களுடைய கண்ணெதிரே தங்கள் உற்றார் உறவினருக்குப் பயங்கரமான கொடுமைகள் இழைக்கப்படுவதைப் பார்த்துச் சித்தப்பிரமை கொண்ட பித்தர்கள் பலரும் அங்கே இருந்தார்கள்.

சூரியா கொஞ்ச காலமாக அந்த அகதிகள் முகாமில் தன்னலமற்ற தொண்டு செய்து கொண்டிருந்தான். ஆகையால் அவன் அன்று விடுதிக்குள் நுழைந்த உடனே அவனைப் பலர் சூழ்ந்து கொண்டார்கள். "டில்லியில் என்ன நடக்கிறது? இன்னும் அங்கே ஹிந்து—முஸ்லிம் சண்டை நடப்பது உண்மைதானா? காந்தி மகாத்மா இப்படி அநியாயம் செய்யலாமா? முஸ்லிம்களுக்காக இவர் எதற்காகப் பரிந்து பட்டினி கிடக்க வேண்டும்? டில்லியில் முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றிய வீடுகளையெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், வெளியேறியவர்களைக் கூப்பிட்டுக் குடிவைக்க வேண்டும் என்றும் சொல்கிறாராமே? இது என்ன அநீதி? பாகிஸ்தானத்திலே நாங்கள் விட்டுவந்த எங்கள் வீடுகளையெல்லாம் திருப்பிக் கொடுப்பார்களா? டில்லியில் அகதிகள் தங்கியிருக்கும் முஸ்லிம் மசூதிகளையெல்லாம் காலி செய்து முஸ்லிம்களிடம் ஒப்புவிக்க வேண்டும் என்கிறாராமே? இது சரியா? முஸ்லிம்கள் ஹிந்துக்களின் கோயில்களையும் சீக்கியர்களின் குருத்வாரங்களையும் நெருப்பு வைத்துக் கொளுத்தி மண்ணோடு மண்ணாக்கி விட்டார்களே! அப்படியிருக்க ஹிந்து அகதிகள் சில காலம் மசூதிகளில் தங்கியிருந்துவிட்டால் மோசம் என்ன? அவர்களை ஏன் விரட்டி அடிக்க வேண்டும்?"-இப்படி எல்லாம் அகதிகள் கேட்டார்கள். ஒரு ஸ்திரீ பரபரவென்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து சூரியாவைப் பார்த்து "டில்லியில் சுயராஜ்யம் ஸ்தாபனமாகி விட்டது என்று சொல்கிறார்களே! அது நிஜந்தானா? நம்முடைய தலைவர்கள் ராஜ்யம் ஆளுகிறார்கள் என்று சொல்கிறார்களே? அதுவும் உண்மைதானா?" என்று கேட்டாள்.

"ஆமாம்; ஆமாம்" என்றான் சூரியா.

"அப்படியானால் எனக்கு ஒரு புதுத் துணி (நயா கபடா) கிடைக்குமா?" என்று வினவினாள் அந்த ஸ்திரீ. அவள் உடுத்தியிருந்த சேலை ஆயிரம் கந்தலாயிருந்தது. சூரியா கண்ணில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "கிடைக்கும்" என்றான். எல்லாருக்கும் கூடியவரையில் பதில் சொல்லி விட்டு நகர்ந்தான். அகதி முகாம் தலைமை அதிகாரியைப் பார்த்துத் தான் திரும்பி வந்து விட்டதைத் தெரியப்படுத்திவிட்டு மேலே பானிபத் பட்டணத்துக்குள் போனான்.

• • •

பானிபத் பட்டணம் மற்றும் பல வட இந்தியாவின் பட்டணங்களைப் போலவே சந்தும் பொந்துமாயிருந்தது. தெரு வீதிகள் மேட்டில் ஏறிப் பள்ளத்தில் இறங்கின. வீதிகளிலும் சந்து வழிகளிலும் கருங்கல்களைப் பதித்திருந்தபடியால் வண்டிகள் கடக்முடக் என்று கஷ்டப்பட்டுக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது.

ஒரு காலத்தில், அதாவது ஆறு மாதத்திற்கு முன்பு, பானிபத் பட்டணத்தில் பாதிப்பேர் முஸ்லிம்களாயிருந்தார்கள். அவர்களும் அந்தப் பட்டணத்தில் வசித்த மற்ற ஹிந்துக்களும் அந்நியோன்யமாக இருந்தார்கள். இஸ்லாமிய மதத்தின் மகான்கள் சிலர் பானிபத்தில் சமாதி அடைந்திருக்கிறார்கள். அந்தச் சமாதிகளுக்கு வருஷந்தோறும் உற்சவம் நடப்ப

யில் இருப்பதே தப்பு என்று தோன்றுகிறது. வேறு எங்கேயாவது அவர் போய்விட்டால் நல்லது."

"இது என்ன, இப்படித் திரும்பி விட்டாய், தம்பி! மகாத்மா டில்லியில் இருந்தால் உனக்கு என்ன வந்தது?"

"எங்கே பார்த்தாலும் காந்திஜியைப் பற்றிக் கோபமாகப் பேசுகிறார்கள். அவருடைய காரியங்கள் டில்லியில் யாருக்கும் பிடிக்கவில்லை. உத்தியோகஸ்தர்கள், காங்கிரஸ்காரர்கள், வியாபாரிகள், மற்றப் பொது ஜனங்கள் எல்லாருமே அவரிடம் வெறுப்பாயிருக்கிறார்கள். அகதிகளுடைய கோபத்தைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. அவர் எந்த முஸ்லிம்களுக்காகப் பரிந்து பேசுகிறாரோ, அவர்களாவது அவரிடம் நன்றி செலுத்துகிறார்களா என்று கேட்டால், அப்படியும் தெரியவில்லை."

"பெரியவர்கள் 'யதார்த்தவாதி பஹுஜன விரோதி' என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? யார் எப்படிப் பேசினாலும் யார் என்னமாதிரி நடந்து கொண்டாலும் மகாத்மாஜிக்கு ஒரு பரமானந்த சிஷ்யை இருக்கிறாள். உன் அத்தங்காளைத்தான் சொல்கிறேன். நீ ஒரு தடவை அவளை அழைத்துக் கொண்டு போய் மகாத்மாவின் தரிசனம் பண்ணி வைக்க வேண்டும். அந்தப் புண்ணிய புருஷரின் தரிசனத்தால் ஒரு வேளை சீதாவின் சித்தப்பிரமை மாறினாலும் மாறலாம். இன்றைக்கு ஒரு தடவை சீதாவுக்கு மயக்கம் போட்டு விட்டது. மறுபடி ஸ்மரணை வரப் பண்ணுவதற்கு ரொம்பவும் கஷ்டமாய்ப் போய் விட்டது. நினைவு வந்து கொண்டிருந்த போது அவள் போட்ட பயங்கரமான கூச்சலைக் கேட்டு எனக்கே மயிர்க்கூச்சு எடுத்து விட்டது. உன்னையும் என்னையும் தவிர வேறு யாராலேயும் அதைச் சகிக்க முடியாது."

"சீதா மகாத்மாஜியைத் தரிசிக்க வேண்டும் என்றால் சீக்கிரமே அழைத்துப் போகவேண்டும். அதிக நாள் காந்திஜி டில்லியில் இருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. அங்கே சூழ்நிலை அப்படி இருக்கிறது. பிரார்த்தனைக் கூட்டத்தில் யாரோ குண்டு எறிந்த விஷயம் தெரியும் அல்லவா?"



"தெரியாமல் என்ன? பத்திரிகைகளிலேதான் படித்தோமே? அதற்கெல்லாம் மகாத்மா காந்தி பயந்து விடுகிறவரா, என்ன?"

"அவர் பயப்படவுமில்லை; இலட்சியம் செய்யவுமில்லை. பத்திரிகைகளில் படித்த போது எனக்கும் ஏதோ வேடிக்கைமாதிரிதான் தோன்றியது. அங்கே போய்ப் பார்த்த போது வேடிக்கையாக இல்லை. குண்டு வெடித்ததில் ஒரு பக்கத்துச் சுவரே இடிந்து போயிருக்கிறது."

"மகாத்மா பயப்படாவிட்டாலும் நீ ரொம்பப் பயந்துபோயிருக்கிறாய். அது போனால் போகட்டும், சூரியா! டில்லியில் வேறு யாரையாவது பார்த்தாயா? ஏதாவது செய்தி உண்டா?" என்று துரைசாமி ஐயர் கேட்டார்.

"பார்த்தேன்! உங்கள் அருமையான மாப்பிள்ளையைப் பார்த்தேன்!" என்று சூரியா சொன்னதும் துரைசாமி ஐயரின் முகத்தில் திடீரென்று ஆர்வத்தின் அறிகுறி தோன்றியது.



"நீ அவனை எதற்காகப் பார்த்தாய்? நான்தான் பார்க்க வேண்டாமென்று சொல்லி யிருந்தேனே?"

"நானாகத் தேடிக்கொண்டு போய்ப் பார்க்கவில்லை. சந்தர்ப்பம் அப்படி நேரிட்டது. உங்கள் மாப்பிள்ளை மூன்றாந் தடவையாக என்னைக் கொன்றுவிடப் பார்த்தார்! சாலையோடு போய்க்கொண் டிருந்தவன் பேரில் மோட்டாரை விட்டு ஓட்டி விடலாம் என்று பார்த்தார்! கடவுள் அருளால் தப்பிப் பிழைத்தேன்."

"நீ பிழைத்துக்கொண்டாய் என்று தான் தெரிகிறதே! அப்புறம் என்ன? உன்னோடு அவன் பேசினானா? ஏதாவது உன்னைக் கேட்டானா?"

"பேசாமல் என்ன? கேட்காமல் என்ன? என்னை வண்டியில் ஏற்றி வீட்டுக்கு அழைத்துப் போனார். சீதாவைப் பற்றி எனக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டார்."

"நீ என்ன பதில் சொன்னாய்?"

"சீதா செத்துப்போய் விட்டாள் என்று சொல்லி வைத்தேன்."

"அட பாவி! எதற்காக அப்படிச் சொன்னாய்?" என்றார் கிழவர்.

"பின்னே என்ன சொல்லச் சொல்கிறீர்கள்? உங்கள் குமாரியோ, தான் உயிரோடு இருப்பது அந்த மனுஷருக்குத் தெரியவே கூடாது என்கிறாள். அவரோ மறுபடியும் கலியாணம் செய்துகொள்ளத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்!"

"அவனுக்கு இன்னொரு கலியாணம் வேறேயா? அந்தக் கிராதகனை யார் கலியாணம் செய்து கொள்ளுவாள்?"

"அத்திம்பேரே! அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்கள் மூத்த பெண் ஒருத்தி இருக்கிறாளே? அவளைப் பற்றித்தான் அவரும் யோசித்துக் கொண்டிருக்கிறார்."

இத்தனை நேரம் சாய்ந்து படுத்திருந்த துரைசாமி ஐயர் சடக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தார். "சூரியா!

தாரிணியைப் பற்றி ஏதாவது அவன் சொன்னானா?" என்று கேட்டார்.

தாரிணி சீதாவின் பெயருக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பற்றிச் சூரியா அவருக்குத் தெரிவித்துவிட்டு, "தாரிணியும் வஸந்தியும் பிழைத்திருக்கிறார்கள். அந்த வரையில் நல்ல செய்திதான்!" என்றான்.

"தாரிணியை எப்படியாவது கண்டு பிடித்தாக வேண்டும், சூரியா! நீ சொன்னது போல் ஏதாவது நடந்து விடாமல் தடுக்க வேண்டும்" என்று பரபரப்புடன் கூறினார் துரைசாமி.

"தாரிணியைக் கண்டு பிடிக்க வேண்டுமானால் நான் டில்லியில் இருந்தாக வேண்டும். எப்படியும் உங்கள் மாப்பிள்ளையின் வீட்டைத் தேடிக் கொண்டு அவள் வருவாள். நான் டில்லியில் இருந்தால் கண்டு பிடித்து விடுவேன்" என்றான் சூரியா.

"அப்படியே செய்யலாம்! நாம் எல்லாருமே வேணுமானாலும் டில்லிக்குப் போய்விடலாம்."

"அத்திம்பேரே! நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். தயவு செய்து கேட்பீர்களா?" என்று சூரியா நயமாகக் கூறினான்.

"அது என்ன யோசனை? புதிதாக என்ன சொல்லப் போகிறாய்? சொல், கேட்கலாம்!" என்றார் துரைசாமி.

"யோசனையைச் சொல்லுவதற்கு முன்னால் வேறு சில விஷயங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும். உங்கள் குமாரி சீதாவை முதன் முதலில் நான் ராஜம்பேட்டைச் சாலையில் சந்தித்தேன். வண்டி குடை சாய்ந்து அதன் பக்கத்திலிருந்த ஓடையில் விழுந்திருந்தாள். அவளைக் காப்பாற்றுவதற்காக ஓடினேன். ஆனால் ஓடையில் தண்ணீர் முழங்கால் ஆழந்தான் என்று தெரிந்ததும் ஏமாற்றமடைந்தேன். அதற்குப் பிறகு எத்தனையோ சம்பவங்கள் நடந்து விட்டன. தங்களுடைய தந்தியை மறைத்து வைத்துச் சீதாவுக்கும் சௌந்தரராகவனுக்கும் கலியாணம் ஆவதற்கு நானே காரணமானேன்."

"அதற்காக உன்னை நான் எத்தனையோ தடவை சபித்தாகி விட்டது. அப்புறம் சொல்!" என்றார் கிழவர்.

"அத்திம்பேரே! நல்ல எண்ணத்துடன் நான் அப்போது செய்த தவறுக்கு அப்புறம் பல தடவை பிராயச்சித்தம் செய்து விடவில்லையா? கைத்துப்பாக்கியினால் சுட்டுக் கொள்ளப் போனவளை நான் தடுத்துக் காப்பாற்றவில்லையா?"

"காப்பாற்றினாய்; ஆனால் அதற்குப் பிறகு என்ன ஆயிற்று? உன்னால் அவள் எத்தனை கஷ்டங்களுக்கு உள்ளானாள்? நான் மட்டும் உங்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிராவிடில் அவளுடைய கதி என்ன ஆகியிருக்கும்?"

"அதுவும் போனால் போகட்டும். சேனாப் நதியின் பயங்கரமான வெள்ளத்தில் அவள் முழுகிச் சாகாமல் நான் காப்பாற்றவில்லையா? அவளைக் கரையேற்றிக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு உங்களையும் காப்பாற்றுவதற்கு வந்தேன். நீங்கள் என்னை அமுக்கிக் கொன்றுவிடப் பார்த்தீர்கள். கடவுள் அருளால்,— இல்லை; அல்லாவின் அருளால், — இருவரும் பிழைத்தோம். உங்களை முஸ்லிம் என்று எண்ணிக்கொண்டு அக்கரையிலிருந்து ஒரு முஸ்லிம் படகுக்காரன் வந்து காப்பாற்றினான். பிறகு அவனிடமிருந்து நாம் தப்பிப் பிழைத்த பாடு தெய்வம் அறிந்து போயிற்று."


"உனக்கென்ன பைத்தியமா, சூரியா! அந்தப் பயங்கர அநுபவங்களையெல்லாம் எதற்காக மறுபடியும் ஞாபகப்படுத்துகிறாய்?"

"எதற்காக வென்றால், சீதாவின் பேரில் எனக்குள்ள உரிமையை ஸ்தாபித்துக் கொள்ளுவதற்காகத்தான். நீங்கள் அவளைப் பெற்று வளர்த்தீர்கள். நான் அவளை இரண்டு தடவை யமதர்மனின் கையிலிருந்து விடுதலை செய்தேன். இப்போதுள்ள சீதாவின் உயிர் பழைய உயிர் அல்ல. நான் அவளுக்குக் கொடுத்த புதிய உயிர். ஆகையால் ராகவனுக்கு இப்போது சீதாவின் பேரில் எந்தவித பாத்தியதையும் இல்லை. நீங்கள் இதை ஒப்புக்கொண்டால் நாம் இருவரும் ராகவனிடம் நேரில் சென்று சீதாவுக்கு விவாக விடுதலை கொடுத்து விடும்படி வற்புறுத்துவோம்!......"


MKC
murli
LION BRAND
BANIANS
SHURTS
SLIP-OVERS
PULL-OVERS
SWEATERS
UNDER WEARS
LADIES' BLOUSES
MUFFLERS
Madura Knitting Co. Madura, S. India.






எவ்வளவு
சுமை
பாரமென்றால் லக்ஷியமில்லை. பாரம் தூக்கித்தானே நான் பழக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் எதற்கும் ஒரு அளவு உண்டு என்பதை நீங்களும் மறக்க வேண்டாம். உங்கள் வண்டியின் சுமை அளவுதான் நான் சொல்லும் அளவும். ஸ்பிரிங்கைப்பற்றிச் சொல்லுவதெல்லாம் சரிதான். கடைசியில் பாரத்தை சுமப்பது நானல்லவா? ஆகவே நான் ௩ டன் லாரியில் நியமம் செய்து 4½ டன் அல்லது அதிகம் ஏற்றுகிறீர்கள் எச்சரிக்கை செய்கிறேன். கேளுங்கள் என்னை வெடிக்கச்செய்ய அதுவே போதும்.
அளவுக்கு
மீறி சுமை
ஏற்றாதீர்கள்
TRADE MARK
டன்லப்

மானங்காத்த வீரன்

வி.ஜி

1799-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ந் தேதி.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் 'டாண், டாண், டாண்' என்று மணி பத்து அடித்து ஓய்ந்தது.

இரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டல்ல; பகலின் கலகலப்போடு கலந்துதான்!

அன்றைய தினம் வீரத்தின் விளை நிலமான தமிழகத்திலே யாரும் என்றும் கண்டிராத ஒரு காட்சி!

நாங்கள் கொடுத்த கடனுக்காக ஆர்க்காட்டு நவாப்பிடம் இரவல் அதிகாரம் பெற்றிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் தளபதி பானர்மென்னை நீதிபதி ஸ்தானத்தில் வீற்றிருக்கச் செய்திருந்தனர்.

வெள்ளைக்காரனின் நயவால் அத்தாணியில் பொம்மை ராஜாக்களாக இருந்த சில சுயநலமிகள் தமிழ் நாட்டின் மானம் காத்த குற்றத்துக்காக வீரபாண்டியக் கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்து அவனைக் கைதிக் கூண்டில் நிறுத்தி வைத்திருந்தனர்.

"மானம் பெரிதல்ல; வாழ்வே பெரிது!" என்று வெள்ளைக்காரன் வேண்டும்போதெல்லாம் அவனுக்குக் குற்றேவல் புரிந்து வந்த மற்றப் பாளையக்காரர்களில் பலர், அவர்களுக்கு எதிரே இரு புறத்திலும் வரிசைக் கிரமமாக நின்று கொண்டிருந்தனர்.

ஆம், தளபதி பானர்மென்னின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்துதான்!

விசாரணை ஆரம்பமாயிற்று; தளபதி வெள்ளையன் குற்றப் பத்திரிகையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்:

அண்டிப் பிழைக்க வந்து, ஆர்க்காட்டு நவாபைக் கடன் கொடுத்து அடிமை கொண்ட வெள்ளை அதிகார வர்க்கத்தின் ஆட்சிக்கு அடிபணிய மறுத்தது ஒரு குற்றம்.

அவனுக்குக் கப்பம் கட்ட மறுத்தது இன்னொரு குற்றம்.

கலெக்டர் ஜாக்ஸன்னைப் பேட்டி காண மறுத்தது மற்றொரு குற்றம்.

தமிழ் மக்களின்—ஏன், புகழ்பெற்ற மூவேந்தர் ஆண்ட தமிழ்த் திரு நாட்டின்—மானத்தைக் காப்பதற்காக வெள்ளையனைப் போரில் புறமுதுகிட்டோடச் செய்தது மற்றுமொரு மன்னிக்க முடியாத குற்றம்!

இவ்வாறு பல குற்றச் சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போனான் தளபதி; மானங்கெட்ட தமிழர்கள் சாது போல அதற்குச் சாட்சி!

வீரபாண்டியக் கட்ட பொம்மனோ தன் மீது சாட்டிய குற்றங்கள் அனைத்தையும் கேட்டு எள்ளி நகையாடினான்.

அவனுடைய சிரிப்பு அங்கே கூடியிருந்த பாளையக்காரப் பதர்களுக்கு நெருப்பாயிருந்தது!

"உன்னுடைய குற்றங்களை மறுத்து ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

இது, பாஞ்சாலங் குறிச்சி வீரனை கட்டபொம்மனை நோக்கிப் பரதேசி வெள்ளையனான பானர்மென் கடைசியாகக் கேட்ட கேள்வி.

"என்னைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றவும், என்னுடைய குற்றங்களை விசாரிக்க



வுடைய நீ தகுதியற்றவன். எனவே, உன்னுடைய கேள்விகள் எதற்குமே நான் பதில் சொல்லப் போவதில்லை!”

இது, நிராயுதபாணியானாலும் நெஞ்சில் உரம் மிக்க வீரபாண்டியக் கட்டபொம்மனின் பதில்.

இந்தத் திடுக்கிடும் பதிலைக் கேட்டதும் அடிபட்ட பூனையைப்போல் சீறினான் பானர்மென். ஆயினும் என்ன?—அவனால் கட்டபொம்மனின் மானத்தைப் பறிக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக எத்தனை நாட்கள் இருந்தாலும் என்றைக்காவது ஒருநாள் போயே போய்விடப் போகும் உயிரைத் தான் பறிக்க முடிந்தது!

“போடுங்கள், இவனைத் தூக்கில்!” என்று அந்த வெறி பிடித்த வெள்ளையன் தன் அடிவருடிகளுக்கு உத்தரவிட்டான்.

எதற்காக?

“அடிமை வாழ்வை விரும்பேன்; சுதந்திரமாகவே இருப்பேன்!” என்று சொன்னதற்காகத்தான்!

•••

இந்தியாவில் வெள்ளையரை எதிர்த்து முதன் முதலில் நடந்த சுதந்திர யுத்தம் தென்னாட்டைச் சேர்ந்த சின்னஞ் சிறு பாஞ்சாலங் குறிச்சியில்தான் நடந்தது. என்ன காரணத்தாலோ அந்தப் பெருமை வட நாட்டைச் சேர்ந்தது. அதாவது, 1857-ம் ஆண்டில் வடநாட்டில் நடந்த சிப்பாய்களின் புரட்சிதான் இந்தியாவின் முதல் சுதந்திர யுத்தம் என்று சிலர் சாதிக்கிறார்கள். அவ்வாறு சாதிக்கும்போது அதற்கும் முன்னால் 1806-ம் ஆண்டில் வேலூரில் நடந்த சிப்பாய்களின் புரட்சியை நல்ல வேளையாக அவர்கள் மறந்துவிடவில்லை. வடநாட்டில் நடந்த சிப்பாய்களின் புரட்சிக்கு அதை ஒத்திகையாக எடுத்துக் கொண்டு விட்டனர். பாஞ்சாலங் குறிச்சிப் போரும் அதை நடத்திய நம் தமிழ்நாட்டு வீரர்களும்தான் ஏனோ அவர்களுடைய நினைவில் இல்லவேயில்லை!

சேர சோழ பாண்டியர்களின் ஆட்சிக்குப் பிறகு ஆளவந்தாராக வந்த மதுரை நாயக்க வம்சத்தாரால் தமிழ்நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டுக் கிடந்த காலம். ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒவ்வொரு பாளையக்காரன் இருந்தான். ஆனால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிற்றரசருக்குரிய அந்தஸ்து இருந்தது. அவர்களில் நாற்பத்தேழாவது பாளையக்காரனாக வந்தவன்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன். திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த பாஞ்சாலங்குறிச்சி அவனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் பெருமையைப் பெற்றிருந்தது.

வீரபாண்டியனைத் தவிர மற்ற பாளையக்காரர்கள் யாவரும் அப்போது யார் தங்களை அடிமைப் படுத்த வந்தாலும் அவர்



களுக்கு அடங்கி ஒடுங்கி நடந்தனர்; அவர்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தனர்; கைகட்டி வாய்பொத்தி நின்று கப்பமும் கட்டினர்.

தங்களுடைய சிம்மாசனத்தைத் தவிர வேறு எதையுமே அவர்கள் பெரிதாகக் கருதவில்லை!

இவர்களுக்கு நேர் விரோதமாக இருந்தான் கட்டபொம்மன். அவன் யாருக்கும் அடிமைப்படவில்லை; அவர்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை; கைகட்டி வாய்பொத்தி நின்று கப்பமும் கட்டவில்லை.

ஆம், தன்னுடைய மானத்தைத் தவிர வேறு எதையுமே அவன் பெரிதாகக் கருதவில்லை!

கொள்ளையடிக்க வந்த வெள்ளைக் கொக்குகள் பாஞ்சாலங்குறிச்சியைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன. வீரபாண்டியக் கட்டபொம்மனை எப்படியாவது அடிமை கொண்டுவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் மாக்ஸ்வெல் என்னும் ஆங்கிலத் தளகர்த்தன் படாத பாடு பட்டான். அதற்கு முதற்படியாகக் கட்டபொம்மனிடம் கப்பம் வசூலிக்க முயன்றான்.

முடியவில்லை!

அடுத்தாற்போல் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் கலெக்டராக நியமிக்கப்பட்ட ஜாக்ஸன் என்னும் துரை பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்தான். அவன் உடனே தன்னைத் தனியாக வந்து பார்க்கும்படி வீரபாண்டியக் கட்டபொம்மனுக்குக் கடிதம் எழுதினான். ஏன் தனியாக வரவேண்டுமாம், தெரியுமா? —சுலபமாகச் சிறைப் பிடிப்பதற்கு!

அவனுடைய எண்ணத்தை ஒருவாறு ஊகித்தறிந்து கொண்ட ராஜதந்திரி வீரபாண்டியன், "பரிவாரங்களோடுதான் வருவேன்!" என்று அவனுக்கு முகத்தில் அடித்தாற் போல் பதில் எழுதினான்.

கட்டபொம்மன் பரிவாரங்களோடு வந்து தன்னைப் பார்ப்பதைக் கலெக்டர் விரும்பவில்லை; அதேமாதிரி கலெக்டரைத் தனியாகச் சென்று பார்ப்பதற்குக் கட்டபொம்மனும் விரும்பவில்லை.

இது விஷயமாக இருவருக்கும் பல நாட்கள் கடிதப் போக்குவரத்து நடந்தது; பலன்தான் பூஜ்யம், பூஜ்யம், பூஜ்யம்!

கடைசியில் ஒருநாள் தன்னைப் பரிவாரங்களோடு கட்டபொம்மன் பார்க்க வருகிறான் என்ற செய்தி கலெக்டரின் காதில் விழுந்தது. அவ்வளவுதான்; அவன் தனக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடி அங்குமிங்கும் ஓடினான். முடிவில் துரோகிகள் நிறைந்த இராமநாதபுரத்தில் தங்கிக் கட்டபொம்மனைச் சந்தித்தான். இருவருக்கும் பேச்சு ஆரம்பமாகி வாக்குவாதம் வலுத்தது.

முடிவில் "உன்னை இன்று சிறைப் பிடித்திருக்கிறேன்!" என்றான் ஜாக்ஸன்.

"நீ யார் என்னைச் சிறைப் பிடிக்க?" என்று சீறினான் கட்டபொம்மன்.

அதற்குள் மோட்ச சாம்ராஜ்யத்தை விரும்பிய கலெக்டரின் காவலர்கள் பலர் ஓடோடியும் வந்து, கட்டபொம்மனைக் கைது செய்ய முயன்றார்கள். அவர்களுடைய விருப்பத்தை உடனே நிறைவேற்றி வைத்தான் வீரபாண்டியன். ஆம், அவனுடைய வீர வாள்தான் அதற்குத் துணை புரிந்தது!

அங்கிருந்து ஒரே பாய்ச்சலில் கலெக்டர் தங்கியிருந்த மாளிகையின் வாயிலைக் கடந்து செல்லக் கட்டபொம்மன் முயன்றபோது, அவனைக் கட்டிப் பிடித்துவிடலாம் என்ற ஆசையுடன் வாளை உருவிக்கொண்டு ஓடி வந்தான் தளபதி கிளார்க். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் அவன் தலையும் கீழே உருண்டது!

அப்புறம் கேட்க வேண்டுமா? வெகுண்டெழுந்த கலெக்டரின் காவலர்களுக்கும் கட்டபொம்மனின் காவலர்களுக்கும் கை கலந்தது. இந்தக் கை கலப்பில் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டவர்கள் கட்டபொம்மனின் சகோதரர்களான தளவாய் குமாரசாமியும் ஊமைத் துரையும் ஆகும். இவர்களுடன் இன்னொருவனும் குறிப்பிடத் தக்கவன். அவன்தான் தமிழ் மக்களால் "பாதர் வெள்ளை" என்று செல்லமாக அழைக்கப்பட்ட வெள்ளையத் தேவன்.

வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டுகளை எதிர்த்துத் தமிழரின் வேல்களும் வாள்களும் நீண்ட நேரம் போரிட்டன. கடைசியில் வெற்றி பெற்ற கட்டபொம்மன் வீர முழக்கத்துடன் பாஞ்சாலங் குறிச்சிக்குத் திரும்பினான்.

ஜாக்ஸனுக்குப் பின்னால் வந்த கலெக்டரான லூஷிங்டன் வழக்கம்போல் தன்னைத் தனியாக வந்து பார்க்கும்படி கட்டபொம்மனுக்குக் கடிதம் எழுதினான். ஒரு கடிதம் அல்ல; பல கடிதங்கள் எழுதினான். ஒன்றும் பலனில்லை.

அலுத்துப்போன லூஷிங்டன் வீரபாண்டியக் கட்ட பொம்மனைச் சிறைப் பிடிப்பதற்குப் போதிய படையை அனுப்பி

புது லட்சணம்

★

தேச பக்தி என்பதற்கு இன்று புது லட்சணம் வகுக்க வேண்டும். முன்பு தேசபக்தி என்பது வெறும் போராட்டமாயிருந்தது. இன்று கடின உழைப்பே தேச பக்தி. — ராஜாஜி.

வைக்குமாறு சென்னையிலிருந்த கவர்னருக்குக் கடிதம் எழுதினான். உடனே தளபதி பானர்மென்னின் தலைமையில் ஒரு பெரும் படை திரண்டு வந்து பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை முற்றுகை இட்டது.

ஜய பேரிகை 'ஜாம், ஜாம்' என்று முழங்க, ஆயிரமாயிரம் வேல்களும் வாள்களும் 'பளிச், பளிச்' என்று மின்னி, 'கடக், கடக்' என்று ஒலி செய்தன.

பகைவரின் நெஞ்சம் கலங்கிற்று!

கோடை காலத்துச் சூறைக் காற்றில் 'சடசட' வென்று உதிரும் புளியம் பழங்களைப் போல வெள்ளையர்களின் தலைகள் 'மடமட' வென்று உதிர்ந்தன.

எண்ணில் அடங்காத கழிகள் 'ஜொய், ஜொய்' என்று பண் இசைத்துச் சுழன்று, 'மளார், மளார்' என்று வெள்ளையரை விரட்டி அடித்தன.

பாஞ்சாலங்குறிச்சியின் வீர மண்ணை எதிரிகளான வெள்ளையரின் இரத்தம் பாழ்படுத்திற்று!

இடையிடையே 'டுடும், டுடும்' என்று துப்பாக்கிகளும் 'டுமீர், டுமீர்' என்று பீரங்கிகளும் முழக்கத்தான் செய்தன. ஆயினும் வீரபாண்டியனின் உறுதி குலையவில்லை; அதற்குப் பதிலாக அவனுடைய கோட்டைதான் குலைந்தது.

லெப்டினண்ட் காலின்ஸ் என்பவன் கோட்டை வாயில் திறந்ததும் உள்ளே செல்ல முயன்றான். வெள்ளையத் தேவனின் கூரிய ஈட்டி அவனுடைய மார்பில் புகுந்து முதுகுவரை சென்று அவனை முகமன் கூறி வரவேற்றது!

பாவம், குதிரைமீதிருந்தபடியே 'ஹா!' என்று அலறிக் கீழே விழுந்தான் அவன்.

இந்தக் கோரக் காட்சியைக் கண்டு நெஞ்சம் குமுறினான் வெள்ளைத் தளபதி. அதற்குள் தன்னிடமிருந்த படைகளிலும் பெரும் பகுதி அழிக்கப்பட்டுவிடவே, அவன் வேறு வழியின்றி தாற்காலிகமாகப் போரை நிறுத்திக் கொண்டான். மேலும் போதிய சைன்யத்தை அனுப்பி வைக்குமாறு பாளையங் கோட்டைக்குச் செய்தி அனுப்பிவிட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் காவல் புரிந்தான்.

பாளையங் கோட்டையிலிருந்து வெள்ளையர் படை வந்தால் அதைத் தன்னிடமிருக்கும் படைகளைக் கொண்டு தடுத்து நிற்பது அசாத்தியம் என்று தோன்றிற்று வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு. எனவே, தமிழ் நாடு பூராவையுமே நீண்டகாலப் போருக்குத் தயார் செய்ய விரும்பினான் அவன். அதற்காகப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை விட்டு அந்த நிமிஷமே வெளியேறினான். அவனுடைய சகோதரர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

எனினும் வீர பாண்டியனின் மனோரதத்தைச் சில புண்ணியவான்கள் நிறைவேற முடியாமற் செய்துவிட்டார்கள். அவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்ட கட்டபொம்மனும் அவனுடைய சகோதரர்களும் கைது செய்யப் பட்டனர்.

இந்தத் துரோகச் செயலுக்குப் பிறகு தான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விசாரணை நாடகம் நடந்தது.


• • •

அஞ்சா நெஞ்சனை பாஞ்சாலங் குறிச்சி மன்னன் தூக்குமரத்தைக் கண்டும் துடி துடித்தானா?—இல்லை. அங்கிருந்த நாற்காலியின் மேல் அலட்சியமாக ஏறி நின்றான். தன்னைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த பாளையக்காரப் பதுமைகளை ஒரு முறை வெறுப்புடன் நோக்கி வெகுண்டு சிரித்தான். தன்னுடைய கழுத்தில் கயிற்றை மாட்ட வந்த வெள்ளையனை அப்பால் தள்ளி விட்டுத் தானே அதை எடுத்துத் தயங்காமல் மாட்டிக்கொண்டான். அடுத்த நிமிஷம் தன் கால்களாலேயே தான் ஏறி நின்ற நாற்காலியைத் 'தடா'லென்று கீழே உருட்டி விட்டான்!

கயவஞ்சக உலகத்திலிருந்தும், நாசகார சமூகத்திலிருந்தும் அவனுடைய ஆன்மா விடுதலை பெற்றுவிட்டது!

சுதந்திர புருஷனாகப் பிறந்து, சுதந்திர புருஷனாக வளர்ந்து, சுதந்திர புருஷனாகவே வாழ்ந்து, சுதந்திர புருஷனாகவே மறைந்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன்.

தமிழ்நாடு உள்ளளவும் தமிழர்கள் உள்ளளவும் அந்த மகாவீரனின் புகழ் மங்கத்தான் மங்குமோ, மறையத்தான் மறையுமோ!


சிறந்த சலவை ...
இந்த
OK
ஓ. கே. சலவை சோப்பு
கொண்டுதான்!
OK
தயாரிப்பாளர்கள்: ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், சென்னை.

வீரர் குல விளக்குகள்

ஜெயமணி

மொகலாய சக்கரவர்த்தி அக்பரின் ராஜ்யத்தில் புது வருஷப் பிறப்பை முன்னிட்டுக் காட்சிகளும் கேளிக்கைகளும் கோலாகலமாக நடந்துகொண்டிருந்தன. அரண்மனைக்கு உள்ளேயும் ஒரு காட்சி நடந்தது. அது பெண்களுக்கென்று பிரத்தியேகமாக நடந்த காட்சியாகும். அங்கு ஆண் வாடையே அடிக்கக் கூடாது! அந்தக் காட்சியில் அமைக்கப்பட்டிருந்த அழகிய கடைகளில் பெண்களின் கண்ணைக் கவரும் அலங்கார சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. மந்திரிகள், படைத் தலைவர்கள் முதலிய மற்றும் உயர்தர உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்மணிகள் சாமான்களை வாங்கிக் கொண்டும் காட்சி ஜோடனைகளைக் கண்டு அதிசயித்துக் கொண்டும் இருந்தனர்.

“அதோ அந்த அறையில் அற்புதமான காட்சி இருக்கிறது” என்றாள் ஒரு பெண் பிகானீர் இளவரசியிடம். மகா ரூபவதி என்று பிரசித்தி பெற்ற பிகானீர் இளவரசன் பிரதாபனின் மனைவிக்கு அது ஒரு சதி என்பது எப்படித் தெரியும்? ஏதோ காட்சி இருக்கிறது என்று அவள் ஆர்வத்துடன் அந்த அறைக்குள் சென்றாள்.

அவ்வளவுதான்! அறையின் கதவு திடீரென்று மூடிக்கொண்டது! எதிரே அக்பர் சக்கரவர்த்தி மீசையை முறுக்கிக்கொண்டு கள்ளச் சிரிப்புடன் நின்றார். அவரது அகத்தில் எழும்பிய கொடிய எண்ணத்தை முகத்தில் தோன்றிய விஷச் சிரிப்பு வெளிப்படுத்தியது!

அக்பர் அருகில் வந்தார். அந்த ரதி இனி தமது கையிலிருந்து தப்ப முடியாது என்பது அவருடைய நினைப்பு.

ஆனால், தனிமையில் சிக்கிய ரஜபுத்திர இளவரசி சிறிதும் கலங்கவில்லை. தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை ஆக்ரோஷத்துடன் உருவி, அக்பரின் மார்புக்கு நேராக நீட்டினாள். காட்சியைக் கண்டு களிப்பதற்காக வந்த காரிகை கத்தியுடன் வருவாள் என்று அக்பர் நினைக்கவில்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த அந்தக் கற்பரசியின் கோபமும் வீரமும் அக்பரை நடுங்கும்படி செய்தன. வெறி நீங்கி அவருக்கு ஞான புத்தி ஏற்பட்டது. இனி ரஜபுத்திரப் பெண்களிடம் அவ்வாறு நடந்து கொள்வதில்லை என்று சக்கரவர்த்தி சத்தியம் செய்து கொடுத்தார். தாமே கதவைத் திறந்து பிகானீர் இளவரசியை வெளியே போகும்படித் தலைவணங்கிக் கூறினார்!

• • •

பகைவர்களின் படையெடுப்பும் உள்நாட்டுச் சதியும் ரஜபுத்தானத்தின் எதிர்கால விதியைப் பரிகாசம் செய்வதுபோல் தோன்றின. எங்கு பார்த்தாலும் குழப்பம் நிலவியது. அந்த நிலையில், பட்டத்து இளவரசனான உதய சிம்மன் யாதொரு கவலையுமின்றிப் பஞ்சணைமீது படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். ஐந்து வயதே நிரம்பிய அந்தப் பாலகனை ராஜ்ய பாரத்தின் இன்னல்கள் அணுகவில்லை போலும்!

அறையின் மற்றொரு புறத்தில், உதய சிம்மன்மீது உயிரைக் காட்டிலும் அதிக வாஞ்சை வைத்திருந்த பன்னா என்ற தாதியும் ஐந்து வயதான அவளுடைய மகனும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அறைக்கு வெளியே திடீரென்று பேரிரைச்சல் கேட்டது. பாண வீரன் என்பான் ஆத்திரத்துடன் கதவைத் தட்டியதில், அரண்மனை முழுதும் அதிர்ந்தது. சதிகாரர்களான அவனுடைய சகாக்கள், “உதய சிம்மன் ஒழிந்தான்!” என்று கோஷமிட்டார்கள்.

பன்னா திடுக்கிட்டு எழுந்தாள். இளவரசன் உதய சிம்மனுக்கு ஏற்பட்ட ஆபத்தை உணர்ந்து கொண்டாள். இளவரசனுக்கு வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவிக்க வேண்டிய பாண வீரன், உதய சிம்மனைப் பலி கொடுக்கவே வந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டாள். சில விநாடி தாமதித்தாலும் குடி கெட்டுவிடும்.

> நாம் புகழுக்காகப் போர் புரியவில்லை; பொருளுக்காகப் போர் புரியவில்லை; கௌரவத்துக்காகப் போர் புரியவில்லை; சுதந்திரத்துக்காகப் போர் புரிகிறோம். முழந்தாளிட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும், நின்று கொண்டு இறப்பதே மேல்.
>
> —மாஜினி

தன்னுடைய மகனை இளவரசனின் படுக்கையில் போட்டு விட்டு, உதய சிம்மனைத் தோளில் தூக்கிக் கொண்டு சத்தடி செய்யாமல் பின் கதவின் வழியாக அரண்மனையிலிருந்து வெளியேறினாள்.

பாண வீரன் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்தான். உதிர வெறி பிடித்த பாணன், பஞ்சணை மீது உறங்குபவன் யார் என்று கூடப் பார்க்கவில்லை. அந்தப் பாலனே உதயசிம்மன் என்று நினைத்து, தாதி பன்னாவின் மகனை இரக்கமின்றி வெட்டி வீழ்த்தினான்.

தாதி பன்னா தன் மகனைத் தியாகம் செய்து உதய சிம்மனைக் காப்பாற்றினாள்! அந்தப் பெண் திலகத்தின் தியாகமே ரஜபுத்திரர்களின் சரித்திரத்தில் அக்ரஸ்தானம் பெற்று விளங்குகிறது!

ஏனெனில், அப்போது உதய சிம்மன் கொலையுண்டிருந்தால், மகாராணா வம்சம் பூண்டு அற்றுப் போயிருக்கும். இந்திய சரித்திரத்தை அலங்கரிக்கும் ரஜபுத்திர வீரர் குல திலகமான ராணா பிரதாப சிம்மன் ஜனித்திருக்க முடியாது.

• • •

அக்பரின் ஆட்சிக் காலத்தில் அவனுடைய இருதயத்தைக் கவர்ந்த பெருமை இருவருக்கு மாத்திரமே உரியது. ராணா பிரதாப சிம்மன் தன்னுடைய வீர பராக்கிரமத்தினாலும், பத்தா என்ற ரஜபுத்திர வீரன் தன்னுடைய உவமையற்ற தியாகத்தினாலும் அக்பரின் மனதைக் கொள்ளை கொண்டார்கள். இந்த உண்மையை முஸ்லிம் சரித்திராசிரியர்கள் கூட ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அதை அக்பர் சக்ரவர்த்தியே ஒப்புக் கொண்டிருக்கும் போது, முஸ்லிம் சரித்திராசிரியர்கள் எவ்வாறு மறைக்க முடியும்?

பத்தா என்ற ரஜபுத்திர வீரன் அக்பரையும் அவரது படைகளையும் எதிர்த்து நின்ற போது, அவன் பக்கத்திலும் மற்ற ரஜபுத்திர வீரர்களின் பக்கத்திலும் ஏராளமான பெண்மணிகளும் நின்று கொண்டு வீரப் போர் புரிந்தது அக்பருக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. பத்தாவின் மனைவி, தாயார், சகோதரி முதலியோர் அவனுக்கு உதவி யளிப்பதற்காகப் போர்க்களத்துக்கு வந்ததாயும், அந்த உதாரணத்தை மற்றப் பெண்களும் பின்பற்றியதாயும் அக்பர் தெரிந்து கொண்டார். அவர்கள் எல்லோரும் சிறிதும் தயங்காமல் போர் புரிந்து வீர சுவர்க்கம் அடைந்தனர். பரிசுத்தமான வீரர் குலத்தில் உதித்த தேச பக்தன் பத்தாவைத் தான் கொல்ல விரும்பவில்லை என்றார் அக்பர். "என் சடலத்தில் உதிரமும் உயிரும் உள்ளளவும் அக்பர் வெற்றி பெற முடியாது" என்று முழங்கினான் பத்தா! போர்க்களத்தில் மாண்ட பத்தாவுக்கும் அவனுடைய மனைவி, தாய், சகோதரிக்கும் அக்பர் மரியாதை செய்ததாகச் சரித்திரம் கூறுகிறது. தங்கள் ராஜ்யத்துக்காக பத்தா குடும்பத்தினர் செய்த தியாகத்தை அக்பர் மரணமடையும் வரையில் மறக்கவே யில்லை.

• • •

பாரத பூமியின் பெருமையையும் க்ஷத்திரிய தர்மத்தையும் நிலை நிறுத்துவதற்காக ரஜபுத்திரர்கள் காட்டிய வீரதீர பராக்கிரமங்களுக்கும், செய்த அரும் பெரும் தியாகங்களுக்கும் இன்னும் எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

ரஜபுத்திரர்கள் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். தாங்கள் பூஜித்து வந்த மும்மூர்த்திகளுக்காக அவர்கள் உடல்,பொருள், ஆவி யனைத்தையும் அர்ப்பணம் செய்யத் தயங்கியதில்லை.

அந்த மும்மூர்த்திகள் யார்? பாரத தேசம், ஹிந்து மதம், க்ஷத்திரிய தர்மம் இந்த மூன்றும்தான் அவர்கள் வணங்கி வந்த தெய்வங்கள். அவர்கள் அனுஷ்டித்த க்ஷத்திரிய தர்மத்தில் முக்கிய இடம் பெற்றவை பராக்கிரமம், சத்தியம், கற்பு இவைதான்.

லவன் கோட்டை என்பதே லாகூர் என்றும், ஸ்ரீ ராமபிரானின் மூத்த புதல்வனான லவன் ஆட்சி புரிந்த இடம் அதுதான் என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். லவனுடைய சந்ததிகள் தான் ரஜபுத்திரர்கள் என்றும் கூறப்படுகிறது.

சித்தூரைத் தலைநகரமாகக் கொண்டு மேவார் ராஜ்யத்தை ஆட்சி புரிந்து வந்த ரஜபுத்திர வம்சத்தில் 1150-ம் வருஷம் சமர் சிம்மன் என்ற வீரன் பிறந்தான்.

டில்லியை ஆட்சி செய்து வந்த பிரித்விராஜ னின் சகோதரி கர்மதேவியை விவாகம் செய்து கொண்டவன் அவன்தான். 1192-ம் வருஷம் ஷஹாப் உத்தின் கோரி டில்லி மீது படையெடுத்தபோது, பிருத்வி ராஜனும் சமர் ஸிம்மனும் போர்க்களத்தில் வீர சுவர்க்கம் அடைந்தனர்.

சமர் ஸிம்மனின் புதல்வன் கர்ணன் அப்போது குழந்தை. எனவே, அவனுக்கு முடி சூட்டி விட்டு, அவனது தாய் கர்மதேவியே ராஜ்யத்தை நிர்வகித்து வந்தாள். பிறகு டில்லி கவர்னரான குதாப் உத்தின் ராஜ புதனத்தின் மீது படையெடுத்தபோது, ரஜபுத்திர வீரர்கள் அடங்கிய படைக்குக் கர்ம தேவியே தலைமை வகித்துப் போரை நடத்தி, குதாப் உத்தின் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்தாள்!

* * *


கர்ணனின் மரணத்துக்குப் பின் அவனது மருமகனான ரூபன் பட்டத்துக்கு வந்தான். ரஜபுத்திரர் சரித்திரத்திலே பிரஸித்தி பெற்ற வீரர்களில் ஒருவனான பீம ஸிம்மன் மேலே குறிப்பிட்ட ரூபனின் சந்ததியில் உதித்தவன். டில்லியை அலாவுதீன் கில்ஜி ஆண்ட காலத்தில், அவனும் சித்தூர்மீது படை யெடுக்காமல் இருக்கவில்லை.

அலாவுதீன் படைகளுக்கும் பீம ஸிம்மன் படைகளுக்கும் பயங்கரமான போர் நடந்தது. அலாவுதீன் திடீரென்று பீம ஸிம்மனுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தயாரா யிருப்பதாக அறிவித்து, சூழ்ச்சியாக பீம ஸிம்மனைச் சிறைப்படுத்தினான்.

பீம ஸிம்மன் விடுதலை பெறுவதற்கு அலாவுதீன் ஒரு நிபந்தனை விதித்தான். பதிவிரதா ரத்னமான பீம ஸிம்மனின் மனைவி பத்மினி சகல சாமுத்திரிகா லக்ஷணங்களும் பொருந்திய ரூபவதி என்று பிரஸித்தி பெற்றவள். அந்த ரூபவதியைத் தான் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தால் பீம ஸிம்மன் விடுதலை பெறுவான் என்று அலாவுதீன் அறிவித்தான்.

அச் செய்தியைக் கேள்விப்பட்ட பத்மினி, அலாவுதீனிடம் தனக்கு மிகுந்த பிரேமை உண்டென்றும், எனவே, தானே நேரில் அலாவுதீன் இருக்குமிடத்துக்கு வருவதாகவும் கடிதம் எழுதினாள்.


அதைக் கண்டதும் அலாவுதீன் ஆனந்த பரவசம் அடைந்தான். பத்மினி வருவதை



குவாலியரில் உள்ள 'மனமந்திரம்' என்னும் ரஜபுத்திர மன்னர் கோட்டை

ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நூற்றுக் கணக்கான சிவிகள் சூழப் பத்மினி பல்லக்கில் ஏறிக் கொண்டு அலாவுதீனின் முகாமுக்கு வந்துசேர்ந்தாள். மேற்படி பெண்களின் கூட்டத்தைக் கண்ட மொகலாய வீரர்கள் மதிமிழந்து மகிழ்ச்சி யடைந்தனர். பீம சிம்மனும் விடுதலை செய்யப்பட்டான்.

ஆனால், திடீரென்று அலாவுதீனின் முகாம் அதிர்ந்தது. பெண் வேடம் தரித்திருந்த நூற்றுக் கணக்கான ராஜபுத்திர வீரர்கள் கத்திகளை உருவி மொகலாயர்களை வெட்டி வீழ்த்தினர். அலாவுதீன் உயிர் தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தான். பீம சிம்மனும் பத்மினியும் வெற்றி மாலை சூடி மறுபடியும் நகருக்குள் பிரவேசித்தார்கள்.



சித்தூர் வெற்றிக் கோபுரம்

எனினும், தனக்கு நேர்ந்த படுதோல்வியையும் அவமானத்தையும் அலாவுதீன் கில்ஜி மறக்கவேயில்லை. மீண்டும் சில வருஷங்களுக்குப் பின் ஏராளமான படைகளைச் சேகரித்துக் கொண்டு சித்தூர்மீது படையெடுத்து வந்தான். அப்போது நடந்த போரில், மேவார் மன்னன் ராணா லக்ஷ்மண சிம்மன் போர்க்களத்தில் வீர சுவர்க்கம் அடைந்தான். அந்த உக்ரமான யுத்தத்தில், லக்ஷ்மணசிம்மனின் புதல்வர்களில் ஒருவனைத் தவிர மற்றப் பதினொரு பேரும் மடிந்தனர். ராணியும் இளவரசிகளும் அக்னிப் பிரவேசம் செய்தார்கள். உயிர் தப்பிய புதல்வன் மாத்திரம் தந்திரமாக மேவாரை விட்டு வெளியேறினான்.

வெற்றியடைந்த அலாவுதீன் தன் வெறி தீரும் வரையில் சித்தூர் ஜனங்கள்மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டான். அவன் அப்போது செய்த கொலைகளும் கொடுமைகளும் கணக்கில் அடங்காது. பத்மினியிடம் படுதோல்வியடைந்த அவன், பெண்களைப் பலவந்தமாகத் துன்பப்படுத்தியும் சித்திரவதை செய்தும் தன் கொடுங்கோன்மையை ஸ்தாபித்தான்.

தப்பிச் சென்ற லக்ஷ்மண சிம்மனின் புதல்வன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவ்வாறு செய்யவில்லை. மீண்டும் படைகளைத் திரட்டி வந்து போர் புரிந்து ராஜபுத்திர ராஜ்யத்தை அலாவுதீனிடமிருந்து கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தப்பிச் சென்றான். அவனுடைய ஆயுட்காலத்தில் அந்த ஆசை பூர்த்தி பெறவில்லை. எனினும், அவனுடைய புதல்வனும் ஏற்கெனவே போரில் வீர சுவர்க்கம் அடைந்த லக்ஷ்மண சிம்மனின் பேரனுமான ஹேமவீரன், மொகலாயர்களிடமிருந்து மேவாரை மீட்டுத் தனது மூதாதையர்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்து, ராஜபுத்திரர்களின் வீரத்தையும் நிலைநாட்டினான்.

அதிலிருந்து சுமார் நூறு ஆண்டுகள் வரையில் ராஜபுத்திர ராஜ்யத்தின் மீது படையெடுக்க யாரும் துணியவில்லை. நூறு வருஷங்களுக்குப் பிறகு ராணா கும்பனின் ஆட்சிக் காலத்தில் மேவார்மீது படையெடுத்த மால்வா மொகலாய மன்னன், கும்பனின் பராக்கிரமத்துக்கு எதிரே நிற்க முடியாமல் தோல்வியடைந்து சிறைப்பட்டான்.

மேற்படி மகத்தான வெற்றியின் ஞாபகார்த்தமாக ராணா கும்பன் 1448-ம் ஆண்டு எழுப்பிய வெற்றிக் கோபுரம் இன்னும் இருந்து வருகிறது. அது நிர்மாணிக்கப்பட்டு ஐந்நூறு ஆண்டுகள் சென்றுவிட்டன. ஆனால், இன்றும் கூட அந்தக் கோபுரம் கண்கவர் வனப்புடன் விளங்கிவருகிறது. ஒன்பது மாடிகள் உள்ள அக் கோபுரத்தின் உயரம் நூற்றுமுப்பது அடியாகும். ராஜபுத்திரர்களின் இணையற்ற வெற்றிக்கு அது சின்னமாக இருப்பதுடன், சிற்பச் சிறப்புக்கும் சிகரமாக விளங்குகிறது.

மேவார் ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காக ராஜபுத்திரர்கள் நிர்மாணித்த நாற்பத்தெட்டு கோட்டைகளில் முப்பத்திரண்டு கும்பனின் ஆட்சியின்போது நிர்மாணிக்கப்பட்டவை.

கும்பனின் பேரனான ஸங்கிராம சிம்மனின் ஆட்சிக் காலத்தில் ராஜபுத்திரர்களின் பெருமை இன்னும் பன் மடங்கு உயர்ந்தது. ராஜபுத்திர மன்னர்கள் அதுவரையில் படையெடுத்து வரும் பகைவர்களையே எதிர்த்துப் போர் புரிந்தனர். ஆனால், அவர்கள் படையெடுக்க முடியாமல் அவர்கள்மீது தாமே படையெடுத்து, அவர்களை என்றுமே படையெடுக்க முடியாதவாறு முறியடித்துவிட வேண்டும் என்பது ஸங்கிராம சிம்மனின்

திட்டம். அந்தத் திட்டத்துக்கு இணங்க ஒற்றுமையின்றிச் சிதறிக் கிடந்த ராஜபுத்திர சிற்றரசர்களை ஒன்று சேர்த்துக்கொண்டு அவன் பாபர் மீது படை யெடுத்தான். அந்த யுத்தத்தில் பாபரின் சைன்யம் படு தோல்வியுற்றது. பாபர் சமாதானம் செய்து கொள்ளத் தயார் என்று கெஞ்சினான். ஆனால், அந்தக் கோரிக்கைக்கு ஸங்கிராம சிம்மன் இணங்கவில்லை.

எனினும், ஸங்கிராம சிம்மன் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது. போரில் தோல்வியுற்ற பாபர் ஆத்திரம் அடைந்து மீண்டும் பீரங்கிகளுடன் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு வந்தான். மொகலாயர் படைகளை எதிர்த்துப் பதினெட்டு தடவை வெற்றி பெற்ற ஸங்கிராம சிம்மன், விதியின் வலிமையை எதிர்த்து நிற்க முடியவில்லை. 1527-ல் நடந்த பிரசித்தி பெற்ற அந்தப் போரில் பாபர் படையே வெற்றி பெற்றது.

பற்பல போர்களிலும் ஈடுபட்டு ஸங்கிராம சிம்மன் ஒரு கண்ணையும், ஒரு கையையும், ஒரு காலையும் இழந்தான். அவனுடைய தேகத்தில் கொடிய போரில் காயமடைந்ததன் விளைவாக எண்பது தழும்புகளுக்கு மேல் இருந்தன. அவை வெறும் தழும்புகளல்ல, இணையற்ற வீரச் சின்னங்கள்!

பாபரிடம் தோல்வியுற்ற ஸங்கிராம சிம்மன் மொகலாயர்களை முறியடித்தாலின்றி, தான் சித்தூருக்குள் மீண்டும் பிரவேசிப்பதில்லை என்று சபதம் செய்துவிட்டு வெளியேறினான். எனினும் அதிர்ஷ்ட லக்ஷ்மியால் கைவிடப்பட்ட ஸங்கிராம சிம்மன் தன்னுடைய சபதத்தை நிறைவேற்ற முடியாமலே 1528-ம் வருஷம் இந்த உலகை நீத்தான்.

• • •

ஸங்கிராம சிம்மனின் மரணத்துக்குப் பின் அவனுடைய புதல்வன் விக்ரமஜித்துடன் பாபர் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான்.

விக்ரமஜித்தோ புலிக்குப் பிறந்த பூனையாக இருந்தது ராஜபுத்திரர்களுக்குக் கவலையைக் கொடுத்தது. எனவே, ராஜபுத்திர சிற்றரசர்கள் ஸங்கிராம சிம்மனின் மருமகனான உதய சிம்மனுக்கே பட்டம் சூட்டவேண்டும் என்று தீர்மானித்தனர். உதய சிம்மனுக்கு அப்போது ஆறு வயதுகூட நிரம்பவில்லை. ஆகையால், அவன் ராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளும் வயதுக்கு வரும் வரையில் ஸங்கிராம சிம்மனுடைய சகோதரனின் புதல்வனான பானவீரன் ரீஜண்டாக இருந்து ராஜ்ய நிர்வாகத்தை நடத்திவர வேண்டும் என்று முடிவு செய்தனர்.


பாவி பானவீரனோவெனில், ராஜ்யத்தைத் தானே அபகரித்துக் கொண்டுவிட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் விக்ரமஜித்தைக் கொலைசெய்ததோடு, உதய சிம்மனையும் ஒழித்துவிட முயன்றான். ஆனால், தெய்வச் செயலாக அவனது முயற்சி நிறைவேறவில்லை. உதய சிம்மன் பன்னா என்ற தாதியால் உயிர்தப்பின விவரம் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உதய சிம்மனைப் பத்திரமான ஓரிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காகத் தாதி பன்னா பட்ட கஷ்டங்கள் கல்லையும் கரைய வைக்கும். அவளுக்கு அடைக்கலம் அளிக்க யாரும் துணியவில்லை. எனவே, அவள் காட்டுப் பிரதேசங்களையும் மலைப் பிரதேசங்களையும் கடந்து இறுதியாகக் கமலமீர் கோட்டையில் உதய சிம்மனுடன் அடைக்கலம் புகுந்தாள்.

உதயசிம்மன் உயிர் தப்பிக் கமலமீர் கோட்டையில் வளர்ந்து வருகிறான் என்ற செய்தி ராஜபுத்திர சிற்றரசர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அந்த இரகசியத்தை யாரும் அதிக காலம் மறைத்து வைக்க முடியவில்லை.

பானவீரன் தான் செய்த வினையின் பலனை அனுபவிக்கும் காலம் நெருங்கியது. உதய சிம்மன் உயி

டாக்டரின் குறை!



நோயாளி:— இது வரையில் எத்தனையோ வைத்தியர்களுக்கு நூற்றுக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்து விட்டேன்!

டாக்டர்:-என்னங்க, போங்க! நம்மகிட்ட நீங்கள் முன்னமேயே வராமப் போனீங்களே!

கூடன் இருக்கிறான் என்பதைக் கேள்வியுற்ற ராஜபுத்திர சர்தார்கள் பாணவீரனை நாடு கடத்தி விட்டு, உதய சிம்மனை சிம்மாசனத்தில் ஏற்றினார்கள். பாண வீரன் உடனே ஓடிவிடவில்லை. ராஜபுத்திர வீரர்களுடன் போரை ஆரம்பித்தான். எனினும், அவர்களுடைய கோபித்த எதிர்ப்பின் முன்னிலையில் அவன் என்ன செய்ய முடியும்? மேற்படி போரில் அவன் தோல்வியடைந்து தன்னுடைய சகாக்களுடன் தக்ஷிணத்தை நோக்கி ஓட்டம் பிடித்தான். 1542-ம் வருஷம் உதயசிம்மனுக்கு வெகு விமரிசையாகப் பட்டாபிஷேக வைபவம் நடந்தது.

• • •

உதய சிம்மனுக்கு இருபத்தைந்து புதல்வர்கள் பிறந்தனர். அவர்களில் பிரதாப சிம்மன்தான் மூத்தவன். சக்த சிம்மன் இரண்டாவது குமாரன்.

அந்த இரண்டு சகோதரர்களும் கல்வியிலும் கத்தி வீச்சிலும் இணையற்றவர்களாக விளங்கினர். அவர்களின் மேதையையும் வீரத்தையும் கண்டு ராஜபுத்திரர்கள் பெருமிதம் கொண்டார்கள். ஆனால் அவர்களிடையே புகைந்துவந்த பொறாமைத் தீ பலருக்கும் மிகுந்த கலக்கத்தைக் கொடுத்தது. இறுதியில் மேற்படி தீ ஜ்வாலையாகக் கிளம்பியது. சக்த சிம்மன் குலத்தைக் கெடுக்க வந்த கோடரியானான். அவன் ராஜபுத்திரர்களின் ஜன்ம விரோதிகளான மொகலாயர்களிடம் அடைக்கலம் புகுந்து, ராஜபுத்திரர்களுக்கே விரோதியானான்.

எனினும் தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும் அல்லவா? மொகலாயர்களின் கைப் பொம்மையாக இருந்த சக்த சிம்மனின் மனதை, ராணா பிரதாப சிம்மனின் வீரமும் விடா முயற்சியும் இறுதியில் மாற்றி விட்டன. பிறகு சக்த சிம்மன் ராணா பிரதாபனுக்கு உதவியாக நின்று, தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட களங்கத்தை அகற்றிப் புகழ்பெற்றான்.

இந்நிலைமையில், இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த பாபர் 1530-ம் ஆண்டு காலமானான். அவனுடைய புதல்வனான ஹுமாயூன் எட்டு வருஷ காலம் ஆட்சி புரிந்த பின் கனோஜ் போர்க்களத்தில் ஷேர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்டது சரித்திரப் பிரசித்தமான சம்பவம். அந்தப் போரில் தோல்வியுற்ற ஹுமாயூன் ராஜ்யத்தை விட்டு ஓட நேர்ந்தது. அவ்வாறு ஓடிய ஹுமாயூன் பதினைந்து வருஷ காலம் வரையில் படாத பாடு பட்டான். காலச் சக்கரம் ஒரு முறை சுழன்றது. ஹுமாயூனுக்கு மீண்டும் அதிர்ஷ்டம் அடித்தது.

அவன் பாரசீகத்திலிருந்து ஏராளமான படைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து, ஷேர்ஷாவின் சந்ததிகளைத் தோற்கடித்து மொகலாய சாம்ராஜ்யத்தை மீண்டும் ஸ்தாபித்தான்.

ஹுமாயூனுக்குப் பிறகு அக்பர் மொகலாய சக்ரவர்த்தியானதிலிருந்து, மொகலாயர்களின் அதிர்ஷ்டச் சக்கரம் அதி வேகமாகச் சுற்றத் தொடங்கியது. பல போர்களிலும் அக்பருக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்து வந்தது. இருந்தாலும் மேவார ராஜ்யம் தங்கள் கைக்கு வந்தாலன்றி, மொகலாயரின் வெற்றி பூரணமாகாதென்று அக்பர் கருதினார்.

ஆனால், ராணா பிரதாப சிம்மனின் பராக்கிரமத்தினாலும் விடா முயற்சியினாலும் தியாகத்தினாலும் அக்பரின் மனக்கோட்டை இறுதிவரையில் நிறைவேறவில்லை.

• • •

உலக சரித்திரத்திலேயே சித்தூரைப் போன்ற பயங்கர சம்பவங்கள் நிகழ்ந்த போர்க்களம் வேறு எதுவுமே இல்லை என்பது சரித்திராசிரியர்களின் முடிவு.

மேவார் ராஜ்யத்தின் தலைநகரான சித்தூரைப் பகைவர்கள் பலதடவை தாக்கினார்கள். பல தடவை சித்தூர் அழிந்து மீண்டும் சிருஷ்டிக்கப்பட்டது. தேசியப் போரில் சித்தூரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும் உயிர்த் தியாகம் செய்தனர். ஒவ்வொரு கோட்டையிலும், கல்லிலும், பாறையிலும் உதிரம் சிந்தியது.

ஆயிரக்கணக்கான பெண்கள் அக்னி ஸ்நானம் செய்து மறைந்த சம்பவம் சித்தூரைத் தவிர வேறெங்கும் நிகழ்ந்ததில்லை.

ராஜ புத்திர வீரர்களின் அழியாத புகழுக்கும், பாரத நாட்டின் பெருமைக்கும், இந்திய வீரர்களின் குலத்துக்கும், அணையாத தீபங்களாக விளங்கும் கர்மதேவி, பத்மினி, பீம சிம்மன், ஸங்கிராம சிம்மன், ராணா பிரதாப சிம்மன் போன்ற தியாக திலகங்களுக்கும் சித்தூரில் உள்ள பல கோட்டைகள் சிரந்தர ஞாபகச் சின்னங்களாக இப்போதும் விளங்கி வருகின்றன.

எழுத்தின் சக்தி

எஸ்.வி.எஸ்

எழுத்தின் சக்தியைப்பற்றி ஒரு எழுத்தாளன் சொன்னால் தற்புகழ்ச்சியாகத் தோன்றும். ஆனால் வாளைச் சுழற்றிக் குண்டைப் பொழிந்து வீர தளபதியாக விளங்கியவர் கூறினால் யாருக்குமே நம்பத் தோன்றும்.

"உலகத்தில் இரு மாபெரும் சக்திகள் உண்டு. ஒன்று வாட் சக்தி; இன்னொன்று எழுத்தின் சக்தி. ஆரம்பத்தில் வாளின் சக்தியே வெற்றி பெறுவதுபோல் தோன்றும். கடைசியில் எழுத்தின் சக்தியே மாபெரும் வெற்றி பெற்று நிலைத்திருக்கிறது!" என்று கூறினார் வீர வாளோச்சிய சக்கரவர்த்தி நெப்போலியன். ஆம், நெப்போலியன் கூறியது எவ்வளவு வாஸ்தவம் என்பது 1776-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்காவில் என்ன நிகழ்ந்தது என்பதைப் பார்த்தால் தெரியவரும்.

1776-ம் ஆண்டு; குளிர்காலம்; பனி பெய்து கொண்டிருந்தது. அந்த வெடவெடக்கும் பனியில் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் குளிர் தாங்க முடியாது தவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் சொல்லாமல் கொள்ளாமல் தத்தம் வீட்டை நோக்கி நடக் கொண்டிருந்தனர். "ஆமாம், யாருக்கு வேண்டும் இந்தச் சுதந்திரம்?" என்றனர் சிலர். "சுயராஜ்யம் வந்தால் என்ன! பிரிட்டனே தான் ஆண்டால் என்ன?" என்று 'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன?' என்ற மனோபாவத்தில் பேசினர்.

இவ்வாறு தம் போர் வீரர்களின்—மக்களின்—உத்சாகம் குன்றுவதைப் பார்த்த தளபதி வாஷிங்டன் 'சுதந்திரம் என்ற பிறப்புரிமை கூட வேண்டாம் என்கிறார்களே!' என்று வருத்தமுற்றார். ஆனாலும் இந்தச் சோர்ந்து போன வீரர்களைத் துள்ளி எழுந்து தாய் நாட்டுக்காகப் போர் செய்வது எப்படி? அவர்கள் உள்ளத்தில் நீறு பூத்திருக்கும் சுதந்திரக் கனலை மறுபடியும் கொழுந்து விட்டு எரியச் செய்வது எப்படி என்று கவலைக் கொண்டிருந்தார்.

அப்போது அந்தப் போர் வீரர்களிடையில் இங்குமங்கும் சென்று உத்சாகப்படுத்தி வந்த ஒரு பேனாவைப் பார்த்தார் தளபதி வாஷிங்டன். தேசத்தில் சுதந்திரப் புயலை எழுப்பிவிட்ட அந்த பேனா, இந்த நெருக்கடியான நிலையில் தோற்றுப் பின் வாங்கி உத்சாகம் குன்றியுள்ள போர் வீரர்களை வீறு கொண்டு எழச் செய்ய முடியாவிட்டால் வேறு யாராலும் முடியாது என்று தளபதி வாஷிங்டன் தீர்மானித்தார். ஆகவே அவரிடம் சென்று போர்வீரர்களை மேலும் உத்சாகப்படுத்துமாறு வேண்டிக் கொண்டார்.

போர் முரசையே மேஜையாகக் கொண்டு அவர் எழுதத் தொடங்கினார்:—

"இப்போது நம் ஆத்ம பலத்தையே—மனோதிடத்தையே சோதிக்கும் கஷ்டகாலம் நேர்ந்திருக்கிறது. கோடை வெயிலில் வீர நடை போட்ட போர் வீரனும், சுபிட்ச நிலையில் வாய்ச்சொல் வீரனாக விளங்கிய தேசபக்தனும்தான் இந்த நெருக்கடியான நிலையில் தேசத்துக்குத் தான் ஆற்ற வேண்டிய பணியிலிருந்து நழுவப் பார்க்கலாம். ஆனால் எவன் இந்த நெருக்கடியான நிலையில் தைரியம் குன்றாது நிற்கிறானோ, அவன்தான் தேசத்திலுள்ள ஆண் பெண் ஒவ்வொருவருடைய அன்புக்கும் பாத்திரனாகிறான். நரகம் என்று ஒன்றிருப்பதாகச் சொல்கிறார்கள். அதை வென்றாலும் வென்றுவிடலாம். கொடுங்கோல் ஆட்சி செலுத்துபவர்களை அவ்வளவு சுலபமாக வென்றுவிட முடியாது. ஆனாலும் ஒரு திருப்தி நமக்குண்டு. எவ்வளவுக்கெவ்வளவு நமது போராட்டம் கஷ்டமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றியில் நமக்குப் பெருமையும் புகழும் சந்தோஷமும் ஏற்படுமல்லவா? மலிவான விலையில் கிடைக்கும் சாமானை நாம் சாதாரணப் பொருளாகத்தானே கருதுகிறோம்? விலையின் உயர்வுதான் பொருளின் மதிப்பையும் உயர்த்துகிறது. ஆகவே, எந்தப் பொருளுக்கு எவ்வளவு விலை விதிக்கவேண்டும் என்பதை அவன் அறிவான். ஆகா! எவ்வளவு அருமையான உயர்ந்த பொருள் சுதந்திரம்!

இந்த அருமையான பொருளாகிய சுதந்திரத்துக்கு விலை சற்று அதிகமாக இராவிடில்தான் ஆச்சரியப்பட வேண்டும்."

இவ்விதம் அமெரிக்கர்கள் 1776-ம் ஆண்டு பிரிட்டிஷ் காரர்களால் மூறியடிக்கப்பட்டுப் பின் வாங்கிக் கொண்டிருந்த நிலையில் மேற்கண்ட அருத்தறிவுக்கு ஒத்த வாசகங்களை எளிய நடையில் எழுதி, வாசித்துப் போர் வீரர்களை மறுபடியும் போர் புரியச் செய்தார். இவ்விதம் அவர் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் போர் வீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தேச பக்தியும் ஊட்டக்கூடிய கட்டுரைகள் எழுதி வழங்கினார். அந்தக் கட்டுரைகளுக்கு "நெருக்கடிக் கட்டுரைகள்" என்று பெயர்.



தாமஸ் பெயின்

இவ்விதம் அமெரிக்கர்களின் சுதந்திரப் போராட்டத்தில் பேருதவி புரிந்த இந்த வர்தான் தாமஸ் பெயின் என்ற பிரிட்டிஷ்காரர். இங்கிலாந்தில் பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். ஏழையாகப் பிறந்த காரணத்தால் சிறு வயது முதலே என்னென்னவோ வேலைகளில் இருந்தார். அவருடைய இருபத்தைந்தாவது வயதில் கலால் இலாக்காவில் சேர்ந்தார். அதில் மலிந்து கிடந்த லஞ்சமும் ஊழலும் அவர் மனதைப் பெரிதும் நோகச் செய்தது. ஆம், கலால் இலாக்காவில் வரி வசூலிப்பவர்கள் யோக்யமாக வேலை செய்தால் பஞ்சத்தாலும் பட்டினியாலும் சாகவேண்டியது தான். அதனால்தான் அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள். மேலும் அவர்கள் பெற்று வந்த சம்பளம் சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நிர்ணயிக்கப் பட்டது. அதற்குப் பிறகு விலைவாசிகள் விஷம்போல் ஏறியிருந்தன. தாங்கள் பெற்று வந்த சம்பளத்துக்கும் அவ்விலைக்கும் யாதொரு சம்பந்தமும் இருப்பதாகத் தோன்றாததால் லஞ்சம் வாங்கினர். ஆகவே, தாமஸ்பெயின் கலால் இலாக்காக்காரர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, அவர்கள் குறைகளை யெல்லாம் எழுதி, பிரிட்டிஷ் சட்டசபைக்கு ஒரு நீண்ட மகஜர் அனுப்பி வைத்தார். அதன் விளைவாக, தாமஸ் பெயின் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து உடனே நீக்கப்பட்டார்!

தாமஸ் பெயின் இவ்விதம் தம் தாய் நாட்டில் ஜனநாயகம் என்று பெயர் சொல்லிக் கொண்டு உண்மையில் முடியாட்சியின் கொடுங்கோன்மை நடப்பதைப் பார்த்தார். ஜனங்களின் பிரதிநிதிகளுக்கு, ஜனசமூகத்துக்கு நன்மை செய்யும் நோக்கமின்மையைக் கண்டார். ஆகவே, தம் தாய் நாட்டில் வெறுப்பு ஏற்பட்டு, அமெரிக்காவுக்குச் சென்றார்.

அமெரிக்காவுக்கு தாமஸ் பெயின் போய்ச் சேர்ந்ததற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரசாங்க மதக் கொள்கையுடனும், மதஸ்தாபனத்துடன் மாறுபட்ட கொள்கையைப் பேசியவர்களும் கடைப் பிடித்தவர்களும், இங்கிலாந்தில் பகைவர்களாகவும் ராஜத் துரோகிகளாகவும் கருதப்பட்டனர். ஆகவே, அவர்கள் இங்கிலாந்தை விட்டு அமெரிக்காவில் குடியேறினர். இயற்கை வளம் பொருந்திய நாட்டைப் பண்படுத்திச் சீர் செய்து உற்பத்தியை ஒன்றுக்கு நூறாகப் பெருக்கினர். இதனால் அமெரிக்காவுக்குத் தப்பி ஓடி வந்தவர்கள் சந்ததி சந்ததியாகப் பெருகிச் சுபிட்சமாக வாழ்ந்தனர்.

ஆகவே, பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அவர்கள்மீது வரி விதித்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் அமெரிக்கர்களை ஆட்சி புரிய கவர்னர்களை அனுப்பியது. கவர்னர்கள் அமெரிக்கர்களை அடக்கி ஆளச் சிறு படையும் அனுப்பிவைத்தது. இவ்விதம் இங்கிலாந்திலிருந்து தப்பி ஓடிவந்தவர்கள் மீது பிரிட்டன் எதேச்சாதிகாரம் செய்தது. இதைக் கண்ட அமெரிக்கர்கள் விழிப்படையத் தொடங்கினர். "பிரிட்டனிடமிருந்து நாம் பெறக் கூடிய நன்மை ஒன்றுமே இல்லாதிருக்க நம்மீது அந்நாடு ஆட்சி செலுத்துவானேன்?" என்று எண்ணத் தொடங்கினர். சுதந்திரக் கனல் சுடர்விடத் தொடங்கியது. அந்தச் சமயம்தான் தாமஸ் பெயின் அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தார்.

தாமஸ் பெயின் அமெரிக்காவுக்கு வந்ததிலிருந்தே கண்ணையும் காதையும் நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டிருந்தார். அமெரிக்க வியாபாரிகள், பிரிட்டனின் வெளி நாட்டு வியாபாரக் கொள்கையால் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருப்பதைப் பார்த்தார்.

லெக்ஸிங்டன் என்ற ஊரில் முதல் புரட்சிப் போர் நடந்தது. அதன் விளைவாக பிரிட்டிஷார் பாஸ்டன் நகரில் ஒரு சில விவசாயிகளைக் கொஞ்சமும் ஈவு இரக்கமின்றித் தூக்கிலிட்டனர். இதைக்கேட்ட அமெரிக்காவிலிருந்த பதின்மூன்று மாகாணத்தாரும் துள்ளி எழுந்தனர். இது நிகழ்ந்த ஏழாவது மாதம்தான் "பகுத்தறிவு—எழுதியது ஒரு இங்கிலீஷ்காரன்" என்ற ஒரு சிறு புஸ்தகத்தைத் தாமஸ் பெயின் வெளியிட்டார்.

அந்த நாட்களில் அமெரிக்கர்களில் சில விதவாதிகளிருந்தனர். சுதந்தரப் போரில் அவர்கள் பரிபூரண அனுதாபம் காட்டவில்லை. அதனால் 'பகுத்தறிவு' எழுத வேண்டியதாயிற்று. ஒரு சிலர் பிரிட்டனைத் தாய்நாடு என்றும் தந்தைநாடு என்றும் அதற்குத் தன் குழந்தையாகிய அமெரிக்கா மீது அதிகாரம் செலுத்த உரிமையில்லையா என்றும் சொல்லி வந்தார்கள். அதற்குத் தாமஸ் பெயின் 'பகுத்தறி'வில் எப்படிப் பதில் சொல்லியிருக்கிறார் பாருங்கள்:

"பிரிட்டனைப் 'பெற்றோர் நாடு' என்று சொல்லுகிறார்கள் சிலர். அப்படியானால் அது நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால் வெட்கமாக இருக்கிறது, அவமானமாக இருக்கிறது. விலங்கினம் கூடத் தாம் பெற்றெடுத்த குட்டிகளை விழுங்குவதில்லை. காட்டுமிராண்டிகள் கூடத் தங்கள் குடும்பத்தினர் மீது போர் தொடுப்பதில்லை. ஆகவே மேலே சொன்னது உண்மையாயின் அது பிரிட்டனுக்குப் பாராட்டாக இல்லை; வசை மொழியாகவே விளங்குகிறது!"

இன்னோரிடத்தில் தாமஸ் பெயின் இன்னொரு வாதத்தைத் தவிடுபொடியாக்குவதைப் பாருங்கள்: "முன்பு பிரிட்டனுடன் தொடர்பு பூண்டிருந்ததால் அமெரிக்கா ரொம்பவும் முன்னேற்ற மடைந்திருக்கிறது; அதனால் இனியும் அமெரிக்காவின் எதிர்கால சுபிட்சத்துக்கும் முன்னேற்றத்துக்கும் பிரிட்டனுடைய தொடர்பு மிக அவசியம் என்று சொல்லுகிறார்கள். இதைவிட அர்த்தமற்ற வாதம் ஒன்றுமே கிடையாது. தாய்ப்பாலை உண்டு ஒரு குழந்தை வளர்ந்ததால் அது வயதுவந்து பெரியவனான பிறகும் வேறு எந்த ஆகாரமும் உட்கொள்ளக்கூடாது என்று சொல்லுவதைப் போல இருக்கிறது இது. எந்த நாட்டின் உதவியும் இல்லாமலே அமெரிக்கா இன்று முன்னேற்ற மடைந்துள்ள அளவு முன்னேறியிருக்கும். ஏன், அதற்கு மேலும் முன்னேறியிருக்கும்."

இவ்வித வாதங்களாலும் பிரதி வாதங்களாலும், அமெரிக்கக் கோரிக்கையைத் தெளிவுபடுத்தி மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட புஸ்தகம் 8,00,000 பிரதிகள் செலவாயின. எங்கு பார்த்தாலும் அதைப் பற்றியே பேச்சாக இருந்தது. அப்படிப்பட்ட தாமஸ் பெயினைத் தோல்வியுற்ற போர் வீரர்களுக்கு உற்சாக மூட்ட வாஷிங்டன் தேர்ந்தெடுத்ததில் ஆச்சரிய மென்ன இருக்கிறது?

வாஷிங்டன் எதிர்பார்த்தது போலவே நல்ல பலன் கிடைத்தது. அவருடைய எழுத்தின் சக்தி மக்களை வீறுகொண்டு எழச் செய்தது.

இங்கிலாந்தில் பிறந்து இங்கிலீஷ்காரர்களின் கொடுமையிலிருந்து விடுவிக்கப் பேருதவி புரிந்த தாமஸ் பெயினை அமெரிக்கர்கள் அந்த நாட்களில் மிகவும் அன்புடன் போற்றினர். தாமஸ் பெயின் என்ற பெயரையே 'டாம்பெயின்' என்று செல்லமாக மாற்றி அழைத்தனர்.

பின்னர் பிரான்ஸில் கோனாட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தனர். மக்கள் கொடுமையிலிருந்து விடுபடப் புரட்சி செய்தனர். அதிலும் தாமஸ் பெயின் பங்கெடுத்துக் கொண்டார்.

இவ்விதம் சுதந்திர வேட்கை கொண்டு மக்கள் எங்கெல்லாம் கிளர்ச்சி செய்தனரோ அங்கெல்லாம் மக்களின் கட்சியை வன்மையாக ஆதரித்து எழுதி வெற்றிக் கொடி நாட்டினார் தாமஸ் பெயின். அவர் எழுத்தின் சக்திக்கு இணையாக வேறு எதைத்தான் கூற முடியும்?

சுதந்திரம் என்பது மிகவும் அருமையான பொருள். அதை என்ன விலை கொடுத்து வாங்கினாலும் வாங்கலாம். ஒரு மனிதன் தன்னுடைய உடம்பைத் தவிர வேறு எந்த உடம்பிலும் புகுந்து வசிக்க விரும்பமாட்டான். அதைப் போல ஒரு தேசம் மற்றொரு தேசத்தின் கீழ் அடிமைப்பட்டு வாழ விரும்புவதில்லை. —காந்திஜி.



கோரி முகம்மது டில்லிமீது படையெடுத்து வந்தபோது பிருத்வி ராஜனும் மேவார் சமர் சிம்மனும் போர்க்களத்தில் வீர சுவர்க்கம் அடைந்தனர். சமர் சிம்மனின் புதல்வனான கர்ணன் அப்போது குழந்தை. எனவே, அவனுக்கு முடி சூட்டிவிட்டு சமர் சிம்மனின் மனைவி கர்மதேவி ராஜ்யத்தை நிர்வகித்து வந்தாள். கோரி முகம்மதுவின் பிரதிநிதி குதுப் உத்தீன் ஏராளமான படைகளுடன் ராஜபுதனத்தின்மீது படையெடுத்தான். கர்மதேவியின் படைகள் தோல்வியுற்றுக் கோட்டைக்குத் திரும்பின. அதைக் கண்ட கர்மதேவி வாளேந்திக் குதிரைமீதேறி, "ராஜபுத்திர வீரர்கள் புறமுதுகு காட்டுவதா? திரும்புங்கள் போர்க்களத்துக்கு! பகைவர்களை முறியடியுங்கள்! வெற்றி பெற்றால் வாழ்வோம்; இன்றேல் எல்லோரும் வீழ்வோம்" என்று கர்ஜித்தாள். வீரர்கள் உற்சாகம் கொண்டு, கர்ம தேவியின் தலைமையில் மீண்டும் போர் புரிந்தனர். அந்தப் போரில் கர்ம தேவி குதுப் உத்தீனைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்தாள்.



வட இந்தியாவில் பெரும் பகுதி முஸ்லிம் மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பிறகும் தலைவணங்காது நின்றவர்கள் ராஜபுத்திர வீரர்கள். வெற்றி அல்லது மரணம் என்று அவர்கள் போர்க்களத்தில் பாய்ந்தார்கள். பட்டாணியர்களையும் மொகலாயர்களையும் அங்குலம் அங்குலமாக எதிர்த்து நின்று போராடினார்கள். வெற்றி பெறாதவர்கள் வீர சுவர்க்கம் அடைந்தார்கள். மண்ணையும் பொன்னையும் காட்டிலும் ஆண்மையும் சுதந்திரமுமே அழியாத செல்வங்கள் என்பதை நிலைநிறுத்தினார்கள். இலட்சிய வீரர்கள் என்று அவர்கள் சரித்திரத்தில் அழியாத புகழ் பெற்றதைப்போல, மகாராணிகள், இளவரசிகள் உள்பட ஆயிரக்கணக்கான ராஜபுத்திர ரமணிகளும் அக்கினிப் பிரவேசம் செய்து தங்களுடைய கற்பைப் பாதுகாத்து சந்திர சூரிய நட்சத்திர மண்டலங்கள் உள்ள வரையில் என்றென்றும் பிரகாசிக்கும் புகழ் உடம்பு பெற்றார்கள்.



ராஜபுத்திர நாட்டில் ராஜகுலத்தில் உதித்தவர்கள்தான் வீரச் செயல்கள் புரிந்தார்கள் என்பதில்லை. பன்னா என்ற ஒரு தாதியின் தியாகம் ராஜபுத்திர நாட்டின் சரித்திரத்தையே மாற்றிவிட்டது! பாண வீரன் என்ற துஷ்டன் இளவரசனை உதய சிம்மனைக் கொல்ல வந்தான். அதை அறிந்த தாதி பன்னா, தூங்கிக்கொண்டிருந்த தன் மகனைக் கட்டிலின் மீது போட்டுவிட்டு, இளவரசனைத் தூக்கிக்கொண்டுபோய்க் காப்பாற்றினாள். இரத்த வெறி பிடித்த பாண வீரன், உதய சிம்மன்தான் என்று எண்ணித் தாதியின் மகனைக் கொன்றான். பன்னா தன் மகனைத் தியாகம் செய்து இளவரசனைக் காப்பாற்றி யிராவிடில், உதய சிம்மனின் பேரனும், மொகலாயர்களைக் கதிகலங்க வைத்த வீரனும், ராஜபுத்திரகுல திலகமுமான ராணா பிரதாப சிம்மன் ஜனித்துச் சுதந்திரக் கொடியை நிலைநாட்டி யிருக்க முடியாதல்லவா?



ராஜபுத்திர நாரீமணிகள் தியாகத்துக்குத் தயாராயிருந்தது போலவே எந்த நிலைமையிலும் அஞ்சாத வீர நெஞ்சம் படைத்திருந்தனர். பெரும் படைகளை முறியடித்துப் பல போர்களிலும் வெற்றிமேல் வெற்றி பெற்ற அக்பர் சக்கரவர்த்தி ஒரு சமயம் தம்முடைய அரண்மனையிலேயே படுதோல்வியுற நேர்ந்தது! மிகுந்த ரூபவதியான பிகானிர் இளவரசியை அக்பர் தமது சூழ்ச்சி வலையில் சிக்கவைத்தார். அரண்மனைக் காட்சிகளை வேடிக்கை பார்ப்பதற்காக வந்த இளவரசி ஓர் அறையில் பிரவேசித்ததும் கதவு திடீரென்று மூடிக்கொண்டது. தமது வலையிலிருந்து அவள் தப்பிச் செல்ல முடியாது என்று அக்பர் எண்ணினார். ஆனால், அவருடைய எண்ணத்தில் மண் விழுந்தது. அந்த வீரப் பெண் மறைத்து வைத்திருந்த வாளை உருவிப் பத்ர காளியாக மாறினாள். அந்தப் பெண்ணரசியின் கோபம் மதியிழந்த மன்னனின் மயக்கத்தைத் தெளிய வைத்தது. கற்பின் மகிமையை அக்பர் உணர்ந்தார். அவருடைய வாழ்க்கையின் போக்கே மாறுதல் அடைந்தது.




பாரத நாட்டின் விடுதலைப் போரின் சரித்திரத்தில் ஜான்ஸிராணியின் பெயர் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இளம் பிராயத்தில் எத்தனையோ இளவரசர்கள் லக்ஷ்மீ பாயின் காதலுக்குப் பாத்திரமாக வேண்டித் தங்கள் திருமுகம் தாங்கிய படங்களை அவளுடைய அரண்மனைக்கு அனுப்பி வைத்தனர். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி, "இவர்களில் யாருக்கு மாலையிட விரும்புகிறாய்?" என்று அன்னை கேட்டபோது, "இவர்களில் யாருக்கும் நான் மாலையிட மாட்டேன்; இதோ, என்னுடைய கையில் மின்னிக் கொண்டிருக்கும் இந்த வாளுக்குத்தான் மாலையிடுவேன்!" என்று அவள் வீர முழக்கம் செய்தாள். பிற்காலத்தில் இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஜான்ஸி ராணி வெள்ளையரை எதிர்த்து வீரப் போர் புரிந்தாள். நேருக்கு நேராக அந்த வீராங்கனையை எதிர்த்து நிற்க முடியாத ஓர் ஆங்கில 'ஆண் சிங்கம்' பின் புறமாக வந்து அவளை நயவஞ்சகமாகக் குத்திக் கொன்றான்.



"இந்து-முஸ்லிம் ஏக் ஹோ!" என்ற முறையில் தென்னிந்தியாவை ஆண்டு பெருமை யடைந்தவன் திப்பு சுல்தான். கஜினி முகம்மது போன்றவர்களுக்கு நேர்விரோதமாக அவன் இந்து மத ஆசாரியர்களிடமும் இந்து மதக் கோயில்களிடமும் விசேஷ மரியாதை செலுத்தினான். "ஆடாயிருந்து நூறு வருஷங்கள் உயிர் வாழ்வதைக் காட்டிலும் புலியா யிருந்து ஒரே ஒரு நாள் உயிர் வாழ்வேன்!" என்று அவன் சொன்னதோடு மட்டுமல்ல, வாழ்ந்தும் காட்டினான். திப்பு வேட்டை யாடிவிட்டுத் திரும்பும்போதெல்லாம் 'கொல்லும் வேங்கைப் புலி' யொன்றை அநாயாசமாகப் பிடித்துக்கொண்டு வந்து தன்னுடைய அரண்மனை வாசலில் கட்டுவது வழக்க மாம். அவ்வாறு ஒரு தடவை திப்பு சுல்தான் புலியைக் கொண்டுவந்து கட்டிவிட்டுத் தன் பட்ட மகிஷியிடம் கூறியதாவது:—"இதுவரை எத்தனையோ புலிகளைப் பிடித்துக் கொண்டு வந்து கட்டி விட்டேன். இருந்தாலும் என்ன பிரயோசனம்? இதோ இருக்கிறதே, இந்தப் பிரிட்டிஷ் சிங்கத்தைப் பிடித்துக்கொண்டு வந்து என்று கூண்டில் அடைக்கிறேனோ, அன்றுதான் என் மனம் திருப்தி யடையும்!" — இவ்வாறு கூறிய வீரன் தென்னிந்தியாவில் பிரிட்டிஷாரைக் கதிகலங்க அடித்தான் என்று, சரித்திரம் கூறுகிறது.




இந்தியாவில் 1857-ம் ஆண்டில் நடந்த இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பிரிட்டிஷார் எழுதிய சரித்திர புத்தகங்களில் 'சிப்பாய்க் கலகம்' என்று குறிப்பிட்டார்கள். அந்தப் போராட்டத்தின்போது நீல் என்னும் ஆங்கில தளபதி மனிதத் தன்மையற்ற பல கொடுஞ் செயல்களைப் புரிந்தான். தேசபக்தர்களிடம் மட்டுமல்ல—வயோதிகர்கள், வியாதியஸ்தர்கள், அங்கஹீனர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் — யாரிடமும் அவன் இரக்கம் காட்டவில்லை. ஊர் ஊராக, கிராமம் கிராமமாகக் கொளுத்திக்கொண்டே போனான்; தப்பிச் செல்ல முயன்ற நிரபராதிகளைச் சுட்டுப் பொசுக்கினான்; எஞ்சியிருந்தவர்களைப் பிடித்துத் தூக்கு மரத்தில் ஏற்றித் துடிதுடித்து இறக்கச் செய்தான். மொத்தத்தில் தன் கண்ணில் பட்ட எந்த இந்தியனையும் அந்தக் கிராதகன் உயிரோடு செல்ல அனுமதிக்கவில்லை. அத்தகைய கோர ராட்சதன் வெற்றிக் கோலத்துடன் லக்ஷ்மணபுரிக் கோட்டையை நெருங்கியபோது சாவோடு போராடிக் கொண்டிருந்த ஓர் இந்திய வீரனால் சுட்டுக் கொல்லப்பட்டான். சென்னை மௌண்ட் ரோட்டில் சிலை வடிவில் நின்று கொண்டிருந்த அந்தத் தூர்த்தனை இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி இருக்கும்போதே பிரதம மந்திரி ராஜாஜி பெயர்த்தெடுத்துக் கண்காட்சிச் சாலைக்கு அனுப்பி வைத்தார்.



"மானம் பொழியுது! பூமி விளையுது!
மன்னனுக் கிங்கே ஏது வரி?"

என்று கேட்டு வெள்ளையர்களைத் திணற அடித்தவர்கள் பாஞ்சாலங்குறிச்சி மக்கள். அவர்களுடைய பக்திக்குரிய பாளையக்காரனாக இருந்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன். தளவாய் குமாரசாமியும் துரைசிங்கமும் அவனுடன் பிறந்தவர்கள். துரைசிங்கம் பேசச் சக்தியற்றவனாயிருந்ததால் பாஞ்சாலங்குறிச்சி மக்கள் அவனை ஊமைத்துரை என்று அழைத்து வந்தனர். ஆர்காட்டு நவாப்பிடம் இரவல் அதிகாரம் பெற்றிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் வீரபாண்டியனிடம் கப்பம் வசூலிக்க முயன்றனர். அடிமை வாழ்வை விரும்பாத கட்டபொம்மன் கப்பம் கட்ட விரும்பவில்லை. இதன் காரணமாக யுத்தம் செய்ய நேரும் என்பதைப் பற்றி யோசிக்கும் போதெல்லாம் ஊமைத் துரை வீராவேசத்துடன் எழுந்து நின்று, "கவலை வேண்டாம்: அத்தனை வெள்ளையரையும் உமியை ஊதுவதுபோல் ஊதித் தள்ளிவிடலாம்!" என்னும் பாவனையில் தன் கையிலே கொஞ்சம் உமியை எடுத்து வைத்து அரைத்து அதைப் 'பூ' என்று ஊதிக் காட்டுவானாம்.



உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

பருகுங்கள்



விளையாட்டுக் காரருக்கும் சரி, பலஹீனருக்கும் சரி, போர்ன்-வீடா அதிக வன்மையும் அதிக புஷ்டியும் அளிக்கும் அதனால் அதிகசக்தியும்பெறுகின்றனர். குழந்தைகள் அதன் சாக்லேட் வாசனையை விரும்புகின்றனர். காலையிலும் மாலையிலும் ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு தேக் கரண்டியளவு கலந்து பருகவும்.

Cadbury
THE TREE OF HEALTH

-ஆரோக்கிய விருக்ஷம்-



CFY-I TA

காட்பரீஸ்
போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

கட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1417 பம்பாய் தபால் பெட்டி நெ 251 கல்கத்தா தபால் பெட்டி நெ. 1725 மதுரை

மந்திரத்தின் தந்தை

ஸோமாஸ்

அடிமைத் தளையில் கட்டுண்டு கிடந்த இந்திய மக்களுக்கு ஓர் இணையற்ற மந்திரம் கிடைத்தது. சோர்வுற்று வாடிய மக்களுக்கு, அலைகடலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் கப்பல் மாலுமிக்குக் கலங்கரை விளக்கம் கண்ணில் பட்ட மாதிரி, அந்த ஒப்பற்ற மந்திரம் கிடைத்தது. அன்னிய ஆட்சியின் போதையில் மயங்கிக் கிடந்த மக்கள் அந்த மந்திரத்தை உச்சரித்த மாத்திரத்தில் மயக்கம் தெளிந்தனர். அந்த மந்திரம்தான் சுயராஜ்யம் என்பது.

அந்த மந்திரத்தின் தந்தை ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி என்னும் மாபெரும் தேசபக்தர். இந்தியர்களுக்குச் சுயராஜ்யம் வேண்டும் என்று வற்புறுத்திய ஆதி புருஷராகிய நௌரோஜி இந்தியர்களுக்கு மாத்திரம் இந்த மந்திரத்தை உபதேசிக்கவில்லை. கடல்கடந்து சென்று இங்கிலாந்து முழுவதும் இந்த மந்திரத்தைப் பரப்பினர். அதன் பலனாகத்தான் சுயராஜ்ய மந்திரம் நம் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவலாயிற்று. சுயராஜ்ய மந்திரத்தின் தந்தையாகிய தாதாபாயின் வாழ்க்கை வீரம் செறிந்தது.

பெரியவர்கள் தங்களை வணங்கும் ஸ்திரீகளை 'நீ வீரர்களுக்குத் தாயாவாய்!' என்று ஆசி கூறுவார்கள். வீரர் என்றால் வில்லெடுத்துப் போர் புரிபவர் என்பது மாத்திரமல்ல; இது சாதாரண மக்கள் கூறும் பொருள். தேச நன்மையின் பொருட்டு, சமுதாய நல்வாழ்வின் பொருட்டு, அரிய பெரிய தியாகங்களைத் தன்னந் தனியனாகச் செய்து முடிப்பவனே வீரன். இத்தகைய வீரனைப் பெறுவதைக் காட்டிலும் பெண்மை பெறக்கூடிய பாக்கியம் வேறு ஒன்றுமில்லை. குஜராத் மாகாணத்தில் நௌஸாரி என்ற ஊரில் 1825-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4-ந் தேதி ஒரு பார்ஸி மாது இந்த பாக்கியத்துக்குப் பாத்திரமானள். அந்த வீரர்தான் தாதாபாய் நௌரோஜி.

இளமையிலேயே தந்தையை இழந்த தாதாபாயை அவர் தாயார்தான் வளர்த்தார். 'தந்தையொடு கல்வி போம்' என்னும் பெரியோர் வாக்கைப் பொய்ப்பித்தவர் நௌரோஜியின் தாயார். பின்னைப் பிராயத்திலிருந்தே அவரைக் கல்வி கேள்விகளில் ஆர்வமுள்ளவராக வளர்த்தார்; அன்னம் ஊட்டும்போது அவருக்கு அன்பையும் ஊட்டினர்; அவரிடம் அன்பு காட்டிப் பழகும்போது பல கதைகளைச் சொல்லி அவர் உள்ளத்தில் அறிவை நாட்டினர்.

தாதாபாய் பள்ளிக்கூடத்தில் படித்து முடிந்ததும் கல்லூரியில் சேர்ந்து மேற்கல்வி பயின்றர். தமது இருபத்தொன்பதாவது வயதில், அவர் படித்த எல்பின்ஸ்டன் கலாசாலையிலேயே கணித நூலும் இயற்கை நூலும் கற்பிக்கும் போதகராக உத்தியோகம் பெற்றர். சொற்ப காலமே அவர் அந்த உத்தியோகத்தை வகித்தார்.

உபாத்திமைத் தொழிலை உதறிய நௌரோஜி இங்கிலாந்து சென்று அங்கே வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டார். ஒரு பார்ஸி கம்பெனியார் லண்டனில் ஒரு கிளை ஸ்தாபித்து அந்தக் கிளைக்கு நௌரோஜியை மானேஜராக நியமித்தார்கள். வர்த்தகத் துறையில் இங்கிலாந்து அடைந்திருக்கும் அபரிமிதமான முன்னேற்றத்தைக் கண்ட நௌரோஜி, இந்தியாவின் வர்த்தக நிலைமையின் எளிமையை எண்ணி வருந்தினர்.

அந்தக் காலத்தில் இந்தியாவைப் பற்றி மேல் நாட்டார் மிகவும் கீழான அபிப்பிராயம் கொண்டிருந்தனர். இதைக் காண நௌரோஜி சகிக்க பொறுக்கவில்லை. லண்டன் இந்தியா சொஸைட்டி என்று ஒரு சங்கம் அமைத்து அதில் இந்தியர்களின் சிறந்த பண்பாட்டையும் உயர்ந்த கலைத்திறனையும் பற்றிப் பிரசங்கங்கள் நிகழ்த்தினர். இங்கிலாந்தில் இருந்த இந்திய இளைஞர்கள் உற்சாகத்துடன் தாதாபாயின் முயற்சிக்குப் பேராதரவு அளித்தனர். இந்தியாவைப் பற்றி நௌரோஜி, ஆங்கிலப் பத்திரிகைகளில் இடைவிடாமல் எழுதினர்; ஊர் ஊராகச் சென்று பிரசங்கங்கள் புரிந்தார். அவருடைய எழுத்தையும் பேச்சையும் ஆங்கிலேயர்கள் மிகவும் பாராட்டினர். நம் நாட்டைப் பற்றி மிகவும் கீழான அபிப்பிராயங் கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவும் ஆரம்பித்தனர்.

நௌரோஜியின் இந்தச் சேவை அந்நாள் துளிர்விட்டுக் கொண்டிருந்த இந்திய சுதந்திரத்துக்கு உரம் இடுவதாயிற்று. அக்காலத்து இந்தியப் பிரமுகர்கள் நௌரோஜியைப் பெரிதும் பாராட்டினர். அவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த சமயம் நௌரோஜி செய்த இணை

யற்ற சேவையைப் பாராட்டுவதற்காகஸர் பிரோஸிஷா மேத்தாவின் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டம் கூடியது. நௌரோஜிக்குப் பூமாலைகளும் புகழ் மாலைகளும் ஏராளமாகச் சூட்டப் பட்டன. ஒரு நிதி முடிப்பு வழங்கப்பட்டது. அந்த நிதியில் ஒரு காசுகூட, நௌரோஜி தம் சொந்த உபயோகத்துக்காக எடுத்துக் கொள்ளவில்லை. பொதுநலத்துக்காகவே அந்தத் தொகையைச் செலவிட்டார்.



அத்துடன் தாதாபாய் அமைதியாகத் தாய் நாட்டில் இருந்து விடவில்லை. மறுபடியும் இங்கிலாந்துக்குப் போனார். இந்தத் தடவை ஏழை இந்தியாவின் வருந்தத்தக்க வறுமை நிலையை மேல் நாட்டாருக்கு எடுத்துக் காட்டினார். அப்போது இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுகளைப் பற்றி விசாரிக்க பாலஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டிருந்தது. அதன்முன் சாட்சியம் கூற நௌரோஜியை ஒரு சாட்சியாக நியமித்திருந்தார்கள்.

தாதாபாய் அந்தப் பொறுப்பை மிகவும் திறமையுடன் வகித்தார். சர்க்கார் பிரசுரங்களையும் தக்க பிரமுகர்கள் எழுதியுள்ள இது சம்பந்தமான நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, இந்தியர்கள் பரம ஏழைகள், சராசரி வருமானம் ஒரு இந்தியனுக்கு இருபது ரூபாய்க்குமேல் இல்லை, ஆனால் வரிப்பளுவோ தலைக்கு மூன்று ரூபாய்க்கு மேலாகிறது என்று ரூபித்துக் காட்டினார். அது பெரும்பாலான ஆங்கிலேயப் பிரமுகர்களுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. பலத்த வாக்குவாதம் அதன் மீது தொடர்ந்தது. இந்தியாவிலுள்ள ஆங்கிலப் பத்திரிகைகள் நௌரோஜியைத் தாக்கி எழுதின. ஆங்கில உத்தியோகஸ்தர்களும் ஆட்சேபித்து எழுதினார்கள். வாதப் புயல் வளர்ந்தது. நௌரோஜி, அந்தப் போருக்கும் புயலுக்கும் மத்தியில் தம் அபிப்பிராயத்தை அஞ்சாமல் வலியுறுத்தினார்.

சில வருஷங்களுக்குப் பிறகு, நௌரோஜியின் மேற்கூறிய அபிப்பிராயம் ஆங்கிலேயர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. அப்போது வைஸராய் நிர்வாக சபையில் வரவு செலவு அங்கத்தினராயிருந்த ஸர் எவலின் பேரிங் என்பவர் வெகு சிரமப்பட்டுக் கணக்குகள் போட்டுப் பார்த்து, ஒரு பிரிட்டிஷ் இந்தியனின் சராசரிவருமானம், உயர்ந்த பட்சம் வருஷத்துக்கு ரூபாய் இருபத்தியேழுக்கு மேல் இல்லை என்று ஒப்புக் கொண்டார். இந்தியனின் சராசரி வருஷ வருமானம் இருபது ரூபாய்க்கு மேல் இல்லை என்பது நௌரோஜியின் அபிப்பிராயமாதலால் அவர் ஸர் எவலின் பேரிங்குக்குக் கடிதம் எழுதி, அவர் ரூபாய் இருபத்தேழு என்று சொல்லுவதற்கு ஆதாரங்கள் என்னவென்று கேட்டார். ஆனால் ஸர் எவலின் அவைகளைத் தெரிவிக்க முன் வரவில்லை. இருந்தாலும் நௌரோஜியின் அபிப்பிராயத்துக்கும் ஸர் எவலினின் அபிப்பிராயத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை யல்லவா? எப்படியும் இந்தியர்கள் பரம ஏழைகள் என்பது தெளிவாகி விட்டது. நௌரோஜியின் புகழ் இதனால் பன்மடங்கு உயர்ந்தது.

நௌரோஜி பாலஸ் கமிட்டியில் சொன்ன சாட்சியத்தில் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியில் உள்ள குறைகள் பலவற்றை எடுத்துக் காட்டினார். உதாரணமாக, அரசாங்கத்தின் அபாரமான செலவு, ஆண்டுதோறும் இங்கிலாந்துக்கு இந்தியாவிலிருந்து போகும் அபரிமிதமான செல்வம், அரசாங்கத்தில் இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்காத அக்கிரமம் முதலிய முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசினார்.

தாம் பாலஸ் கமிட்டியில் கூறிய விஷயத்தை நௌரோஜி வெறும் பேச்சளவில் விட்டு விடாமல் "இந்தியாவின் வறுமை" என்று ஒரு சிறு நூலாக வெளியிட்டார். அந்நூலில் அவர் இந்தியர்கள் பரம ஏழைகள் என்று சொல்லிவந்த கொள்கைக்கு ஆதாரமாயுள்ள புள்ளி விவரங்களை யெல்லாம் எழுதியிருந்தார். ஏழு வருஷங்களுக்குப் பிறகு, அதே சிறு நூலை விஸ்தரித்து "இந்தியாவின் நிலைமை" என்று பெரிய நூலாக வெளியிட்டார்.

பிறகு நௌரோஜி, இந்தியாவுக்குத் திரும்பி வந்து பரோடா சமஸ்தானத்

தில் 1874-ம் ஆண்டு திவான் பதவியை ஏற்றார். அப்போது அந்தச் சமஸ்தான நிர்வாகம் சீர்கேடான நிலைமையில் இருந்தது. நீதி நிர்வாகம் எல்லாம் ஊழல் மலிந்து நடுக்கண்ட நியாயம் கிடைப்பது அரிதாயிருந்தது.

நௌரோஜி, தாழ்வுற்று வறுமை மிஞ்சிப் பாழ்பட்டுக் கிடந்த பரோடா சமஸ்தானத்தைச் சீர்திருத்தினார். நீதி ஸ்தலத்தை ஒழுங்குபடுத்தினார்; தர்ம நியாயம் கிடைக்கும்படி செய்தார். இதனால் சமஸ்தானத்தில் அவருக்குப் பல விரோதிகள் ஏற்பட்டார்கள். அவர்கள் நௌரோஜியின் ஆட்சியில் பல பெரும் குற்றங்களைக் கற்பனை செய்து காட்டினார்கள். நௌரோஜி, அவர்களையெல்லாம் தமது நேர்மையினாலும் சீலத்தினாலும் வென்றார்.

நௌரோஜி, ஜனசமூகத்தின் இரண்டொரு அம்சங்களை மாத்திரம் உயர்த்தவில்லை. எல்லாப் பொதுக் காரியங்களையும் கவனித்து வந்தார். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்த காலத்தில், முதன் முதலில் பெண் கல்விக்கு ஊக்கத்துடன் ஆக்கம் அளித்தவர் தாதாபாய் நௌரோஜிதான். பெண் கல்விக்காகப் பம்பாயில் பல ஸ்தாபனங்களை நிறுவின பெருமை அவரையே சார்ந்ததாகும். அந்தக் காலத்தில் அவரது முயற்சிக்கு மாபெரும் எதிர்ப்பு இருந்தது. நௌரோஜி அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி 1886-ம் வருஷம் இங்கிலாந்திலிருந்து வந்து கல்கத்தாவில் நடந்த இந்திய தேசியக் காங்கிரஸின் இரண்டாவது கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். பிறகு லாகூரில் நடந்த ஒன்பதாவது காங்கிரஸ் மகாநாட்டுக்கும் தலைமை வகித்தார்.

நௌரோஜிக்கு, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தாம் ஒரு அங்கத்தினராக வேண்டும் என்னும் ஆர்வம் அபரிமிதமாயிருந்தது. அதற்காக அவர் செய்த முயற்சி எதுவும் பலன் அளிக்கவில்லை. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஸெண்ட்ரல் பிரின்ஸ்பரி என்னும் பிரதேசத்தின் பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நௌரோஜிக்கு இந்தியா விஷயத்தில் இருந்த ஆர்வமும் சிரத்தையும் அவரை அத்துடன் விட்டுவிடவில்லை. பார்லிமெண்டரி அங்கத்தினர்களில் சிலரைச் சேர்த்துக்கொண்டு இந்தியன் பார்லிமெண்டரி கமிட்டி என்று ஒன்று நிறுவி அதன்மூலம் இந்தியாவுக்குச் சாதகமான அபிப்பிராயத்தை அங்கே வளர்த்து வந்தார். அறுபது வருஷங்களுக்கு மேல் இடைவிடாமல் தேச சேவையில் ஈடுபட்டிருந்த அவர் ஒருநாள் கூடச் சோர்வு அடைந்ததில்லை. அவரது எண்பத்தோராவது ஆண்டு நிறைந்தபோது தேசமெங்கும் அவர் புகழ் பாடினர். இங்கிலாந்தில் இருந்த அவருக்கு வாழ்த்துத் தந்திகள் வந்து குவிந்தன.

அப்போது இங்கிலாந்து சென்றிருந்த நௌரோஜியின் நண்பர் "தங்கள் தேக நிலை எப்படியிருக்கிறது?" என்று விசாரித்தார்.

அதற்கு நௌரோஜி, "எனக்குச் சரீர திடம் எப்போதும் போலத்தான் இருக்கிறது. இந்திய தேசத்தின் நிலைமையையும் நாம் அதற்காகச் செய்யவேண்டிய சேவைகளையும் பற்றி நினைக்கும்போது என் தோள்களில் புதிய பலம் உண்டாகிறது. அப்போது ஒரு வாலிபனாகவே ஆகிவிடுகிறேன். ஆனால் வருஷங்களை எண்ணிப் பார்க்கும் போதுதான் என் முதுமை எனக்குத் தெரிகிறது!" என்று கூறினார்.

இந்தப் பழுத்த தேசபக்தர், சுயராஜ்ய மந்திரத்தின் தந்தை, காலமாகும்போது அவருக்கு வயது தொண்ணூற்றுமூன்று. ஆனால் அவரது புகழுடம்பின் வயதைக் கூறமுடியாது. அது அமரத்வம் வாய்ந்தது. சந்திர சூரியர் உள்ளவரையில் வாழ்ந்திருக்கும்.

மகாகவி பாரதியார், தாதாபாய் நௌரோஜியின் எண்பத்தோராம் ஆண்டு விழா தினத்தில் பின்வரும் வாழ்த்தைப் பாடினார். நாமும் அதை நினைப்போம்.

"மாதாவாய் விட்டலற அதைச்சற்றும்
மதியாதே வாழ்நாள் போக்கும்
தீதாவார் வரினும் அவர்க் கினியசொலி
நன்குணர்த்துஞ் செவ்வியாளன்
வேதாவாயினும் அவனுக் கஞ்சாமே
உண்மைநெறி விரிப்போன் எங்கள்
தாதாவாய் விளங்குநற் றாதாபாய்
நௌரோஜி சரணம் வாழ்க!"

அடிமை உணர்ச்சி உள்ளவர்களுக்குச் சுதந்திரத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதுகூடச் சிரமந்தான். ஆனால் சிந்தித்தே ஆக வேண்டும். எந்த நாடு அடிமைத்தனத்திலே அமைதியைக் காண்கிறதோ அந்த நாடு அவசியம் சிந்தித்தே தீர வேண்டும். இல்லேல் அதற்கு விமோசனமே இல்லை. செயலுக்குத் தூண்டுவது சிந்தனைதானே? — எமர்ஸன்.

ஸ்தாபகர்



டி. ஆறுமுக முதலியார்

சுதேசி

ஸ்தாபனம்: 1906

●

டெலிபோன்: 8291

தந்தி: ‘புவனா’

●

இதர, எந்த தயாரிப்புகட்கும், தலை சிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும், அழகும் கவர்ச்சியும் பொருந்தியனவாகும். விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால், மேனாட்டு முறைப்படி தயாரிக்கப்பெற்ற எங்கள் “கணபதி” புதிய தமிழ் எழுத்துக்களும், “ஆறுமுகம்” புதிய தெலுங்கு எழுத்துக்களும் புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப் பெற்றுள்ளன. மேலும் அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவையாகும்.

●

பூரா விவரங்களுக்கு எழுதவும்

●

தொ. ஆ. சுப்பிரமணிய முதலியார்

பூரண உரிமையாளர்

டைப் பவுண்டரி

51, குருவப்ப செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

•

தமிழ், இந்தி, மலையாளம், தேவநாகரி, தெலுங்கு, கன்னடம், உருது, கிரந்தம், மஹாராஷ்டிரம், ஸமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பதினொரு பாஷைகளிலும் எழுத்துக்களும் தயாரிககப்படும் பவுண்டரி இது ஒன்றேதான்.

இந்த சுதந்திர மலரில் உபயோகிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் கணபதி புதிய தமிழ் எழுத்துக்களே. இந்த எழுத்துக்களின் உறுதிக்கும், அழகான அமைப்பிற்கும் இந்த சுதந்திர மலரே தக்க சான்று.

•

வெளிநாட்டு யந்திரங்களும் நம் நாட்டில் செய்த 'கட்டிங் மிஷின்', 'பெர்ப்பரேடிங்', லெட், ரூல் கட்டர்கள் இவைகள் சப்ளை செய்யப் பெறும். பூரா விவரங்களும் வேண்டுவோருக்கு அனுப்பி வைக்கப் பெறும்.

•



தேசபந்து

பி. எஸ். மணி

கிரேக்க நாட்டின் தலை சிறந்த போர் வீரனான அலெக்ஸாந்தர் இந்தியாவின் மீது படையெடுக்கக் கிளம்பினார். அப்பொழுது தம்முடைய ராஜ்யம், பொருள் எல்லாவற்றையும் தானம் செய்துவிட்டுப் புறப்பட்டார். அவரிடம் எப்பொழுதும் பற்றுதல் கொண்ட ஒருவன், “அரசே! தங்களுடைய பொருளை பூராவும் தானம் செய்து விட்டீர்களே, தங்களுக்காக ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லையே!” என்று கவலையுடன் கூறினான்.

“நான் ஏன் தனியாகப் பொருள் வைத்துக் கொள்ள வேண்டும்? என்னிடந்தான் ஒரு விலையுயர்ந்த பொருள் இருக்கிறதே!” என்றார் அலெக்ஸாந்தர்.

“அது என்ன?” என்று ஆவலுடன் கேட்டான் அவன்.

“அதுவா? நம்பிக்கை!” என்று அலெக்ஸாந்தர் பதிலளித்தாராம்.

இம்மாதிரி தமது சொத்து, சுகம் அனைத்தையும் தேசத்துக்கும் தேச மக்களுக்கும் அர்ப்பணித்து விட்டு ‘நம்பிக்கை’ என்ற விலையுயர்ந்த பொருளை மாத்திரம் தனக்கு வைத்துக் கொண்டார் சித்தரஞ்சன தாஸர்.

தமக்கு வந்த வருவாயையெல்லாம் அவர் தேசத் திருப்பணிக்காகச் செலவிட்டார். ஏழை மக்களுக்கு வேண்டும்போதெல்லாம் அள்ளி வழங்கினார். கடைசிக் காலத்தில் எஞ்சியிருந்த தம் சொத்து முழுவதையும் கல்கத்தா மருத்துவப் பள்ளிக்கு எழுதி வைத்தார். “லட்சக்கணக்காகச் சம்பாதித்து லட்சக் கணக்காக அவர் வங்க யுவர்களுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறார். அவரது தியாகத்துக்கு ஈடு இணை கிடையாது” என்று காந்தி மகாத்மா ஒரு சமயம் தேசபந்துவின் தயாள குணத்தை நினைத்து வியந்து கூறியிருக்கிறார்.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த வள்ளலின் கொடைத் திறமையையும், தேச பக்தியையும் கண்ட தேச மக்கள் அவரைத் ‘தேசபந்து’ என்றே அழைத்து வந்தார்கள்.



கவி ரவீந்திரரையும், மங்காப் புகழ் பெற்ற சுரேந்திர நாதரையும், நேதாஜி போஸையும் அளித்த வங்க நாட்டிலே கல்கத்தா நகரில் 1870ம் வருஷம் நவம்பர் மாதம் ஐந்தாம் தேதியன்று சித்தரஞ்சன தாஸ் அவதரித்தார். பிரபல தாஸ் வகுப்பைச் சேர்ந்த அவரது தகப்பனார் புவன மோகன் தாஸ் வங்காளத்தில் வழக்கறிஞராக இருந்தார். அவர் வழக்கறிஞர் மாத்திரமல்ல; கவிவாணரும் கூட. தந்தையின் ஆற்றலே பிறகு தனயனுக்கும் உரித்தாயிற்று. சித்தரஞ்சன தாஸரும் கவிதைகள் புனைவதிலும், கட்டுரைகள் எழுதுவதிலும் திறம்பட விளங்கினார். விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டிராவிட்டால் அவரும் கவிஞராகக் காலம் கழித்திருக்கக் கூடும். “தேசம் அடிமைத் தளையிலிருந்து விடுதலையடைந்ததும், கங்கைக் கரையில் ஒரு குடிசை அமைத்துக் கொண்டு நான் கவிஞனாகவே எனது எஞ்சியுள்ள வாழ் நாட்களைக் கழிக்க விரும்புகிறேன்” என்று சாகுந் தறுவாயில் அவர் காந்திமகானிடம் கூறினார் என்றால், கவிதை புனைவதில் அவருக்கு எவ்வளவு ஆர்வம் இருந்திருக்க வேண்டும்?

• • •

பாரிஸ்டர் பட்டம் பெற்று லண்டனிலிருந்து திரும்பி வந்த சித்தரஞ்சன தாஸ் கல்கத்தா ஹைகோர்ட்டில் தமது தொழிலை ஆரம்பித்தார். வழக்கறிஞர் தொழிலில் அப்போது அவருக்குப் போதிய வருவாய் வரவில்லை.

இத்தருணத்தில்தான் புவன மோகன் தாஸ் தமது நண்பரை நம்பி மோசம் போய்க் கடன்பட நேர்ந்தது. கடன் பளு தாங்காமல் அவர் ‘இன்ஸால்வென்ஸி’ கொடுத்து விட்டார். அதனால் தமக்கும் தந்தைக்கும் ஏற்பட்ட அபகீர்த்தியை நினைத்து சித்தரஞ்சன் தாஸ் மனம் புழுங்கினார். ‘இன்ஸால்வென்ஸி’ ஆர்டருக்குள்ள கால நிர்ணயம் கூடக் கழிந்து விட்டது. கடன் கொடுத்தவர்கள் எல்லாம் தங்கள் பணம் இனி திரும்பி

வராது என்ற நிலைக்கு வந்து விட்டனர். இச்சமயத்தில் தாங்கள் கொடுத்த பணம் முழுவதும் வாராது வந்த மாமணியைப்போல் திரும்பி வந்து சேர்ந்தால் அவர்களுடைய மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? சட்டப்படி திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லாத பணத்தை வட்டியுடன் சேர்த்துக் கொடுத்த சித்தரஞ்சன தாஸரை அவர்கள் வாயார மனமார வாழ்த்தினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அலிப்பூர் வெடி விபத்து ஏற்பட்டது. அதன் காரணமாகப் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் முக்கியமானவர் தற்போது புதுவையில் வாழும் பாபு அரவிந்த கோஷ். அவரை ஆங்கில ஆட்சியை அடியோடு அழிக்கச் சதி செய்தவர் என்று குற்றம் சாட்டிக் கைது செய்தனர். வழக்கு கல்கத்தா பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு வந்தது. சித்தரஞ்சன தாஸருக்கு இவ் வழக்கில் அரவிந்தர் சார்பில் ஆஜராகும் சந்தர்ப்பம் வாய்த்தது. தாஸரின் வாதத்திறமையைக் கண்ட அனைவரும் மூக்கின்மேல் விரலை வைத்தனர். அவருடைய வாதத் திறமையினால் அரவிந்தர் விடுதலையானார். அதற்குப் பிறகு சித்தரஞ்சன தாஸருக்கு வழக்குகள் வந்து குவிய ஆரம்பித்தன. வரும்படியும் அதிகமாயிற்று. வருஷத்திற்கு 50,000 பவுன் வரும்படி வர ஆரம்பித்ததென்றால் அவர் புகழுக்குக் கேட்கவா வேண்டும்?

ஆனால் வக்கீல் தொழிலில் மூழ்கி ஏராளமான பணம் திரட்டுவதே வாழ்வின் லட்சியமென சி. ஆர். தாஸ் கருதவில்லை. மக்களின் பொதுநலக் காரியங்களிலும் தேசியப் போராட்டங்களிலும் கலந்து கொண்டார்.

தேசமக்கள் அனைவரும் ஒருமுகமாக எதிர்த்து நின்றும், கவுன்ஸிலிலே ரௌலட் சட்டம் பிறந்தது பிரசித்தம். அந்த அதி அக்கிரமமான சட்டத்தை எதிர்த்து வங்காளம் முழுதும் சித்தரஞ்சன தாஸ் பிரசாரம் செய்தார். இந்தச் சமயத்தில் பஞ்சாப் மாகாணத்தில் புரட்சியை ஒடுக்க அதிகாரிகள் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். ஜாலியன் வாலாபாக் என்னும் தோட்டத்தில் ஜெனரல் டயர் துப்பாக்கியால் சுட்டுப் பலரைக் கொன்று குவித்தான். அந்தப் படுகொலை நிகழ்ச்சி தேசபந்துவின் மனதைப் பெரிதும் கலக்கி விட்டது. வங்காளம் முழுதும் கூட்டங்கள் கூட்டி அதிகார வர்க்கத்தின் ஆட்சி வெறியை அஞ்சாது எடுத்துரைத்தார். “நான் உயிர் வாழ்வது சுயராஜ்யத்துக்காகவே; நான் உயிர் துறக்க நேரிடினும் அதுவும் சுயராஜ்யத்துக்காகவேதான்!” என்று வீர முழக்கம் செய்தார். சுதந்திரக் கனல் வீசிய அப்பேச்சைக் கேட்ட வங்க மக்கள் அனைவரும் தேசபந்துவைப் பின்பற்றித் தியாகப் பெருந் தீயில் குதித்தனர்.

நாகபுரி காங்கிரஸில் காந்தி மகான் பட்டங்களைத் துறந்தும், பதவிகளை விடுத்தும், சட்டங்களை எதிர்த்தும், சட்டசபைகளை எட்டிப் பாராமலும் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று யோசனை சொன்னார். அண்ணலின் கட்டளைக் கிணங்க சித்தரஞ்சன தாஸர் வரையாது வழங்கி வந்த தம் வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார்.

1921-ம் வருஷத்தில் வங்க மாகாணம் பூராவும் பிரயாணம் செய்து காங்கிரஸ் தொண்டர் படைக்கு ஆள் திரட்டினார். அவருடைய ஆணித்தரமான பேச்சினாலும், உணர்ச்சிப் பிரவாகத்தினாலும் வங்க மக்கள் அனைவரும் தொண்டர் படையில் சேர ஆரம்பித்தனர். இதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் அத் தொண்டர் படையின்மீது தடை விதித்தனர். தேசிய ஆர்வத்தில் மூழ்கிக் கிடக்கும் தொண்டர்களுக்கு அத் தடை யெல்லாம் இலட்சியமா? அவர்கள் அத் தடையை மீறி நடந்தனர். நமது சித்தரஞ்சன தாஸரும் அத் தடையை மீறிப் பிரசங்கம் செய்தார்.

அரசாங்கம் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா? அவரைக் கைது செய்து ஆறு மாத காலம் அரசாங்க விருந்தாளியாக அமரச் செய்தது. அவரை மட்டுமா? அவர் மனைவி வஸந்திதேவியையும் புதல்வனையும்

உரிமையும் கடமையும்

ஒரு மனிதன் தன்னுடைய சுதந்திரத்தை இழந்துவிட்டான் என்றால், அவன் தன் மனிதத் தன்மையை இழந்துவிட்டான் என்று அர்த்தம். அதுமட்டுமல்ல; மானிட சாதியில் பிறந்தவன் என்ற முறையில் அவனுக்கு ஏற்பட்டிருக்கிற சகல உரிமைகளையும் கூட இழந்துவிட்டான் என்று சொல்ல வேண்டும். சுதந்திரத்தை இழந்த அவனிடம் எத்தகைய நற்குணங்களைப் புகுத்தினாலும் அவனுடைய மனிதத் தன்மை திரும்பி வராது.

—ரூஸோ.



அழைத்துச் சிறைத் தண்டனை அளித்தனர். மன்னாதி மன்னர்களும் கண்டு பொறாமைப் படும்படியாகச் சுகபோக வாழ்க்கை நடத்திய தேசபந்து தாஸரும், அவரது தர்ம பத்தினியும் சிறைப்பட்ட செய்தியைக் கேட்டு பாரத தேசம் முழுவதுமே திடுக்கிட்டுப் போய்விட்டது.

இச்சமயத்தில்தான் காங்கிரஸ் மகாசபையின் தலைவராக தேசபந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவர் சிறையிலிருந்தபடியால் அந்த வருஷம் நடந்த காங்கிரஸில் அவரால் தலைமை வகிக்க முடியவில்லை. கயா காங்கிரஸில் சித்தரஞ்சன தாஸர் அந்தத் தலைமைப் பதவியை ஏற்றார்.

இரண்டு மூன்று வருஷமானதும் ஒத்துழையாமை இயக்கம் நின்றது. தேசமும் ஓய்வு கொண்டது. தேசத்தை மறுபடியும் தட்டி எழுப்ப எண்ணிச் சட்டசபைகளில் புகுந்து அரசாங்கத்துடன் நேருக்கு நேராக நின்று சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் நோக்கத்துடன் 'சுயராஜ்யக் கட்சி' என்னும் ஒரு புதிய கட்சியைப் பண்டித மோதிலால் நேருவும் சித்தரஞ்சன தாஸரும் ஏற்படுத்தினர். இதற்கு தேச முழுவதும் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன. நாளுக்கு நாள் அந்தக் கட்சியின் செல்வாக்கு வளர்ந்துகொண்டு வந்தது.

மற்ற மாகாணங்களைவிட தேசபந்து தாஸருடைய சொந்த மாகாணமாகிய வங்காளத்தில் சுயராஜ்யக் கட்சிக்குப் பெருத்த ஆதரவு இருந்தது. கல்கத்தா நகர சபையில் அக் கட்சிக்காரருக்கு முழு வெற்றி கிடைத்தது. சித்தரஞ்சன தாஸர் கல்கத்தா கார்ப்பரேஷனின் மேயரானார். சுபாஷ் சந்திரபோஸைப் பிரதம நிர்வாகியாக்கினார். ஆங்கிலேயர் ஸ்ரீ போஸை அரசாங்கத்துக்கு எதிராகப் பிரசங்கம் செய்ததாகக் கைது செய்து ஆறு மாதம் சிறைத் தண்டனை அளித்தனர். இதைக் கேள்விப்பட்ட சித்தரஞ்சன தாஸர் சினமுற்றார். ஒரு பெரிய பொதுக் கூட்டம் கூட்டி அரசாங்கத்தின் அட்டூழியத்தை எடுத்தியம்பினார். "தேச பக்தி ஒரு குற்றமானால் நானும் ஒரு குற்றவாளிதான். சுபாஷ் போஸ் தேசபக்தி கொண்டிருந்தது ஒரு குற்றமென்றால் இதே குற்றத்தை நானும் செய்திருக்கிறேன் என்று கூறுகிறேன். ஆகவே கார்ப்பரேஷனின் பிரதம நிர்வாகி மட்டுமல்ல. கார்ப்பரேஷனின் மேயரும் குற்றவாளிதான். என்னையும் கைது செய்யுங்கள்" என்று ஆவேசத்துடன் அதிகார வர்க்கத்துக்குச் சவால் விடுத்தார். அந்த ஆவேசப் பிரசங்கத்தினால் வங்க முழுதும் கொதித்து எழுந்தது. ஸ்ரீ போஸை விடுதலை செய்ய வேண்டும் என்ற கிளர்ச்சியைக் கிளப்பினார்கள் வங்கமக்கள். இதைக் கண்ட அரசாங்கம் திடீரென்று சுபாஷ் பாபுவை வங்கச் சிறையிலிருந்து மாண்டலே சிறைக்கு மாற்றிவிட்டார்கள்!

இவ்வாறு தேசத்துக்காகத் தன் உடல், பொருள் ஆவி அனைத்தும் துறந்த சித்தரஞ்சனதாஸர் டார்ஜிலிங்கில் 1925-ம் வருஷம் ஜூன் மாதம் அமரரானார். இச் செய்தி கேட்ட இந்திய மக்கள் அனைவரும் மாபெரும் தேசபக்தர் மறைந்ததை எண்ணிக் கண்ணீர் வடித்தனர்.

கல்கத்தா நகரமே திரண்டு சென்று தேசபந்துவுக்கு இறுதி மரியாதை செலுத்தியது. மானிலத்தை வாழ்விக்க வந்த மகாத்மாவும் அவ்விறுதி மரியாதையில் கலந்து கொண்டார்.

சம்பாவதி

சபரி

நடுப்பகல். கோடை காலம். வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்த ஒரு குதிரை வீரன், ராஜபுத்தான நாட்டைச் சேர்ந்த ஒரு காட்டருகே போனதும் குதிரையை விட்டுக் கீழே இறங்கினான்.

அந்தக் காடு மிகவும் அடர்த்தியானது. மரங்களும் செடி கொடிகளும் நெருங்கிப் பிணைந்து வளர்ந்து வெகு தூரம் வரை வியாபித்திருந்தன. மனித நடமாட்டமே அங்கு கிடையாது. பயங்கரமான அமைதியும் இருளும் சூழ்ந்திருந்த அந்தக் காட்டுக்குள்ளே எப்பேர்ப்பட்ட நெஞ்சுத் துணிவு உள்ளவனும் செல்ல அஞ்சுவான்.

குதிரையை விட்டுக் கீழே இறங்கிய அந்த வீரன் தன்னுடைய உடைகளில் சிலவற்றைக் களைந்து மடித்து வைத்து விட்டு, ஒரு சிறு மூட்டையை மாத்திரம் கையில் எடுத்துக்கொண்டு, அடர்த்தியான அந்தக் கானகத்துக்குள்ளே புகுந்தான்.

* * *

அப்போது பாரத தேசம் மொகலாயர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மேற்கே குஜராத்திலிருந்து கிழக்கே வங்காளம் வரை, வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே கன்னியா குமரி வரை விரிந்து பரந்து வியாபித்திருந்த மொகலாய சாம்ராஜ்யத்துக்கு பாதுஷா அக்பர் ஏகச் சக்ராதிபதியாக விளங்கினார். எத்தனையோ இந்திய மன்னர்களும் மகா வீரர்களும் அக்பரை எதிர்த்துப் போராடித் தோற்றுப் போய், கடைசியில் அவருக்கு அடிபணிந்து விட்டார்கள். ஆனால், ஒரே ஒரு வீரன் மாத்திரம் மொகலாய சாம்ராஜ்யத்துக்குத் தலை வணங்க வில்லை; பாதுஷா அக்பருக்கு அடிபணியவில்லை. அவன் யார்? ராஜபுத்தானத்தின் வீர விளக்காகவும் ஹிந்துஸ்தானத்தின் சுதந்திர அமர தீபமாகவும் விளங்கிய மகாராணா வீர பிரதாப சிம்மன் தான் அவன்.

மொகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்து அவன் எத்தனையோ தடவை போராடினான். ஒரு தடவையாவது அவனுக்கு வெற்றி கிட்ட வில்லை. கடைசியாக ஹல்தி கட்டத்தில் நடந்த மாபெரும் யுத்தத்திலும் அவன் தோல்வியடைந்தான். தோல்வியென்றால் சாதாரணமான தோல்வி அல்ல; மறுபடியும் தலை தூக்க முடியாதபடி அவ்வளவு பெரிய தோல்வியடைந்தான். அந்த யுத்தத்தில் யாருமே தப்பவில்லை,—ராணாவைத் தவிர. அவனும் தப்பியிருக்க மாட்டான். போர்க்களத்தில் எவ்வளவோ சந்தோஷமாக உயிர் துறந்திருப்பான். வாழ்க்கை முழுவதும் போரில் கழித்த அம் மன்னவன், சாவை எவ்வளவோ ஆவலுடன் தழுவி ஆறுதல் அடைந்திருப்பான். ஆனால், அவன் சாக விரும்பவில்லை. ராஜபுத்தானத்தை எப்படியாவது அந்நிய ஆதிக்கத்திலிருந்து மீட்டு விட்டே சாவது என்று அவன் திடசங்கல்பம் பூண்டிருந்தான். அதற்காகவே அவன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போர்க்களத்திலிருந்து தப்பியோடி, மிகவும் சிரமப்பட்டு, மனைவி மக்களுடன் மேலே கூறப்பட்ட காட்டுக்குள்ளே புகுந்து விட்டான்.

மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் வாழ்ந்து ராஜபுத்தான தேசத்தை ஆண்ட அம் மன்னவனுக்கு இப்போது நடுக்காட்டில் அமைக்கப்பட்ட ஒரு சிறு குடிசைதான் அரண்மனையாக விளங்கியது. போகபோக்கியங்களை அனுபவித்து சுகத்தின் எல்லையைக் கண்ட அவ் வீரனுடைய குடும்பம் இப்போது ஒரு வேளை உணவுக்குக் கூட வழியில்லாமல் தவியாய்த் தவித்தது. ஆனால் இரும்பு நெஞ்சம் கொண்ட ராணா பிரதாப் நெஞ்சங்கூடக் கலங்கவில்லை. கட்டுண்ட அவ்வேங்கை தன் விடுதலைக் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

ராணா, அவனுடைய மனைவி குணவதி, மகள்—பதின்மூன்று வயதுள்ள சம்பாவதி; மகன் — எட்டு வயதுள்ள அஜித்—இது தான் அவர்களுடைய குடும்பம்.

ராணா அந்தக் காட்டை விட்டு வெளியே போவதே கிடையாது. வெளியே புறப்பட்டுப் போனால் எத்தகைய ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். மொகலாய சேனை அவனை எப்படியாவது பிடித்து

விடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு காடு நகரமெங்கும் தேடிக் கொண்டிருந்தது.

ஒரு வேளை சாப்பிடுவதும் ஒன்பது வேளை பட்டினி இருப்பதுமாக அவர்களுடைய வாழ்க்கை நடந்து வந்தது.

*   *   *

இளவேனிற் காலம் அப்போதுதான் ஆரம்பமாகி யிருந்தது. மரங்களும் செடிகளும் தளிர்த்து அரும்பத் தொடங்கி யிருந்தன. கொழுந்து இலைகளும் அரும்பு மலர்களும் பார்ப்பதற்கு எவ்வளவோ அழகாக விளங்கின. வசந்தத்தின் சுகந்தம் அந்தக் காடு முழுவதும் கமழ்ந்தது. புத்துயிர் பெற்றுப் புதுப் பட்டாடை அணிந்து புது வாழ்க்கைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இளம் பெண்ணைப் போலத் தோன்றியது அந்தக் காடு.

மகாராணா பிரதாப சிம்மன் அவ்வளவு பெரிய காட்டுக்குத் தனிக் காட்டு அரசனாக விளங்கினான்.

அன்றைய தினம் அவன் குடிசைக்குள் உட்கார்ந்து, நோயுற்றிருந்த தன் மனைவியுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். குழந்தைகள் இரண்டும் வெளியே செடி கொடிகளுக்கிடையில் விளையாடிக் கொண்டிருந்தன.

'டுபுக்' 'டுபுக்' என்ற பறவைகளின் ஓசையையும் கலகல வென்ற குழந்தைகளின் சிரிப்பொலியையும் தவிர வேறு சத்தமே கிடையாது.

திடீரென்று, "மகாராணா பிரதாப சிங்குக்கு ஜே!" என்ற ஒரு கோஷம் கேட்டது.

கணீரென்று ஒலித்த அந்தக் குரல் அமைதியாக விளங்கிய அந்தக் காடு முழுவதும் எதிரொலித்தது.

ராணா திடுக்கிட்டான்.

எழுந்து வெளியே வந்து பார்த்தான். காஷாய உடை தரித்த ஒரு வைஷ்ணவ சன்னியாசி அங்கு நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவரையும் அவருடைய தோற்றத்தையும் கண்டதும் ராணாவின் இதயத்தில் பக்தியும் மரியாதையும் பொங்கி எழுந்தன. ஆனால் மறு கணம், பிரகாசமான அந்த முகத்தில் ஒரு வகையான துயரத்தின் சாயை படர்ந்தது. ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், இரு கைகளையும் கூப்பி, "வர வேண்டும், வர வேண்டும்!" என்று வரவேற்று உட்காரும்படி கூறினான். பிறகு அவரை நோக்கி "சுவாமி, தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? இந்தத் திக்குத் தெரியாத காட்டுக்குள்ளே புகுந்து என்னைக் கண்டு பிடித்தது என்னுடைய பாக்கியந்தான்" என்றான்.

சன்னியாசி சிரித்துக் கொண்டே, "அது தங்களுடைய பாக்கியமா? என்னுடைய பாக்கியம் அல்லவா?—மகாராணா. நான் தீர்த்த யாத்திரைக்காக வட மதுரையிலிருந்து புறப்பட்டு வந்தேன். நாடு நகரங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டேன். எத்தனையோ க்ஷேத்திரங்களையும் புண்ணிய தீர்த்தங்களையும் கண்டு தரிசித்து விட்டேன். எங்கே போனாலும் தங்களைப் பற்றியும் ஹால்தி கட்டத்தில் நடந்த மாபெரும் போரைப் பற்றியுமே பேச்சாக இருக்கிறது" என்றார்.

"அப்படியா!" என்றான் ராணா இலேசாகச் சிரித்துக் கொண்டே.

"ஹால்தி கட்டத்தில் தங்களுக்கு வெற்றி கிடைக்காதது பாரத தேசத்தின் துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்."

"எல்லாம் கடவுள் சித்தம். அவனுடைய திருவுள்ளம் எப்படி யிருக்கிறதோ அப்படித் தானே நடக்கும்?" என்றான் ராணா.

இருவரும் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சன்னியாசி,



தீர்த்த யாத்திரையின் போது தாம் கண்ட பல புண்ணிய க்ஷேத்திரங்களின் பெருமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தார். ராஜா இடை மறித்து, "சுவாமி, அது இருக்கட்டும். என்னுடைய புண்ணிய க்ஷேத்திரமாகிய சித்தூருக்குப் போனீர்களா?" என்று கேட்டான்.

"ஆம், போனேன்" என்றார் சன்னியாசி.

"என்னுடைய மக்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள்?" என்று ஆவலுடன் கேட்டான் ராஜா.

"மக்களா? ஹ்ஹ்ஹா!— தங்களுடைய மக்கள் யாரையும் நான் அங்கு பார்க்கவில்லை. மலைகளையும் குன்றுகளையும் பாழாய்க் கிடக்கும் நிலங்களையும்தான் கண்டேன்."

"ஏன்?" என்று பரபரப்புடன் கேட்டான் ராஜா.

"ஆம், அங்கு யாரையும் நான் பார்க்கவில்லை. மொகலாய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருக்க முடியாது என்று அவர்கள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, வீடு வாசல்களைத் துறந்து விட்டு வேற்று நாடுகளுக்குப் போய்விட்டார்கள். சித்தூரில் இப்போது யாரும் இல்லை."

இதைக் கேட்டதும், ராஜாவின் இதயத்திலே சொல்ல முடியாத ஒரு வகையான



இறும்பூதும் பெருமிதமும் உண்டாயின. "அப்படியா!" என்றான் மகிழ்ச்சியுடன்.

சன்னியாசி சற்று நேரம் வரை பேசாமலிருந்தார். பிறகு அவர் ராஜாவைப் பார்த்து, "ராஜாஜி, தங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லலாமென்று இருக்கிறேன். சொல்லட்டுமா?" என்றார் தயக்கத்துடன்.

"ஓ! சொல்லுங்களேன்!" என்றான் ராஜா.

சன்னியாசி சொன்னார்:— "அக்பரை எதிர்த்து நீங்கள் எத்தனையோ தடவை போராடினீர்கள். ஹிந்துஸ்தானத்துக்கு உங்கள் இணையில்லாத வீரத்தைக் காட்டினீர்கள். இனிமேல் நீங்கள் அவருடன் சமாதானம் செய்து கொள்ளுவது நல்லது அல்லவா?"

அதைக் கேட்டு ராஜாவின் முகம் சிவந்தது. அடக்க முடியாத கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் அதை ஒரு வகையாக அடக்கிக் கொண்டு, "சமாதானமா! அக்பருடனா? நன்றாக இருக்கிறது!" என்று சொல்லி விட்டு ஒரு கோபச் சிரிப்புச் சிரித்தான்.

மீண்டும் வெகு நேரம் வரை அவர்கள் பேசிக்கொண்டே இருந்தார்கள். ஆனால், ராஜாவின் வாய்தான் பேச்சில் ஈடுபட்டிருந்ததே யொழிய அவனுடைய மனம் வேறு எதிலோ ஈடுபட்டிருந்தது. பேச்சின் சுவாரஸ்யம் குறைந்துகொண்டேவந்தது. கடைசியில் சன்னியாசி ராஜாவைப் பார்த்து, "ராஜாஜி, தங்களைப் பார்க்கவேண்டும் என்ற என் ஆவல் நிறைவேறிவிட்டது. நான் இன்றிரவே பக்கத்தில் உள்ள ஒரு க்ஷேத்திரத்துக்குப் போயாக வேண்டும். போய் வரட்டுமா?" என்றார்.

"இதோ வந்துவிட்டேன்; கொஞ்சம் பொறுங்கள்!" என்று சொல்லிவிட்டு ராஜா எழுந்து உள்ளே போனான்.

அங்கே தன் மனைவி கவலையே உருவமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவளை நோக்கி, "குணவதி, ஈசுவர சோதனையைப் பார்த்தாயா?" என்றான்.

"ஆம், நானும் அதைப் பற்றித்தான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றாள் அவள்.

"இதுவரை நம்மைத் தேடிவந்த பக்தர்களுக்கோ சன்னியாசிகளுக்கோ நாம் ஒருவேளை உணவாவது அளிக்காமல் அனுப்பியதில்லை. இக்கடும் வெயிலில் நம்மைத் தேடி வந்த இந்தச் சன்னியாசிக்கு உணவு

கடமை என்ன?

கல்யாணம் என்பது சாதாரண விஷயம் அல்ல. கஷ்டமான பொறுப்புகளையும் கடமைகளையும் அது கணவன் தோளில் சுமத்துகிறது. மனைவியாக வரப்போகிறவள் இலேசுப்பட்டவளாக இருக்க மாட்டாள். அவள் புருஷனை ஆட்டி வைப்பாள். செலவை உண்டாக்குவாள். தொந்தரவுகளைக் கொடுப்பாள். அவள் அப்படி இருக்கிறாளே என்பதற்காக நாம் அவளைத் தள்ளி விட முடியுமா? அவளைக் காப்பாற்றுவது நம் பொறுப்பு, கடமை. அதைப் போலத்தான் நமக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரமும்.

—ராஜாஜி

அளிக்காமல் எப்படி அனுப்புவது என்பதை நினைக்கும்போது என் இதயமே வெடித்து விடும்போல இருக்கிறதே! ராஜபுத்திர குலத்துக்கு இது ஒரு அவமானம் அல்லவா?"

"அத்தகைய அவமானம் எதுவும் நமக்கு நேராது! நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று ஒரு குரல் திடீரென்று கேட்டது. ராணாவும் குணவதியும் திரும்பிப் பார்த்தார்கள். குமாரி சம்பாவதி தன் தம்பியை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தாள்.

ராணா தன் மகளை நோக்கி, "என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம், அப்பா! அவருக்கு உணவு அளித்து அனுப்பிவைக்க வேண்டியது என்னுடைய கடமை" என்றாள் சம்பாவதி.

"நிஜமாகவா? எப்படி?" என்று வியப்புடன் கேட்டான் ராணா.

"நேற்று நீங்கள் எனக்கு ஒரு ரொட்டி கொடுத்தீர்கள் அல்லவா? அதை நான் சாப்பிடவில்லை. தம்பி அழும்போது அவனுக்குக் கொடுக்கலாமென்று அப்படியே வைத்திருக்கிறேன். அதை நாம் இப்போது உபயோகப்படுத்திக் கொள்ளலாம்."

இதைக் கேட்டதும் குணவதி தன் மகளை அணைத்துக்கொண்டு, "ஆ, என் கண்ணே!" என்று அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தாள்.

ராணாவுக்கு அளவுகடந்த ஆனந்தம் உண்டாகிவிட்டது. அவனுக்குத் தன் மகளை எப்படிப் பாராட்டுவது என்று விளங்கவே இல்லை. 'ஹல்தி' கட்டத்தில் மொகலாய சைனியத்தை எதிர்த்து வெற்றி யடைந்திருந்தால்கூட அவனுக்கு அவ்வளவு மகிழ்ச்சி உண்டாகி யிருக்க முடியாது. அவன் தன் மகளை நோக்கி, "அம்மா, குழந்தாய்! ராஜபுத்திர குலம் ராணா பிரதாப சிம்மனால் பெருமை யடையவில்லை; அவனுடைய குமாரி சம்பாவதியால்தான் பெருமை யடைந்தது" என்றான்.

* * *

சம்பாவதி காட்டு இலை ஒன்றைப் பறித்து, அதில் ரொட்டியை வைத்து எடுத்துக்கொண்டு போய் சன்னியாசியின் முன்பு வைத்தாள். அவர் அதை ஆவலுடன் சாப்பிடத் தொடங்கினார். திடீரென்று அவருக்கு விக்கிக்கொண்டது. அவர் சம்பாவதியை நோக்கி, "குழந்தாய், தண்ணீர் கொண்டு வந்து வைக்க மறந்துவிட்டாய் போலிருக்கிறதே!" என்றார்.

குமாரி சம்பாவதி ஏதோ ஒரு பெரிய குற்றத்தைச் செய்து விட்டவள் போல எண்ணி, தண்ணீர் கொண்டு வருவதற்காக அவசர அவசரமாக ஓடினாள். வேகமாக ஓடியதால், அங்கு வழியிலிருந்த ஒரு கல் தடுக்கித் தொப்பென்று கீழே சாய்ந்தாள். தலை கல்லில் அடிபட்டு உதிரம் பெருகியது. பசியாலும் பட்டினியாலும் பலஹீனமடைந்திருந்த அவள் அந்த அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் மூர்ச்சையானாள். ராணாவும் அவனுடைய மனைவியும் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்தார்கள். கீழே மூர்ச்சையுற்றுக் கிடக்கும் தங்கள் அருமைப் புதல்வியைக் கண்டார்கள். அவர்கள் இதயத் துடிப்பு அப்படியே நின்று விடும்போல இருந்தது. திக்பிரமையுற்று சற்றுநேரம் சிலைபோல அசைவற்று நின்றார்கள். சன்னியாசியும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அங்கு ஓடி வந்து அந்தக் காட்சியைப் பார்த்துத் திகைத்தார்.

குமாரி சம்பாவதியின் கண்கள் மூடியிருந்தன. மூச்சுகூட நின்றுவிட்டதோ என்று சொல்லும்படியாக இருந்தது. ராணா ஒரு நீண்ட சோகப் பெருமூச்சு விட்டான். கலங்காத அவ் வீரனும் கலங்கினான். அவனுடைய இரும்பு நெஞ்சமும் உருகியது.

குணவதி மகளை எடுத்துத் தன் மடிமீது வைத்துக் கொண்டு கண்ணீரை அருகப் பெருக்கினாள்.

வாடிய ரோஜா மலரைப் போலத் துவண்டு கிடக்கும் தன் அருமைப் புதல்வி

யைப் பார்த்தான் ராணா. உடனே அவளுடைய பதின்மூன்று வருஷ வாழ்க்கையும் அவனுக்கு ஞாபகம் வந்தது. அரசிளங் குமாரியாகப் பிறந்தும் அவள் என்ன சுகத்தை அனுபவித்தாள்? ராணா பிரதாப ஸிம்மனுடைய புதல்வியாகப் பிறந்தும் அவளுக்குக் கிடைத்த சுகம் என்ன?

கால் மணி ஆயிற்று. அரை மணி ஆயிற்று. குழந்தைக்குப் பிரக்ஞையே உண்டாகவில்லை. நேரம் ஆக ஆகக் கவலையும் சந்தேகமும் அதிகமாகிக் கொண்டு வந்தன. குணவதி தன் மகளுடைய இருதயத்தில் கை வைத்துப் பார்த்தாள். அங்கு இலேசாகத் துடிப்பு இருந்தது. அவளுக்குக் கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று.

சன்னியாசி, குமாரி சம்பாவதியையும் ராணாவையும் அவனுடைய மனைவியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தார். தன்னால்தான் குழந்தைக்கு இந்த விபத்து ஏற்பட்டதோ என்பதை நினைத்த போது அவருடைய கண்ணில் நீர் ததும்பியது.

ராணா முழந்தாளைக் கட்டி அதில் முகத்தைப் புதைத்த வண்ணம் வெகுநேரம் யோசனையில் மூழ்கியிருந்தான். திடீரென்று அவன் சிந்தனையிலிருந்து விடுபட்டு தன் மனைவியை நோக்கி, "குணவதி, நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்" என்றான்.

"என்ன?" என்று கேட்டாள் அவள்.

"சுதந்திரத்தின் பேரால் நான் நாட்டை இழந்தேன். உற்றார் உறவினரை இழந்தேன். சுக போகத்தைத் துறந்தேன். ஆனால், என் குழந்தையை இழக்கமாட்டேன். சுதந்திரத்தின் பேரால் என்னருமைக் குழந்தையை நான் பலி கொடுக்க மாட்டேன்" என்றான்.

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!" என்றாள் குணவதி.

"அக்பருடன் சமாதானம் செய்து கொள்ளுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். நீ என்ன நினைக்கிறாய்?"

திடீரென்று சம்பாவதியின் உடல் அசைந்தது. அவள் மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தாள். "அப்பா!" என்ற மெல்லிய குரல் அவளுடைய வாயிலிருந்து வெளி வந்தது. அந்தக் குரலிலே சொல்ல முடியாத ஒருவகை வேதனை தொனித்தது.

"என்ன அம்மா?" என்று சொல்லிக் கொண்டே ராணா எழுந்து மிகவும் ஆவலாகத் தன்னுடைய மகளருகே சென்றான்.

"அப்பா, இது நிஜந்தானா? இதுவெல்லாம் நிஜந்தானா? என் காது சரியாகக் கேட்கிறதா?"

"எதைக் கேட்கிறாய், அம்மா?" என்று சற்றுத் திகைப்புடன் கேட்டார் ராணா.

"அக்பருடன் சமாதானம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னீர்களே, அது நிஜந்தானா?"

"ஆம், குழந்தாய்! எவ்வளவு காலம் உங்களை இந்தக் கஷ்ட நிலையில் நான் பார்த்துக் கொண்டிருப்பது? குழந்தைகளாகிய உங்களை முன்னிட்டாவது நான் ஒரு சமாதானம் செய்து கொள்வது நல்லதல்லவா?"

சம்பா ஒரு பெருமூச்சு விட்டாள்.

"அப்படியா?—ஹூம்—குழந்தைகளுக்காகவா?—அப்பா! உங்கள் குழந்தைகள் நீங்கள் நினைக்கிறபடி அவ்வளவு கோழைகள் அல்ல, அப்பா!"


ராணா ஒன்றும் பேசவில்லை.

"அப்பா!"

"என்ன அம்மா?"

"நான் பிழைக்க மாட்டேன். இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் செத்துப் போய் விடுவேன். செத்துப் போவதற்கு முன்

பயன் இல்லை!



கணவன் :—மீனா, நான் ரேடியோ வாங்கலாம் என்று தீர்மானம் பண்ணிவிட்டேன்! ஆகையினாலே பத்திரிகை வாங்குவதை நிறுத்திவிடலாம் என்று பார்க்கிறேன்!

மீனா :— ரேடியோ வாங்குவது சரிதான்; ஆனால் பேப்பரை நிறுத்த வேண்டாம். ரேடியோவில் டிபன் கட்டிக் கொடுக்க முடியாது!

பேச்சுச் சுதந்திரம்

நீ சொல்லுவது எதுவும் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஆனால் அதைச் சொல்ல உனக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமென்பதற்காக நான் என் உயிரைக் கொடுத்துப் போராடுவேன்.

—வால்டேர்.

நீங்கள் எனக்கு ஒரு சபதம் செய்து கொடுக்க வேண்டும்."

சாவு! அவருடைய ஏக புதல்வி—அருமைக் குமாரி—செத்துப் போய் விடுவாளா? சுதந்திர தேவிக்கு அவள் நிச்சயமாகப் பலியாகி விடுவாளா?

நாற்புறமும் இருள் சூழ்வது போல இருந்தது ராணாவுக்கு.

"என்ன சபதம் அம்மா செய்து கொடுக்க வேண்டும்?" என்று அளவுகடந்த சோகத்துடன் கேட்டான் ராணா.

"சித்தூரின் சுதந்திரத்துக்காக உங்கள் உடம்பில் ஒரு துளி இரத்தம் இருக்கும் வரை நீங்கள் போராடுவதாக எனக்குச் சபதம் செய்து கொடுக்க வேண்டும், அப்பா!"

இதைக் கேட்டதும், வேல் தாக்குண்ட வேங்கை போல ராணாவின் உள்ளத்தில் வீர உணர்ச்சி பொங்கி யெழுந்தது.

"ஹாஹா மகாதேவ்! ஹாஹா மகாதேவ்!" என்று சொல்லிக் கொண்டே குதித்து எழுந்தான். பயங்கரமான ஒரு கோபப் புன்னகை அவனுடைய முகத்தில் தாண்டவமாடியது.

"ஹா, என் அருமைக் கண்மணி! செல்வக் குமாரி! சோர்ந்துபோன என் உள்ளத்துக்கு நீ சக்தியையும் வலுவையும் ஊட்டி விட்டாய். ஒரு பெரிய இலட்சியத்திலிருந்து நழுவிக் கீழே விழக் கூடிய நிலைமையில் இருந்தேன். நீ என்னைக் காப்பாற்றி விட்டாய். தெய்வத்தின் மீது ஆணையிட்டு இதோ உனக்குச் சத்தியம் செய்து கொடுக்கிறேன். என்னுடைய உடம்பில் கடைசி துளி இரத்தம் இருக்கும் வரை சித்தூரின் சுதந்திரத்துக்காகப் பாடுபடுவேன்!" என்றான்.

சம்பாவதியின் முகம் மலர்ந்தது. ஒரு வறண்ட புன்னகை, வாடிப்போன அவளுடைய ரோஜாமலர்க் கன்னங்களை அலங்கரித்தது. அணையப் போகும் விளக்கைப் போல, ஒரு தெய்விகத் திருவொளி அவளுடைய முகத்தில் தோன்றி திடீரென்று மறைந்தது. முகத்தில் கருநீலம் படர்ந்தது. கண்ணிமைகள் மூடி விட்டன. மூச்சும் நின்று விட்டது. வீரப் புதல்வி சம்பாவதி மீளாத் துயில் கொண்டு விட்டாள்! வீர சுவர்க்கம் புகுந்து விட்டாள்!

ராணாவும் அவருடைய மனைவியும் சன்னியாசியும் குழந்தையின் உயிரற்ற உடலருகே உட்கார்ந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக நேரம் கழிந்தது.

கடைசியில் அந்தச் சன்னியாசி எழுந்து ராணாவருகே சென்று, அவருடைய இரு கால்களையும் பற்றிக் கொண்டு, "மகாராணா! என்னை மன்னிப்பீர்களா?" என்று கேட்டார்.

"என்ன? உங்களையா?—நானா?—மன்னிக்க வேண்டுமா?" என்று கேட்டார் ராணா வியப்புடன்.

"ஆம், மன்னிப்பீர்களா?" என்று கேட்டார் சந்நியாசி.

"எதற்காக?" என்று கேட்டார் ராணா.

"நீங்கள் இந்த நிலைமைக்கு வந்து இவ்வளவு கஷ்டப்படுவதற்குக் காரணமாக இருந்தது நான்தான். என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்" என்று சொல்லி விட்டு, அவர் தாம் அணிந்திருந்த சன்னியாசிக் கோலத்தைக் களைந்தெறிந்தார். என்ன அதிசயம்! அங்கு நிற்பவர் யார்? ஹிந்துஸ்தானத்தின் பாதுஷாவாகவும் ராணா பிரதாபின் ஜன்ம விரோதியுமாக விளங்கிய சாட்சாத் அக்பரேதான்!

அக்பர் சொன்னார்: "மகாராணா வீரப் பிரதாப சிம்மரே, உம்முடைய வீரத்தையும் உம்முடைய குழந்தையின் தைரியத்தையும் கண்டு நான் பரவசமடைகிறேன். உம்மைப் போன்ற ஒரு மகா வீரரை வெல்லவே முடியாது என்பதை நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். இன்றிருந்து நாம் இருவரும் நண்பர்கள். ஹிந்துஸ்தானத்தின் இரு பெரும் மன்னர்கள். நமக்குள் ஏற்றத் தாழ்வு கிடையாது. நாளையே சித்தூருக்குப் போய் ராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளலாம். உம்முடைய சுதந்திரத்தில் நான் தலையிடமாட்டேன்—எனக்கு நேரமாகி விட்டது. போய் வருகிறேன். காட்டுக்கு வெளியே எனக்காகக் குதிரை காத்துக் கொண்டிருக்கிறது" என்று சொல்லிவிட்டு விரைந்து அவ்விடத்தை விட்டு அகன்று காட்டுக்குள்ளே மறைந்தார்.

ராணா பிரதாப் வியப்புடன் அந்தக் காட்டையே உற்று நோக்கியபடி இருந்தான்.

மங்களகரமான சுதந்திர தின வாழ்த்துக்கள்!



வீரமங்கை ஜோன்

பகீரதன்

பிரஞ்சு சாம்ராஜ்யம் அமைதி இழந்து தவித்துக் கொண்டிருந்த காலம். பிரஞ்சு நாட்டை அடிமை கொள்ள பிரிட்டிஷார் அதன்மீது போர் தொடுத்திருந்தனர். பல பிரஞ்சு நகரங்கள் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் வந்து விட்டன. அடுத்தாற்போல் பட்டத்துக்கு வரவேண்டிய ஏழாவது சார்லஸான பிரஞ்சு மன்னன் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான். அன்னியரின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கச் சக்தி யில்லாமல் நாட்டு மக்கள் அனைவரும் அடங்கி ஒடுங்கிக் கிடந்தனர்.

ஒரு நாள் மாலை. மாதா கோவில் ஒன்றில் வழக்கம்போல் மௌனப் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. என்றுமில்லாத அதிசயமாக அன்று கோவிலில் குடி கொண்டிருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு எங்கிருந்தோ ஒரு குரலோசை வந்தது. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

"பிரஞ்சு தேசத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்று! சார்லஸ் மன்னனுக்கு முடி சூட்டு!"

இது என்ன அதிசயம்! இப்படி யார் சொல்லுகிறார்கள்? எங்கிருந்து சொல்லுகிறார்கள்?

கோவிலுக்குள் கூடியிருந்தவர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

மீண்டும் அதே குரல்:

"பிரஞ்சு தேசத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்று! சார்லஸ் மன்னனுக்கு முடி சூட்டு!"

உள்ளே கூடியிருந்தவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவர்கள் மாதாகோவிலின் மண்டபத்தை அண்ணாந்து பார்த்தார்கள்; நெடிதுயர்ந்து நின்ற தூண்களைப் பார்த்தார்கள்; ஏசுநாதரின் திருமுகத்தைப் பார்த்தார்கள்.

ஒன்றும் புரியவில்லை!

அவ்வளவுதான்; ஆலயத்துக்குள் இருந்தவர்களிடையே ஒரே பரபரப்பு ஏற்பட்டது. அவர்களில் சிலர் கூட்டத்தின் மத்தியில் புகுந்து, குரல் வந்த திசையை நோக்கிச் சென்றார்கள். என்ன ஆச்சரியம்! அவர்களோடு சேர்ந்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்த ஒரு சின்னஞ் சிறு பெண்தான் அவ்வாறு ஆவேசம் வந்தவள்போல் சொல்லிக் கொண்டிருந்தாள்!

ஒவ்வொருவராகத் தன்னை நெருங்கி வருவதைக் கண்டதும், "பிரஞ்சு தேசத்தின் சுதந்திரத்தைப் காப்பாற்று! சார்லஸ் மன்னனுக்கு முடி சூட்டு!" என்று மீண்டும் மீண்டும் அவள் கத்திக்கொண்டே ஆலயத்தை விட்டு ஓட்டம் பிடித்தாள்!

அவள்தான் பிற்காலத்தில் வீர மங்கையாகத் திகழ்ந்த ஜோன் - ஆப் - ஆர்க்!

• • •

சிறுமி ஜோன் டாம்ரமி என்ற பிரஞ்சுக் கிராமம் ஒன்றில் வசித்து வந்த ஒரு ஏழைக் குடியானவன் குடும்பத்தில் பிறந்தவள். அவளுடைய தாயார் அவளை மிகவும் அருமையாக வளர்த்து வந்தாள். குழந்தை வளர வளரத் தாயுள்ளம் பூரித்தது. சிறுமி ஜோனுக்கு அவள் நூல் நூற்கச் சொல்லிக் கொடுத்தாள். துணி நெய்யக் கற்றுக் கொடுத்தாள். அத்துடன் பல வீர புருஷர்களின் கதைகளையும் அவளுக்குச் சொன்னாள். ஏசுநாதரைப் பற்றியும் அவருடைய புனித வாழ்க்கையைப் பற்றியும் போதித்தாள். இதனால் பள்ளிக்கூடமும் கலாசாலையும்கூட அளிக்க முடியாத அறிவைச் சிறுமி ஜோன் சுலபமாகப் பெற்றாள். ஓய்வு வேளைகளில் தனக்குச் சொந்தமான ஆடுகளை ஓட்டிக்கொண்டு போய்க் காடுகளில் மேய்த்து வருவது அவளுக்கு ஒரு பொழுதுபோக்காக இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறுமி ஜோன் மாதா கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்து விட்டு வீடு திரும்புவாள். ஆனால், அன்றைய தினம் பிரார்த்தனைக்குச் சென்றவள் வீடு திரும்பவே யில்லை!

மாதா கோவிலை விட்டு ஓடிய ஜோன், நேரே ஏழாவது சார்லஸ் மன்னனின் அரண்மனைக்குச் சென்றாள்.


தனக்கு எதிரே வந்து நின்ற சிறுமியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான் சார்லஸ் மன்னன். கன்னிப் பருவம் அடைந்திருந்த அந்தக் கிராமத்துப் பெண்ணின் கவர்ச்சி மிகுந்த அழகிலே மனதைப் பறிகொடுத்த மன்னன் ராஜோபசாரம் செய்து அவளை வரவேற்றான்.

மன்னனின் அசடு வழியும் முகத்தைக் கண்ட ஜோன், ‘‘அரசே! என்னுடைய அழகில் நீர் தடுமாறுவதற்கு இது நேரமல்ல; நம் நாட்டின் சுதந்திரம், மக்களின் கௌரவம் இப்போது பறிபோய்க் கொண்டிருக்கிறது. அதை நான் காப்பாற்ற வேண்டும். உம்முடைய சேனையில் எனக்கு ஒரு பகுதியைக் கொடும்!’’ என்று சொன்னாள்.

சார்லஸ் மன்னன் சிரித்தான். பிரஞ்சு நாட்டின் போர் வீரர்களாலேயே முடியாத காரியத்தை இந்தப் பெண் எப்படிச் சாதித்து விடப் போகிறாள் என்று கேலி செய்தான். ஆனால், ஜோனின் ஆணித்தரமான பேச்சும் வீரம் நிறைந்த வாதங்களும் சார்லஸின் மனதை மாற்றின. உடனே அவன் சிறுமி ஜோனுக்கு ராணுவ உடையும், போர்வாளும், பிரஞ்சு தேசக் கொடியும் கொடுத்து, அவளுடன் ஒரு சிறு சைனியத்தையும் அனுப்பி வைத்தான்.

ஜோன் போர்க் கவசம் பூண்டு, இடையில் போர்வாள் மின்ன, கையில் பிரஞ்சு நாட்டின் சுதந்திரக் கொடி பறக்க, குதிரையின் மீது ஏறிப் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

ஜோனின் தேச பக்தி ததும்பும் ஆவேசப் பேச்சுகளும், சுயநலமற்ற தொண்டும், உணர்ச்சி யூட்டும் உபதேசங்களும், போர்க் களத்தில் அவள் காட்டிய வீரமும் பிரஞ்சு மக்களுக்கு ஒரு புது உணர்ச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டின. தூங்கிக் கொண்டிருந்த பிரஞ்சு தேசம் துள்ளி எழுந்தது. யாருக்கும் தலை வணங்காத சார்லஸ் மன்னனும் அவனுடைய போர் வீரர்களும் ஜோனின் கட்டளைக்குத் தலை வணங்கினர். சின்னபின்னப்பட்டுச் சிதறிக் கிடந்த பிரஞ்சு தேசம் சேர்



பட்டு ஒற்றுமைப் பட்டது. ஏர் பிடித்த உழவன் வேல் பிடிக்க ஆரம்பித்தான். உளி பிடித்த தச்சன் வாள் பிடிக்க ஆரம்பித்தான். கொல்லர் உலைகளில் வாள்களும் வேல்களும் தயாராயின. "ஒரு பெண் மணிக்கு உள்ள வீரம் நமக்கு இல்லையா!" என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டு கால் உடைந்த சோல்ஜர்களும், கையுடைந்த சோல்ஜர்களும் கூடச் சண்டைக்குக் கிளம்பினார்கள்.

> தங்கக் கூட்டிலே பாலும் பழமும் உண்டு வளருகின்ற கிளி, எந்த நிமிஷத்திலே கூடு திறக்கப் படும் என்றுதான் காத்துக் கொண்டிருக்கும். அந்தக் கூண்டுக் கிளியின் ஆர்வம் மனிதனுக்கும் இருக்க வேண்டும். இந்த ஆர்வம் இல்லாத மனிதன் மனிதனல்ல. உயிரில்லாமல் உலவுகின்ற நிழல். —வால்டேர்.

அப்புறம் வெற்றிக்குக் கேட்கவேண்டுமா? ஜோனின் தலைமையில் ஆர்லியன்ஸ் நகரில் நடந்த மாபெரும் போரில் பிரிட்டிஷார் தோல்வியுற்றனர். ஆர்லியன்ஸ் நகரம் பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை யடைந்தது. பிரஞ்சு நாட்டின் சுதந்திரக் கொடி ஆர்லியன்ஸ் நகரை அழகு படுத்தியது. பிரஞ்சு மக்கள் வீராங்கனை ஜோனுக்கு 'ஆர்லியன்ஸ் மங்கை' என்ற வெற்றிப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

ஆர்லியன்ஸ் மங்கையின் அஞ்சா நெஞ்சமும், பொங்கித் ததும்பிய தேச பக்தியும், வீறுகொண்டெழும் சுதந்திர தாகமும், வீரர்களுக்கு மேலும் மேலும் அவள் மீது பக்தியையும் மரியாதையையும் உண்டாக்கின. அந்த உற்சாகத்தில் அவர்கள் ஜோனின் தலைமையில் மீண்டும் வீரப் போர் புரிந்து மேலும் நாலு இடங்களைப் பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்றினர். பிரஞ்சு நாட்டின் இன்னொரு முக்கிய நகரமான ரீம்ஸையும் மீட்டு அந்த நகரத்திலும் சுதந்திரக் கொடியைப் பறக்க விட்டு வெற்றி முழக்கம் செய்தாள் வீர மங்கை ஜோன். பிரஞ்சு மக்களின் ஆனந்தத்துக்குக் கேட்கவா வேண்டும்?

• • •

அன்று ஏழாவது சார்லஸ் மன்னனுக்கு முடி சூட்டு விழா. ரீம்ஸ் நகரத்தின் வீதிகளிலே வெற்றிக் கொடிகள் வானளாவிப் பறந்தன. நகரமெங்கும் ஜனக் கூட்டம் ஜே, ஜே என்று இருந்தது. ரீம்ஸ் நகரத்தின் பிரசித்தி பெற்ற கத்தோலிக்க மாதா கோயில் என்றுமில்லாத விசேஷ அலங்காரங்களுடன் விளங்கியது.

மாதா கோயிலுக்குள்ளிருந்த விசாலமான மண்டபத்தில் ஜனங்கள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு மத்தியில் வீர மங்கை ஜோன் ஒரு கையில் வீர வாளையும் இன்னொரு கையில் பிரஞ்சு நாட்டின் வெற்றிக் கொடியையும் ஏந்திய வண்ணம் கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் ஏழாவது சார்லஸ் மன்னன் வீற்றிருந்தான். ரீம்ஸின் ஆர்ச் பிஷப் ஏழாவது சார்லஸைப் பிரஞ்சு நாட்டின் மன்னனாகப் பிரகடனப்படுத்தி அவனுக்கு முடிசூட்டி வைத்தார்.

ஏழாவது சார்லஸுக்கு முடி சூட்டு விழா முடிந்ததும் வீர மங்கை ஜோன் தன்னுடைய கடமை முடிந்து விட்டதாகக் கருதினாள். ஆகவே தான் பிறந்த கிராமமாகிய டாம்ரமிக்குத் திரும்பிப் போக விரும்பினாள். சார்லஸ் அவள் ஊருக்குப் போவதைத் தடுத்துப் பாரிஸ் போர்க் களத்துக்குச் சென்று உதவி புரியுமாறு வேண்டிக் கொண்டான். வீராங்கனை ஜோன் ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு பாரிஸுக்குச் சென்றாள். பிரிட்டிஷ்காரர்கள் எப்படியாவது ஜோனைத் தீர்த்துக் கட்டி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தனர். அதற்கேற்றாற்போல பாரிஸில் நடந்த பயங்கரப் போரில் படுகாயமடைந்த ஜோன் குதிரை மீதிருந்து கீழே விழுந்து விட்டாள்.

இந்தச் சமயத்தில்தான் நடக்கக்கூடாத காரியம் ஒன்று நடந்துவிட்டது. தேசத் துரோகிகளும், ஐந்தாம் படைக்காரர்களுமான பிரஞ்சுப் பாதகர்களில் சிலர் 16,000 பிராங்குகளுக்காக, அதாவது சுமார் 8,000 ரூபாய்க்காக, ஈடு இணையற்ற வீர மங்கை ஜோனைப் பிரிட்டிஷாருக்குக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்!

பிரஞ்சு நாட்டின் தலைவி, அழிந்து போய்க் கொண்டிருந்த தன் தாய் நாட்டைக் கை கொடுத்துக் காப்பாற்றிய வீராங்கனை, தோல்வி என்பதையே அறியாத வெற்றி மாது, ஆர்லியன்ஸ் மங்கை, பாதகர்களின் சூழ்ச்சியால் மூர்க்கர்களான பிரிட்டிஷ் ராணுவத்தாரால் கைது செய்யப்பட்டாள்.

பிரிட்டிஷார் வீரமங்கை ஜோனைச் சிறையிலே அடைத்துச் சித்திரவதை செய்தனர்!

அத்துடன் அவர்கள் திருப்தி அடைந்தார்களா? இல்லை. பிரஞ்சு மக்களிடையே

அவளைப் பற்றித் துவேஷப் பிரசாரம் செய்தனர். ஜோன் ஒரு சூன்யக்காரி என்றும் அவளால் நாட்டுக்கே கேடு விளையலாம் என்றும் பொய்ப் பிரசாரம் செய்தார்கள். கடைசியில் அவளைக் கோர்ட்டிலே நிறுத்தி விசாரணை செய்தார்கள்.

"நான் சூன்யக்காரியுமல்ல, மந்திரவாதியுமல்ல. என் தாய் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமை என்று எனக்குத் தெய்வம் கட்டளையிட்டது. அந்தக் கடமையை நான் நிறைவேற்றினேன்!" என்றாள் ஜோன்.

நீதியற்ற பிரிட்டிஷ் நீதிபதிகளின் மண்டையில் அது ஏறவில்லை. "சூன்யக்காரியும் மந்திரவாதியுமான ஜோனை அவள் செய்த மோசடிக்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் மைதானத்திலே வைத்து உயிருடன் கொளுத்தவேண்டும்" என்று அவர்கள் தீர்ப்பளித்தனர்.

• • •

1431-ம் வருஷம் மே மாதம் முப்பதாம் தேதி. காற்சந்தி மூலையில், சந்தை கூடும் பெரிய மைதானத்தின் நடுவில், உயரமான கம்பத்தில் பத்தொன்பது வயதே நிறைந்த உத்தமி ஜோனை உயிரோடு கட்டி வைத்திருக்கின்றனர். அவளைச் சுற்றி வேகமாகப் பற்றி எரியும் விறகுக் கட்டைகள் மலைபோல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளை வெளேரென்று தூய வெள்ளை உடை அணிந்திருந்த ஜோன் வீரலக்ஷ்மியைப்போல் விளங்குகிறாள்.

வீராங்கனை ஜோனைக் கடைசி முறையாகப் பார்ப்பதற்காக அந்த மைதானத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கின்றனர். அவர்கள் எல்லாம் உணர்ச்சியற்ற மரங்களோ என்று சொல்லும்படி அசையாமல் நின்றுகொண்டிருக்கின்றனர். அவர்கள் கண்களில் கண்ணீர் கலகலவென்று பெருகிக் கொண்டிருக்கிறது.

அதோ, பிரஞ்சு நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றிய வீர மங்கையைச் சுற்றி யிருந்த விறகுக் கட்டையில் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் தீ வைக்கின்றனர்.

தீயின் செந்நாக்குகள் சுடர்விட்டுக் கிளம்புகின்றன. தீரம் நிறைந்த ஜோனைத் தீண்ட மனமில்லாமல் அவை தயங்கித் தயங்கிச் சுடர்விடுகின்றன. கடைசியில் அக்கினியும் மோசம் செய்துவிட்டது; தர்மம் அழிந்துவிட்டது; சத்தியம் செத்துவிட்டது; வீர மங்கை ஜோனின் புனித உடலைத் தீ தாவிப் பிடித்துவிட்டது!

• • •

அவளுடைய பூத உடல் அன்று அழிந்துவிட்டது உண்மைதான்; ஆனால் அவளது வீரம் செறிந்த புகழுடம்பு அஸ்தமிக்காத சூரியன் போல இன்றுவரை உலகுக்கே வீர ஒளியைக் கொடுத்து வருகிறது. தங்கள் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய வீராங்கனையைப் பிரஞ்சு மக்கள் மறக்கவில்லை. எப்படி மறக்க முடியும்? அவள் பிறந்து வளர்ந்து வந்த சிறிய வீட்டை அவர்கள் புனிதத் திருக் கோயிலாகக் காப்பாற்றிப் போற்றி வருகிறார்கள். அவள் அமரத்துவம் அடைந்த நாளை ஒவ்வொரு வருஷமும் திருநாளாகக் கொண்டாடி வருகிறார்கள். பிரஞ்சு நாட்டில் மூலைக்கு மூலை வீரமங்கை ஜோனின் எழிலுருவம் சிலை வடிவில் நின்று காட்சியளித்து வருகிறது. அமெரிக்கர்களோ அவளது வீர வாழ்க்கையைப் படம் பிடித்து வெள்ளித் திரையில் காட்டி மகிழ்கிறார்கள்.

ஜோனின் பூதவுடல் அன்று பிரெஞ்சு நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று சுதந்திரத்துக்காக வீரப் போர் புரிந்து வந்தது. அது போலவே இன்று அவளுடைய புகழுடம்பு பிரஞ்சு தேசம் பூராவும் உள்ள கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களுக்கு சுதந்திரத்திலுள்ள ஆர்வத்தை மேலும் மேலும் பெருக்கி வருகிறது.

வாழ்க, சுதந்திரம்! வளர்க வீரம்!!

அடிமைகளாக இருக்க யார் விரும்பவில்லையோ அவர்கள் மற்றவர்களை அடிமைகளாக்கக் கூடாது. மற்றவர்களுக்குச் சுதந்திரம் வழங்க விரும்பாதவர்கள் தாங்கள் சுதந்திரத்துடன் வாழத் தகுதியற்றவர்கள். அப்படி அவர்கள் சுதந்திரத்துடன் வாழ்ந்தாலும் அந்தச் சுதந்திரம் வெகு காலம் நிலைக்காது. —ஆபிரகாம் லிங்கன்.

காந்தீயப் பொருளாதாரம்



எஸ். சுப்பிரமணியம், புதுடில்லி

பொருளாதார நூல் இந்தியாவுக்குப் புதிதல்ல. அர்த்த சாஸ்திரம் எழுதிய கௌடில்யருடைய காலத்திலிருந்தே இந்நூலின் நோக்கம் இந்நாட்டு அறிஞர்களுக்குத் தெரிந்த விஷயந்தான். எல்லோருக்கும் வேலையும், உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க வீடும், மற்றும் இன்றியமையாத சௌகரியங்கள் பலவும் கிடைக்கும் வழியைச் சொல்லிக் கொடுக்கும் இந்த சாஸ்திரம் பல நூற்றாண்டுகளுக்கு முன் அன்னியர் படையெடுப்பில் மாயமாக மறைந்தது. சமீப காலத்தில் இந்நூல் மேல் நாடுகளில் மறுபடியும் தோன்றிய போதிலும் அதன் கொள்கைகள் முற்றிலும் மாறிவிட்டன. பெரிய பெரிய இயந்திரங்களின் மூலம் பலவித சாமான்களை உற்பத்தி செய்தல், மூலப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அவற்றைப் பலவிதத்திலும் பக்குவம் செய்து அதிக விலைக்கு விற்றல் போன்ற புதியமுறையில் செல்ல ஆரம்பித்தது இவ்வுலகம். இதன் பயனாக ஏற்பட்ட விளைவு அனைவருக்கும் தெரிந்தவை. முக்கியமாக, பிரிட்டன் போன்ற சில நாடுகள் ஓங்கவும், இந்தியா போன்ற பல நாடுகள் நசிக்கவும் நாம் கண்டோம்.

இதுசமயம் நம் நாட்டில் தாதாபாய் நௌரோஜி, ரமேஷ் சந்திர தத்தர், கோபால கிருஷ்ண கோகலே போன்ற தலைவர்கள் தோன்றி இந்தியாவின் பரிதாப நிலைமைக்குப் பரிகாரம் தேடினார்கள். ஆனால் நிலைமை சீரடைந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இந்தியர்கள் தங்கள் சுய நம்பிக்கையை இழந்தார்கள். கிராமங்கள் நிலைகுலைந்ததால் ஜனங்கள் நகரங்களுக்கு ஓடினார்கள். இவ்வாறு தேசம் சீர் குன்றிய காலத்தில் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து தாய்நாடு திரும்பினார். மகாத்மாவின் பொருளாதாரக் கொள்கைகளை ஆராயுங்கால் நாம் மேற்கூறிய நிலைமையை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது அவசியம்.

"எனக்கு மேனாட்டு நாகரிகம் வேண்டாம், பள்ளிக்கூடம் வேண்டாம், கோர்ட்டுகள் வேண்டாம்" என்று காந்தி மகான் தம் போரைத் துவக்கினார். ஆனால், இது வேண்டாம், அது வேண்டாம் என்றே சொல்லிக் கொண்டிருந்தால் 'வேண்டும்' என்பதற்கு ஒன்று வேண்டாமா? ஆகையால் மகாத்மா சர்க்காவைக் கண்டு பிடித்தார். பின்னொரு காலத்தில் தம் நண்பரொருவரிடம் "எனக்கும் இயந்திரத்திற்கும் யாதொரு விரோதமும் கிடையாது. சர்க்காகூட ஒரு இயந்திரந்தான். ஆனால் இந்த இயந்திரம் கிராமங்களில் வசிக்கும் கோடிக்கணக்கான ஏழை மக்களின் கஷ்டத்தைக் குறைக்கும் சாதனம்" என்று மகாத்மா சொன்னாராம். இதுதான் காந்தியடிகளின் மூலக் கொள்கை. மக்கள் குறைவாக இருந்தால் மேனாட்டு இயந்திரங்கள் வேண்டியதுதான். ஆனால் இந்தியாவின் ஜனத்தொகை அதிகமாக இருப்பதால் அவைகளுக்கு இங்கே இடமில்லை. உயிருடன் கூடிய இயந்திரத்தைக் கவனியாமல் உயிரில்லாததை வணங்குவது தவறேயல்லவா?

பொருளாதார நிபுணர்கள் கேட்பார்கள்: "இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சாமான்கள் விலை குறைவாயிற்றே; கையால் செய்யப்பட்ட பொருள்கள் இயந்திர சாமானுடன் எப்படிப் போட்டியிட முடியும்?" என்று. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கஷ்டந்தான். ஆனால் காந்தியடிகள் இதற்கும் பதில் சொல்லியிருக்கிறார். பொருளாதாரம் தர்ம சிந்தனைக்கு உட்பட வேண்டும். விலை குறைவாக இருக்கிறது என்பதற்காக நாம் ஒரு சாமானை வாங்கக் கூடாது. லாபத்தையே நோக்கமாகக் கொள்ளக் கூடாது. இயந்திரங்களுக்கு வேலை கொடுத்து மனிதர்களைச் சோம்பேறிகளாக்கக் கூடாது. வீணாகக் கழியும் பொழுதையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லோருக்கும் வேலை கொடுத்துச் செல்வத்தை எல்லோரும் பிரித்துக் கொள்வதே நோக்கமாக இருக்க வேண்டும். இதை நாம் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் தற்சமயம் மில் துணியும் கதரும்

முறையே விற்கும் விலையைக் கவனித்தால் நிபுணர்கள் சொல்லும் ஆக்ஷேபணைகளுக்கு அதிக ஆதாரம் கிடையாது என்பது விளங்கும்.

மேலும், இயந்திரம் கேட்டதெல்லாம் கொடுத்தாலும் எல்லாவற்றையும் ஒரு சிலர் கையிலே தான் கொடுக்கும். உற்பத்தியான பொருள்கள் ஒரு சில இடங்களிலேயே தேங்கிவிடும். இதனால் ஏமாற்றமும் கள்ள வியாபாரமும் தலை தூக்க ஏதுவாகிறது. இதைத் தடுக்கக் காந்திஜி முடிந்த வரையில் பொருள்களை, அவற்றை உபயோகிக்கும் ஸ்தானங்களிலேயே உற்பத்திசெய்ய வேண்டுமென்று சொன்னார். இந்த நோக்கத்துடன் தான் வர்தாவில் சில வருஷங்களுக்கு முன் அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அச்சங்கத்தின் இலட்சியம் இன்னும் கைகூடா விட்டாலும், கையால் கூடக் காகிதம் குறைந்த செலவில் செய்ய இயலும் என்பது போன்ற பல அரிய உண்மைகள் அதன் மூலம் நமக்குத் தெரிய வந்திருக்கின்றன.

முக்கியமாகக் காந்தியடிகள் சொன்னது, கிராமங்கள் தங்களுக்குத் தேவையான சாமான்களைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். இயந்திர சாதனங்களை எவ்வளவு குறைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொள்ள வேண்டும். குடியானவனுக்குப் போதிய உணவும் துணியும் கிடைக்கவேண்டும். இவற்றை நாம் அவனுக்குத் தர்மமாகக் கொடுக்கக் கூடாது. அவன் அதைத் தன் உழைப்பால் பெறவேண்டும். வயலில் பாடுபட்டால் அவனுக்கு உணவு கிடைக்கும். ஆனால் வருஷத்தில் பன்னிரண்டு மாதமும் வயலில் வேலை இருக்காது. வீண் பொழுது போக்கும் நேரத்தில் அவன் தனக்கு வேண்டிய அளவுக்கு ராட்டையில் நூல் நூற்றுக் கொள்ளலாம். இதற்கு மூலதனம் வேண்டியதில்லை. சீக்கிரம் கற்றுக் கொள்ளலாம். இது வீட்டிலேயே செய்யக்கூடிய தொழில். இதுதான் காந்திஜி காட்டிய வழியின் இரகசியம். ஒவ்வொருவரும் தனக்கு வேண்டியதைத் தானே உற்பத்தி செய்து கொண்டால், ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசம் மறைந்துவிடும்.

> நீங்கள் அரும் பெரும் காரியங்களைச் செய்யப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள். உண்மையில் நீங்கள் என் குழந்தைகளானால், யாதொன்றுக்கும் அஞ்சமாட்டீர்கள். சிங்க ஏறுகளை ஒத்திருப்பீர்கள். இந்தியாவை மட்டுமின்றி, உலக முழுவதையும் நாம் தட்டி எழுப்பியாக வேண்டும்.
>
> —சுவாமி விவேகானந்தர்

மகாத்மா சொன்னபடி பார்த்தால் உண்மையில் பணம் என்பது வெள்ளி அல்லது தங்கம் அல்ல; கையுழைப்புதான் என்பது விளங்கும். எவ்விதமான உழைப்பையும் இகழ்வது கூடாது. உழைப்பைக் குறைக்க வழி தேடுவது பிசகு. புதிதாக "ஹரிஜன்" பத்திரிகை ஆரம்பித்த போது இதைப் பற்றிக் காந்திஜி எழுதியதாவது :—"அமெரிக்காவிலிருந்து சில கோடீஸ்வரர்கள் இந்தியாவுக்கு வந்து நமக்கு ஏது வேண்டுமானாலும் சும்மா தருகிறோம் என்று சொன்னால், 'நண்பர்களே! உங்களுக்கு மிகவும் வந்தனம். ஆனால் எங்களுக்குத் தேவையான சாமான்கள் மிகச் சில. அவைகளை எவ்வளவு சிரமமாக இருந்தாலும் நாங்களே உற்பத்தி செய்து கொள்ளுகிறோம். நீங்கள் போய் வாருங்கள்!' என்று நாம் அவர்களைப் பார்த்துச் சொல்ல வேண்டும்."

இதனால் காந்திஜி இந்தியர்களைத் துறவிகளாக்க விரும்பினார் என்று சொல்வது சரியல்ல. நமது வாழ்க்கை நிலை உயர வேண்டும் என்பதே மகாத்மாவின் முக்கிய நோக்கம். அவசியமான அளவுக்குமேல் ஒருவருக்குப் பொருள்கள் கிடைக்கா விட்டால் அதனால் ஒரு பாதகமுமில்லை. தரித்திரத்துக்கு இடங் கொடுக்கக் கூடாதுதான்; ஆனால் அதை விலக்க முற்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் லாபமடையும் எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும். உதாரணமாகத் துணியை நாலும் 12 அணாவுக்கு வாங்கி 1½ ரூபாய்க்கு விற்றால் அவனுக்கு லாபம் என்ன கிடைக்கும் என்ற கேள்விக்கு ஒரு மாணவன் எத்தனைவிதமான பதில் சொன்னாலும் காந்திஜி சொன்னபடி பார்த்தால் அவனுக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனைதான் கிடைக்கும்!

எல்லோருக்கும் வேலை கொடுத்து செல்வத்தை எல்லோருக்கும் பிரித்துக் கொடுப்பது என்று ஏற்பட்டால், சமதர்மவாதிகள் காட்டுகிற வழியில் நாம் ஏன் செல்லக்கூடாது என்ற கேள்வி பிறக்கலாம். பலாத்கார முறைகளைக் கையாளாதவரை சமதர்மக் கொள்கைகளுக்கும் காந்தியடிகளின் உபதேசத்திற்கும் ஒன்றிரண்டு வித்தியாசங்கள்தான் உண்டு. முதலாவதாக, சமதர்மவாதிகள் ஒரு

வருக்கும் சொத்துரிமை கொடுக்கக் கூடாது என்று வாதிப்பார்கள். அதாவது சமதர்ம நாடுகளில் பணக்காரர்களுக்கு இடமில்லை. காந்தியடிகள் எண்ணப்படி பணக்காரர்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் தங்களுடைய சொத்து தங்களுக்கே என்று கருதாமல் பிறருக்கும் அதில் உரிமையுண்டு என்று கருதவேண்டும். இது அஹிம்சா தர்மப்படி சரி யென்றுதான் சொல்ல வேண்டும். நடைமுறையில் இது சாத்தியமா, இல்லையா என்ற கேள்விக்குத் திட்டமாகப் பதில் சொல்லுமுன் காந்தியடிகள் மறைந்து விட்டார்.


இரண்டாவதாக, பொருள் உற்பத்தி விஷயத்தில் சமதர்ம வாதிகள் இயந்திர சாதனத்திலும் சர்க்கார் ஆதிக்கத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள். காந்திஜியின் முறைப்படியோ இயந்திரத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும். மேலும் ஜலவசதி, மின்சாரம், போக்கு வரத்து, தபால், தந்தி முதலிய சில முக்கிய சாதனங்கள் சர்க்கார் கையிலிருக்க ஒப்புக் கொள்ளலாமே தவிர, மற்றத் துறைகள் எதிலும் சர்க்கார் தலையிடுவதை அனுமதிக்க வேண்டியதில்லை.

ஆனாலும், சமீப காலத்தில் சமதர்ம வாதிகளும் தங்களுடைய கொள்கைகளைச் சிறிதளவு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதன்படி, சமதர்மம் அமுலிலிருக்கும் நாடுகளில் இப்பொழுது யாரும் ஒரு மோட்டார் வைத்துக் கொள்ளலாம். ஆனால், மோட்டார் உற்பத்திச் சாலைக்கு மட்டும் சொந்தக்காரராக இருக்க முடியாது. ஆகவே, கூடிய சீக்கிரம் காந்திஜி சமதர்ம வாதிதான் என்றோ, அல்லது சமதர்ம வாதிகள் காந்தி வழியில் திரும்பி விட்டார்கள் என்றோ சொல்லும் காலம் வரலாம்.

இன்னும், பொருளாதார முறையில் நாணயச் செலாவணி, ஜனப்பெருக்கு, சர்வதேச வியாபார உறவு போன்ற பல விஷயங்கள் அடங்கியுள்ளன. இவற்றைப் பற்றிக் காந்திஜி சில சமயங்களில் தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். உதாரணமாக நாணய முறையைவிடப் பொருள் கைமாற்றுதான் நம் தேசத்துக்கு உகந்தது என்று ஒரு சமயம் சொல்லியிருக்கிறார். மற்றும், கல்வி மார்க்கத்திலும் சுகாதார விஷயங்களிலும்கூட காந்திஜி காட்டிய வழி தனிச் சிறப்புடன் விளங்குகிறது.

காந்தியடிகள் இன்று உயிருடனிருந்தால் இது போன்ற கருத்துக்களை இன்னும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருப்பார். அதற்குள் நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது நம்முடைய துரதிர்ஷ்டந்தான்!

எஜமான் கோபிப்பார்!



★ ★ ★ தேசத்துக்காக சகலத்தையும் தியாகம் செய்து சொல்லொணாத கஷ்டங்களையும் வேதனைகளையும் அனுபவித்த வீர சிகாமணி காலஞ்சென்ற ஸ்ரீ வ. வெ. சு. ஐயர். அந்த தீர புருஷனுடைய வாழ்க்கையைப் பற்றி அவருடைய புதல்வர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி எழுதியிருக்கும் இக் கட்டுரையைப் படிக்கும்போது நம்மை யறியாமலேயே நம் உள்ளம் உணர்ச்சி மயமாகிறது.

என் தந்தை

டாக்டர் வ. வெ. சு. கிருஷ்ணமூர்த்தி

ஸ்ரீ வ.வெ.சு. ஐயர் 1891-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 2-ம் தேதி பிறந்தார். பன்னிரண்டாம் வயதில், மாகாணத்தில் ஐந்தாம் மாணவனாக மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பதினாறும் வயதில் பி. ஏ. பாஸ் செய்தார். இருபதாம் வயதில் வக்கீலானார். இருபத்தைந்து வயதுவரை திருச்சியிலும் பின் ஒரு வருஷம் ரங்கூனிலும் வக்கீல் தொழில் நடத்தினார். அங்கிருந்து 1907-ல் பாரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக லண்டன் சென்றார். ரோமன் சட்டத்தில் (Roman Law) முதன்மையாகத் தேறினார்.

இவ்விதம் அமைதியாகப் போய்க்கொண்டிருந்த அவருடைய வாழ்க்கையின் போக்கை, வங்கப் பிரிவினையால் கொதித்தெழுந்த தேசிய ஜ்வாலையானது வேறு வழியில் திருப்பி விட்டது. தர்மா தர்ம விவேசனம் அற்ற மேல் பூர்வ நாகரிகத்தின் பிரதிநிதிகளான ஒரு சில பிரிட்டிஷ்காரர்கள், நம் பழம் பெரும் பாரத நாட்டைப் பாழ் செய்து மக்களை மிருகங்களிலும் கேவலமாகவும் கொடுமையாகவும் நடத்தி ஆட்சி புரிவது, லண்டனுக்குப் படிக்க வந்திருந்த இந்திய மாணவரிடையே ஒரு பெரும் கொதிப்பை உண்டாக்கியது. அபினவ பாரத சங்கம் தோன்றிற்று. அதில் என் தந்தையும் சேர்ந்தார். வங்கத்தில் வேலை பார்த்து வந்து ரிடையரான ஸர். கர்ஸன் வைலி என்ற ஐ. ஸி. எஸ். ஆபீஸரை மதன் லால் திங்கரா என்ற பஞ்சாபி மாணவன் லண்டனிலேயே சுட்டுக் கொன்றான். சித்ர வதைக்கு உட்படினும் அவன் தளராத உறுதியுடன் தான் மேற்கொண்ட காரியத்தைச் செய்வானா என்று பரிசோதிப்பதற்காக அவனது நகக்கண்களில் ஊசி ஏற்றிப் பார்த்த ஐயர், கடைசியில் அவன் விரும்பியபடியே அவன் தூக்கு மேடை ஏறிய போது, வாசனைத் தைலங்களை அவன் மீது ஊற்றி யனுப்பினார்.

பாரிஸ்டர் பட்டமளிப்பு விழாவில் ஐயர் வெள்ளைக்கார ராஜாவுக்கு ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள மறுத்து விட்டார். அதிகாரிகள் ஐயரைக் கைதுசெய்ய வாரண்டு பிறப்பித்தனர். ஸ்காட்லண்டு யார்டுக்காரர்கள், பிரான்ஸ் தேசத்தில் தன்னைக் கண்காணித்து வந்த பிரிட்டிஷ் ஒற்றர்கள், எகிப்து தேசம் வரையிலும்—மற்றும் பம்பாய்த் துறைமுகத்தில்கூட வேவு பார்த்த ஸி. ஐ. டி.க்காரர்கள் அத்தனை பேருடைய கண்ணிலும் மண் தூவி விட்டு, 1910-ம் வருஷம் அக்டோபர் மாதம் இறுதியில் அவர் புதுச்சேரி வந்து சேர்ந்தார். அப்பொழுது அவர் வயது இருபத்தொன்பதுதான்!

புதுச்சேரி வந்த சில நாட்களுக்கெல்லாம் அவர் அரசியலிலும் இலக்கியத்திலும் தீவிரமாய் ஈடுபடலானார். "சுதந்திர தேவியானவள் தன்னை விரும்புவோரை ரத்தபலி கேட்கிறாள்" என்று அவர் தாம் எழுதிய 'அழேன் முக்கே' என்னும் கதையில் கூறுவது போல, சுதந்திரப் போராட்டத்துக்குத் திண்மையான உடல் பெற்ற வாலிபர் படை வேண்டும் என்று கருதி நிறைய வாலிபர்களைச் சேர்த்தார். அவர்களுக்குக் குஸ்தி, சிலம்பம், கத்திச் சண்டை கற்றுக் கொடுத்தார். வெடிகுண்டு செய்வது, ரகசியச் செய்தி யனுப்புவது, பரிபாஷை, மாறு வேடம் புனைந்து கொள்வது முதலிய விஷயங்களையும் சொல்லிக் கொடுக்கலானார். பிரஞ்சு மாலுமிகளிடம் ரகசிய ஏற்பாடுகள் செய்து கொண்டு, ஏராளமான சுழல் துப்பாக்கிகளை வரவழைத்துத் தேசத்தின் பல பாகங்களுக்கு அனுப்பி வைத்தார். நெப்போலியனின் ராணுவ தந்திரங்களை அவன் எழுத்து மூலமே அறிந்து, நம் நாட்டில் நடத்த வேண்டிய புரட்சி யுத்தத்திற்கு அவற்றைப் பயன்படுத்த விரும்பி, பிரெஞ்சு பாஷையை மிக்க ஆர்வத்துடன் கற்றார்.

ஆயுதங்களைப் புரட்சிக்காகத் தயார் செய்வது மட்டும் போதாது என்பதை நன்குணர்ந்த ஐயர், மக்களின் மனதில் சுதந்திர தாகமும் தர்மாவேசமும் உறுதியும் ஊக்கமும் வளர வேண்டுமென்று கருதி நெப்போலியன், கரிபால்டி, 1857-ம்

ஆண்டில் நடந்த சிப்பாய்ப் புரட்சி போன்ற பல வீர சரித்திரங்களை எழுதினார். ஆனால் அவை அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப் பட்டு விட்டன.



இந்தச் சமயத்தில் தான் தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை ராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டார். இது கண்டு ஐயர் மிகவும் மனக் கொதிப்படைந்தார். தேசபக்தி கொண்ட குற்றத்திற்காக இந்தியர்களுக்கு இவ்விதத் தண்டனை அளித்தால் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ஆபத்து ஏற்படும் என்பதை ஆங்கில அரசாங்கம் உணரும்படி ஒரு காரியம் செய்ய வேண்டுமென அவர் நினைத்தார்.

ஐயருடைய எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதற்காகவே அனுப்பப் பட்டவர் போல வாஞ்சிநாத ஐயர் என்பவர் பாரதியாரைப் பார்ப்பதற்காகத் திருநெல்வேலியிலிருந்து புதுச்சேரி வந்தார். தேசிய வேலை செய்யத் தமக்கு ஆவலாயிருப்பதாக அவர் பாரதியாரிடம் தெரிவித்தார். பாரதியார், "ஐயரிடம் போங்கள்—அவர்தான் அதற்கெல்லாம் லாயக்கான மனிதர்!" என்று சொல்லி ஐயரிடம் வாஞ்சியை அனுப்பி வைத்தார். ஐயர் வாஞ்சியைச் சந்தேகமறச் சோதித்த பிறகு, "நான் எது சொன்னாலும் செய்ய உங்களுக்கு விருப்பமிருந்தால் நீங்கள் பார்த்துவரும் தபாலாபீஸ் உத்தியோகத்தை முதலில் ராஜீநாமாச் செய்துவிட்டு ஒரு வாரத்தில் இங்கு வாருங்கள்!" என்று சொல்லி யனுப்பினார். வ. உ. சிதம்பரம் பிள்ளையையும் சுப்ரமண்ய சிவாவையும் தண்டித்த திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஆஷுக்கு ஆயுள் குறைந்து வரும்போது வாஞ்சி ஐயர் ஏன் தாமதம் செய்யப்போகிறார்? மூன்று நான்கு நாட்களுக்குள் வாஞ்சி ஐயர் தம்முடைய வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டுப் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார்.

துப்பாக்கிகள் நன்றாகச் சுடுகின்றனவா என்று பரிசோதிக்கப் பட்டன. வாஞ்சி ஐயருக்குக் குறி தவறாமல் சுடுவதற்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

1911-ம் வருஷம், ஜூன் மாதம் 27-ம் தேதி. மணியாச்சி ஜங்ஷன். பட்டப் பகல். கலெக்டர் ஆஷ் துரை உல்லாசமாக ரயில் சலூனில் உட்கார்ந்து அநாகரிகமான கறுப்பு இந்தியர்களை வெறுப்போடு நோக்கிக்கொண்டிருந்தான். "என்னதான் பாடாய்ப் படுத்தினாலும் நம்மை எதிர்க்கத் துணியாத அடிமைப் பேதைகள் இவர்கள்!" என எண்ணிக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த போது, அவன் மார்பிலும் வயிற்றிலும் கடக் கடக் குண்டுகள் பாய்ந்தன. என்ன நடந்ததென்று தெரியுமுன், துப்பாக்கியின் வாயிலிருந்து வந்த புகை அடங்குமுன், ஐயரிடம் பிரமாணம் செய்து கொடுத்தபடி வாஞ்சி தம்மைத்தாமே வாய்க்குள் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொண்டு சுதந்திர தேவிக்கு முதல் பலியானார்.

சிதம்பரம் பிள்ளைக்குத் தண்டனை யளித்ததற்காகப் பழிக்குப் பழி வாங்கப் பட்டு விட்டது.

தக்க ருஜு ஒன்றும் கிடைக்காவிட்டாலும், அரசாங்கத்தார் ஐயர்தான் இதற்கு ஏற்பாடு செய்தவர் என்று தெரிந்து கொண்டார்கள். குற்றமற்ற இலக்கிய ஆராய்ச்சியிலும், கடற்கரைக்கு உல்லாசமாகப் போவதிலும், தேகப் பயிற்சி செய்வதிலும் தம் நாட்களைக் கழிப்பதாகத் தோன்றினாலும், மறைமுகமாக ஐயர் புரட்சி வேலையிலேயே சதா ஈடுபட்டிருக்கிறார் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது. எவ்விதமேனும் ஐயரைப் புதுச்சேரி எல்லையிலிருந்து கடத்தி அந்தமானுக்கோ, அல்லது வேறு தொலைவான இடத்திற்கோ தள்ளிவிட வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் சூழ்ச்சி செய்தது. ஐயரை உயிருடனோ, கொன்றோ, பிரிட்டிஷ் எல்லையில் கொண்டு வந்து சேர்ப்பவர்களுக்கு நிறையப் பணம் கொடுப்பதாகவும் அறிவித்தது.

இந்தச் சமயத்தில்தான் முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. "எம்டன்" என்னும் ஜெர்மன் கப்பல் வந்து எங்கு பார்த்தாலும் குண்டுகளைப் பொழிந்தது. இதற்கு உளவு சொல்லிக் கொடுப்பது ஐயர் எனக் கருதி அவரை

ஆப்பிரிக்காவில் உள்ள பிரெஞ்சு அல்ஜீயர்ஸுக்கு நாடு கடத்தப் போவதாகப் பிரெஞ்சு கவர்னர் எச்சரித்தார். ஐயர் ஒரு புறம் அவர்களோடு வாதாடி மிரட்டிக் கொண்டும், மற்றொருபுறம் அவ்விதம் ஒரு வேளை தாம் நாடு கடத்தப்பட்டு விட்டால் தமிழின் பெருமையை மேல் நாட்டுக்குக் காட்ட வேண்டுமென்ற தம் ஆவலை எவ்விதம் நிறைவேற்றுவது என்று ஆலோசித்துக் கொண்டும் இருந்தார். தமிழ் வேதமான திருக்குறளை ஆங்கிலத்தில் எழுதுவதுதான் அவசரமாய்த் தாம் செய்யக்கூடிய வேலை எனத் தீர்மானித்து, இரவு பகலாய் அதை மொழி பெயர்த்து நான்கு மாதத்திற்குள் அந்த வேலையை முடித்தார்.

தேசப் பற்றுக்கு அடுத்த படியாக, அவருக்குக் கம்பராமாயணப் பற்று அதிகமாக இருந்ததெனலாம். ஒற்றர்களிடமிருந்து தப்பி, லண்டனை விட்டு ஹாலந்துக்குப் போகும் போது கூட, தம் சிறு கைப்பெட்டியில் அதி அவசியமான சாமான்களில் ஒன்றாகக் கம்ப ராமாயணத்தை எடுத்து வைத்துக் கொள்ள அவர் மறக்கவில்லை!

தாம் பதிப்பித்த கம்பராமாயண பால காண்டச் சுருக்கத்தில் அவர் எழுதுவதாவது:—

"உலக வாழ்க்கையில் மனிதன் பெறக்கூடிய பேறுகள் பலவற்றுள் கம்பனுடைய ராமாயணத்தைப் படித்து அனுபவிப்பது மிகப் பிரதானமானவைகளில் ஒன்று என்பது எம்முடைய அபிப்பிராயம். ஏனெனில், ஆத்மானுபவத்திற்கு அடுத்தபடி கவிதானுபவம்தான்—மனிதனுக்கு உன்னதமான ஆனந்தத்தைத் தருகிறது. கவிதையில் தமிழ்ப் பாஷையில் மாத்திரமில்லை, மற்றெந்த பாஷையிலும்கூட, கம்ப ராமாயணத்திற்கு மேலான கவிதை எங்கே காணலாகும்?......கவிதாலோகத்தின் பேரரசர் என்று சொல்லத் தகுந்தவர்களெல்லாம் கம்பனுடைய சந்நிதியில் முடி சாய்த்து வணங்க வேண்டியதுதான்!"

புரட்சிக்காரரான ஐயர், தம் சொந்த வாழ்க்கையில் நாட்களை எவ்விதம் கழித்தார்? கம்பனது காவியத்தைப்போலமென்மையும் இனிமையும் கலந்ததாக, வள்ளுவரின் குறளைப் போல அறம் ததும்பியதாகத் தம் வாழ்க்கை இருக்க வேண்டுமென நினைத்து அதன்படியே அவர் வாழ முயன்றார்.

அதிகாலையில் சமுத்திரக் கரைக்குச் சென்று சூரியோதயத்தைப் பார்ப்பதில் என் தந்தைக்குப் பிரியம் அதிகம். சூரியோதயத்தைப் பற்றிய சுலோகங்களையும் தமிழ்ப் பாட்டுக்களையும் பலமாக முணுமுணுத்துக் கொண்டும், கூட அழைத்துச் சென்றிருக்கும் குழந்தைகளைக் குறளிலிருந்தும் கம்ப ராமாயணத்திலிருந்தும் பாக்களை ஒப்புவிக்கத் தூண்டிக் கொண்டும், அவர்களோடு தாமும் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டும் பிராணாயாமம், ஜபம் முதலியவற்றைச் செய்வார். இரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் கஸரத் செய்வது, கர்லாக் கட்டை சுற்றுவது இவைகளில் ஒரு நாளும் தவற மாட்டார். காலையில் நிறையத் தயிர் ஊற்றிப் பழையது சாப்பிடுவார். வாழ்நாளில் ஒரு முறை கூடக் காப்பி அருந்தியதில்லை. மத்தியானம் முழுவதும் இலக்கிய வேலை. மாலை நேரங்களில் பாரதியார், ஸ்ரீனிவாஸாசாரியார் இவர்களுடன் கடற்கரை போகாமலிருக்க மாட்டார்.

ஆனால், சூரியோதயம் பார்ப்பது, கஸரத் செய்வது, குறள் - கம்ப ராமாயணம் படிப்பது, கோலி ஆடுவது—இத்துடன் அவருடைய புதுச்சேரி வாழ்க்கை அடங்கி விடவில்லை. சொல்லொணாத அரசியல் போராட்டங்கள், மறு நிமிஷம் எப்படியோ என்று நினைக்கும் சம்பவங்கள் பல அவ்வப்போது நிகழ்ந்தது உண்டு. இன்று பகல் எந்த வீட்டில் இருப்போம், இரவில் எங்கு ஓடுவோம் என்று அவர் கவலைப்பட்ட நாட்களும் உண்டு. எவன் தம்முடைய சதியாலோசனைகளைக் கடைசிவரை காட்டிக் கொடுக்காமலிருக்கக் கூடிய நண்பன் என்று தயங்குவதும் உண்டு. கூண்டில் அடைபட்ட சிங்கம் போல அச்சிறு புதுச் சேரியிலேயே உழன்று காலம் வீணாகிறதே என்று அவர் பல முறை வேதனைப் பட்டதும் உண்டு. மொத்தத்தில், தமிழ் நாட்டுக்குச் சென்று அறிவு, ஆற்றல், வித்தை, வீரம், கொண்ட ஒரு வீரத் தமிழ்மரபை உண்டாக்க வேண்டும் என்று சதா துடித்துக் கொண்டிருந்தார் என் தந்தை.

ஆண்டவன் கட்டளை

நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள்; இந்தியா கண் விழித்து எழுந்திருக்க வேண்டுமென்று ஆண்டவன் கட்டளை பிறந்து விட்டது. எழுங்கள்! எழுங்கள்! நீளிரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. கடல் புரண்டு வருகிறது. அதன் உத்வேகத்தைத் தடுக்க எதனாலும் முடியாது.

—சுவாமி விவேகானந்தர்

மூன்றாவது சுதந்திர ஆண்டை முன்னிட்டு

எமது வாழ்த்துக்கள்!

★

கொள்ளேகாலம் பட்டினால்
சொந்தத் தறியில் தயாரிக்கப்பட்ட
கண்ணைக் கவரும் கலர்களில்
நூதன பார்டர்கள், வசீகரமான
முந்திகளுடன் சேர்ந்த

★ **பட்டுச் சேலைகள்**

★ **முகூர்த்த சேலைகள்**

சேலம் கல்லிடைக்குறிச்சி, உறையூர்

★ **வேஷ்டிகள்**

★ **நூல் சேலைகள்**

முதலியவை எம்மிடம் ஏராளமாக
குறைந்த விலையில் கிடைக்கும்

★

மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

'பிம்டிவாலா பில்டிங்ஸ்'

மதுங்கா G. I. P. :: பம்பாய் - 19

★

தலைமை ஆபீஸ் :

84, பாண்டி பஜார்

தியாகராயநகர் :: மதராஸ்-17



குலதனம்

போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆதாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தல் படைத்தவரும் "கேசவர்த்தினி"யைக் கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்திசெய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயனசாலை

கிராஸ் கட் ரோடு - கோயமுத்தூர்

சுரேந்திரநாத் பானர்ஜி

அக்ஷயம்

"ஸுரேன்! இம்மாதிரி யாராவது மேல் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்வார்களா? நீ செய்த காரியம் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை."

"நான் வேறு என்ன செய்வது? நீதிக்கும் நேர்மைக்கும் விரோதமாக ஒரு காரியத்தைச் செய்வதென்றால் என் மனம் ஒப்பவில்லையே!"

"என்னவோ, அப்பா! பிரிட்டிஷ் அரசாங்கத்திலே இவ்வளவு பெரிய வேலை — அதுவும் ஒரு இந்தியனுக்குக் கிடைப்பதென்பது இலேசுப்பட்ட காரியமில்லை. கைக்குக் கிடைத்ததை விடுவதென்றால்..."

"அதற்காகப் பொய்க்கும் புரட்டுக்கும் இடம் கொடுக்கச் சொல்கிறீர்களா? நியாயத்துக்கு விரோதமாக நடக்கச் சொல்கிறீர்களா?"

"நீ ஒன்றும் தெரியாதவன் அல்ல; நான் உனக்கு என்னத்தைச் சொல்லுவது? உன் உசிதப்படி செய்!"

"நியாயத்தையும் நேர்மையையும் நிலைநாட்டுவதற்காக நான் லண்டன் வரை போய்ப் போராடப் போகிறேன். நீங்கள் என்னை ஆசீர்வதித்து அனுப்பவேண்டும்."

"போய் வா! எப்பொழுதுமே நியாயத்துக்குத்தான் வெற்றி கிடைக்கும்" என்று சொல்லிப் பெரியவர் ஆசீர்வதித்தார்.

• • •

மேலே குறிப்பிட்ட சம்பாஷணை ஒரு ஜில்லா கலெக்டருக்கும், அவருடைய நன்மையில் கருத்துக் கொண்ட ஒரு பெரியவருக்கும் நடந்தது; அதுவும் சற்றேறக் குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது.



அந்தக் கலெக்டர் பெரியவரிடம் சொன்ன சொற்படி லண்டன்மா நகரம் வரை சென்று தன் கட்சியை எடுத்துரைத்தார்; நியாயம் கோரினார். ஆனால் ஆங்கிலேய அரசாங்கம் அவருடைய சொல்லுக்குச் செவி சாய்த்தால்தானே! தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பதுபோல, மேலதிகாரிகளின் கட்சிதான் நியாயமானது என்று தீர்ப்புக் கூறியது; வேலையை விட்டும் அவரை நீக்கியது. அது மட்டுமா? ஐ. ஸி. எஸ். படித்த தோஷத்துக்காக அவருக்கு மாதம் ஐம்பது ரூபாய் தருவதாகவும் கூறியது.

அவர் 'கலெக்டர் வேலை போய்விட்டதே' என்று அஞ்சிச் சாகவில்லை; வருந்தவில்லை.

அரசாங்கத்தாரின் அந்தச் செய்கை அவருடைய மனதிலே ஒரு புயலையும் தணியாத மன உறுதியையும் உண்டுபண்ணிற்று. அவருடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றியது. ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக, உலகத்துக்கே வழிகாட்டியாக இருந்த நாட்டின் மக்கள் இப்போது ஒருவித உரிமையும் இன்றி அடிமைத் தளையில் சிக்குண்டு அல்லலுறும்படியாகி விட்டதே என்ற கிலேசத்தையும் உண்டுபண்ணிற்று. அந்தக் களங்கத்தைப் போக்கித் தாய்நாட்டை மறுபடியும் பழைய உன்னத ஸ்திதியில் கொண்டு வரவேண்டுமென்ற ஆசையையும் அவருடைய உள்ளத்தில் தோன்றச் செய்தது.

அந்தக் கலெக்டர் யார் தெரியுமா? வேறு யாருமில்லை; ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜிதான்! நாட்டு மக்களிடையே சுதந்திர வாஞ்சையை நாட்டி, தேசப்பற்றை ஊட்டியவர் என்று பாரத மக்களால் புகழப்பட்டவர் சுரேந்திரநாத் பானர்ஜி; நீதியையும் நெறியையும் நிலைநிறுத்துவதற்காக அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர் சுரேந்திரநாத் பானர்ஜி. அதன் பொருட்டுத் தம் நண்பர் குழாத்தினால் 'தஞ்சம் புகாதவர்' என்னும் பொருள் கொண்ட 'ஸரண்டர் நாட்' (Surrender not) பானர்ஜி என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்தவரும் சுரேந்திரநாத் பானர்ஜிதான்!

தேச பக்தர்கள் நிறைந்த வங்க நாட்டிலே கல்கத்தா நகரத்தில், 1848-ம் ஆண்டில் சுரேந்திரநாதர் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு பிரபல டாக்டர். அவருடைய குடும்பம் மேன்மையான ஸ்திதியிலிருந்த ஓர் உயர்ந்த குடும்பம். கீழ் நாட்டுக் கலாசாரமும் மேல் நாட்டு நவநாகரிகமும் ஒருங்கே கலந்திருந்த குடும்பம் அது. சுரேந்திரநாதர் உடல் வலிமையும் உள்ள வலிமையும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தார். அவர் கல்கத்தா சர்வகலாசாலையின் பி. ஏ. பரீக்ஷையில் தேறியதும் அவருடைய அறிவாற்றலைக் கண்டு, அவருடைய தந்தையும் கலாசாலைப் பிரின்ஸ்பாலும் சேர்ந்து ஐ. ஸி. எஸ். படிப்புக்காக மேல் நாட்டுக்கு அவரை அனுப்புவதென்று முடிவு செய்தார்கள்.

அந்தக் காலத்தில், சமூகத்தின் சட்டதிட்டங்களையும், உற்றார் உறவினர்களின் ஆட்சேபங்களையும் மீறிக் கடல் தாண்டிப் போவதென்பது லகுவான காரியமா? ஆயினும் தனயனின் படிப்பில் கண்ணுங் கருத்துமாயிருந்த அவருடைய தந்தை அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், சுரேந்திரநாதரை மேல் படிப்புக்காக மேல் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் மேல் நாடு சென்று ஐ. ஸி. எஸ். பட்டம் பெற்றுத் திரும்பி வந்த தனது குமாரனைக் கண்குளிரக் கண்டு ஆனந்திக்க அவருடைய தந்தை கொடுத்து வைக்கவில்லை. மேல் நாடு போய் வந்த குற்றத்துக்காக, சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கு பானர்ஜி உட்படும்படியாயிற்று. ஆனால் அவற்றையெல்லாம் தைரியமாக எதிர்த்து நின்று அவர் வெற்றி கண்டார்.

ஸில்ஹட் ஜில்லாவில் உதவி மாஜிஸ்திரேட்டாகவும், பிறகு கலெக்டராகவும் பதவியேற்ற சுரேந்திரநாதர், அதிகார வர்க்கத்தின் கோபத்துக்குப் பாத்திரமாகி வேலையை விட்டு வெளியேறும்படியாயிற்று. அஞ்சா நெஞ்சம் படைத்த பானர்ஜி அதற்கெல்லாம் அஞ்சவில்லை. தம் கட்சியை எடுத்துரைத்து நியாயம் பெறுவதற்காக மேல்நாடு சென்றிருந்த அவர் 'பாரிஸ்டர்' பட்டத்துடன் தாய் நாடு திரும்பி வந்தார். திரும்பி வந்ததும் அவர், 'மெட்ரோபாலிடன் இன்ஸ்டிடியூஷன்' என்னும் ஒரு கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியர் பதவியேற்றார். இந்தியப் பண்பு, இந்தியச் சரித்திரம், இந்திய ஒற்றுமை போன்ற அவருடைய பொருட் செறிவுள்ள பிரசங்கங்களைக் கேட்டு மாணவர்கள் அவர்மீது பக்தியும் மரியாதையும் கொண்டனர்.

கல்கத்தா நகரத்திலே, 1876-ம் ஆண்டில் 'இந்தியன் அஸோஸியேஷன்' என்னும் சங்கம் அவருடைய ஆதரவில் ஸ்தாபிதமாயிற்று. பாமர மக்களிடையே சுதந்திரப் பற்றை உண்டுபண்ணுதல், ஜாதி மத வித்தியாசங்களை ஒழித்து மக்களிடையே ஒற்றுமையை நிலவச் செய்தல், பொது மக்களைப் பொதுக் காரியங்களில் கிளர்ச்சி கொள்ளச் செய்தல் போன்ற பிரசாரங்களை அந்தச் சங்கம் செய்து வந்தது. சுரேந்திரநாத் பானர்ஜியின் அறிவுத் திறனும், நாவன்மையாலும் அந்தச் சங்கத்தின் நோக்கங்கள் பொது மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் அதி சீக்கிரமாகப் பரவின. மாகாணச் சட்டசபைகளில் அதிகமான ஸ்தானங்களும், உரிமைகளும் இந்தியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கிளர்ச்சி செய்தார்.

"ஆதிக்க வெறியில் இருக்கும் ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்த்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது. அதைத் தட்டிக் கொடுத்து மாபெரும் காரியங்களைக் கூட லகுவில் சாதித்துக் கொள்ளலாம்" என்பதில் அபார நம்பிக்கை படைத்தவர் சுரேந்திரநாத் பானர்ஜி. ஆனால் நீதிக்கும் நேர்மைக்கும் மாறான காரியங்களைச் சில சமயம் எதிர்த்துப் போராடித்தான் ஆக வேண்டும் என்பதையும் அவர் அறியாதவரல்ல.

இதற்கிணங்க 1878-ம் ஆண்டில் லிட்டன் பிரபு கொண்டுவந்த தாய் பாஷைப் பத்திரிகைச் சட்டத்தை அவர் கடைசிவரை எதிர்த்துப் போராடினார். ரிப்பன் பிரபு காலத்தில் அந்தப் போராட்டத்தில் அவர் வெற்றியும் கண்டார்.

முள் நிறைந்த வேலியில் துணியை உலர்த்தி விட்டால் ஜாக்கிரதையாகத்தானே எடுக்க வேண்டும்? அதேபோலத்தான் நாமும் நமது தாய்நாட்டை மீட்கவேண்டும் என்று கருதி அவர் ரிப்பன் பிரபுவின் ஸ்தலஸ்தாபன மசோதாவைச் சில திருத்தங்களுடன் ஒப்புக்கொண்டார். 'சுய ஆட்சி பெறுவதற்கு இதுதான் முதற்படி' என்று கூறி அதை ஏற்கும்படி மக்களைத் தூண்டினார்.

அவர் தம் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்காக 'வங்காளி' என்னும் வாரப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். அது நாளடைவில் உயர்ந்த தினப்பத்திரிகையாக மாறி வங்காளத்தில் மிகவும் செல்வாக்கு அடைந்தது. 'இல்பர்ட் மசோதா' சம்பந்தமாக அதில் எழுப்பிய விவாதத்தின் காரணமாக,

வருக்கும் சொத்துரிமை கொடுக்கக் கூடாது என்று வாதிப்பார்கள். அதாவது சமதர்ம நாடுகளில் பணக்காரர்களுக்கு இடமில்லை. காந்தியடிகள் எண்ணப்படி பணக்காரர்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் தங்களுடைய சொத்து தங்களுக்கே என்று கருதாமல் பிறருக்கும் அதில் உரிமையுண்டு என்று கருதவேண்டும். இது அஹிம்சா தர்மப்படி சரியென்றுதான் சொல்ல வேண்டும். நடைமுறையில் இது சாத்தியமா, இல்லையா என்ற கேள்விக்குத் திட்டமாகப் பதில் சொல்லுமுன் காந்தியடிகள் மறைந்து விட்டார்.


இரண்டாவதாக, பொருள் உற்பத்தி விஷயத்தில் சமதர்ம வாதிகள் இயந்திர சாதனத்திலும் சர்க்கார் ஆதிக்கத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள். காந்திஜியின் முறைப்படியோ இயந்திரத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும். மேலும் ஜல வசதி, மின்சாரம், போக்கு வரத்து, தபால், தந்தி முதலிய சில முக்கிய சாதனங்கள் சர்க்கார் கையிலிருக்க ஒப்புக் கொள்ளலாமே தவிர, மற்றத் துறைகள் எதிலும் சர்க்கார் தலையிடுவதை அனுமதிக்க வேண்டியதில்லை.

ஆனாலும், சமீப காலத்தில் சமதர்ம வாதிகளும் தங்களுடைய கொள்கைகளைச் சிறிதளவு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதன்படி, சமதர்மம் அமுலிலிருக்கும் நாடுகளில் இப்பொழுது யாரும் ஒரு மோட்டார் வைத்துக் கொள்ளலாம். ஆனால், மோட்டார் உற்பத்திச் சாலைக்கு மட்டும் சொந்தக்காரராக இருக்க முடியாது. ஆகவே, கூடிய சீக்கிரம் காந்திஜி சமதர்ம வாதிதான் என்றோ, அல்லது சமதர்ம வாதிகள் காந்தி வழியில் திரும்பி விட்டார்கள் என்றோ சொல்லும் காலம் வரலாம்.

இன்னும், பொருளாதார முறையில் நாணயச் செலாவணி, ஜனப்பெருக்கு, சர்வதேச வியாபார உறவு போன்ற பல விஷயங்கள் அடங்கியுள்ளன. இவற்றைப் பற்றிக் காந்திஜி சில சமயங்களில் தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். உதாரணமாக நாணய முறையைவிடப் பொருள் கைமாற்றுதான் நம் தேசத்துக்கு உகந்தது என்று ஒரு சமயம் சொல்லியிருக்கிறார். மற்றும், கல்வி மார்க்கத்திலும் சுகாதார விஷயங்களிலும்கூட காந்திஜி காட்டிய வழி தனிச் சிறப்புடன் விளங்குகிறது.

காந்தியடிகள் இன்று உயிருடனிருந்தால் இது போன்ற கருத்துக்களை இன்னும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருப்பார். அதற்குள் காமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது நம்முடைய துரதிர்ஷ்டந்தான்!

எஜமான் கோபிப்பார்!



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா. கி.

14. நாடு எழுந்தது!

சென்னைச் சுற்றுப் பிரயாணத்தை காந்திஜி சீக்கிரமாகவே முடித்துக் கொண்டு பம்பாய்க்குப் பிரயாணமானார். ஏப்ரல் மாதம் 6-ந் தேதி கொண்டாட்டத்துக்குப் பம்பாய் வந்துவிட வேண்டும் என்று பம்பாய் நண்பர்கள் மகாத்மாவுக்குத் தந்தி யடித்திருந்தார்கள். எனவே, பம்பாய்க்கு ஏப்ரல் மாதம் 4-ந் தேதி மகாத்மா பம்பாய்ச் சேர்ந்தார். மகாத்மா ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போதே டில்லியிலிருந்து விபரீதமான செய்திகள் வந்துவிட்டன.

ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு மார்ச்சு மாதம் 30-ந் தேதி என்று முதலில் குறிப்பிட்டு விட்டு அப்புறம் ஏப்ரல் மாதம் 6-ந் தேதிக்குத் தள்ளிப் போட்டார்கள் அல்லவா? தேதியைத் தள்ளிப்போட்ட செய்தி டில்லிக்குச் சரியான காலத்தில் போய்ச் சேரவில்லை. ஆகையால் 30-ந் தேதி அன்றே டில்லியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதற்கு முன்னால் எந்த நாளிலும் டில்லி அத்தகைய காட்சியைப் பார்த்தது கிடையாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அவ்வளவு ஒற்றுமையுடன் அன்றைக்கு ஹர்த்தால் அனுஷ்டித்தார்கள். பெரிய பெரிய வியாபார ஸ்தலங்களிலிருந்து மிகச் சிறிய சோடாக் கடை வரையில் எல்லாம் மூடப்பட்டிருந்தன. வண்டிக்காரர்கள் அன்று வண்டி ஓட்டவில்லை. வீதிகளில் அங்காடிக் கூடைகள் வரவில்லை. அநேகர் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்கள். பல ஊர்வலங்கள் நடந்தன; பல பிரார்த்தனைக் கூட்டங்கள் நடந்தன. கூட்டங்களில் எல்லாம் பெரிய பிரம்மாண்டமான கூட்டம் ஜும்மா மசூதியில் கூடிற்று. அன்றைக்கு டில்லி ஜும்மா மசூதியில் சரித்திரம் கண்டிராத அதிசயம் ஒன்று நடைபெற்றது. டில்லி ஜும்மா மசூதி மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹான் காலத்தில் கட்டப்பட்டது. இந்தியாவிலேயே மிகப் பெரிய மசூதி அது. அந்த மசூதியின் உட்புறத்து முற்றத்தில் ஐம்பதினாயிரம் பேர் ஏககாலத்தில் கூடிப் பிரார்த்தனை செய்யலாம். வெறும் பொதுக் கூட்டமாகக் கூடினால் ஒரு லட்சம் பேர் கூடலாம். முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் பிரதான புண்ணிய ஸ்தலமாதலால் அந்த பகுதிக்குள் அது வரை எந்த ஹிந்துவும் பிரசங்கம் செய்ய அநுமதிக்கப் பட்டதில்லை. அத்தகைய என்றும் நடவாத காரியந்தான் அந்த மார்ச்சு 30உ நடந்தது.

அப்போது டில்லியில் இரண்டு மாபெரும் தேசீயத் தலைவர்கள் இருந்தார்கள். ஒருவர் ஹக்கீம் அஜ்மல்கான். இன்னொருவர் சுவாமி சிரத்தானந்தர். இவர்கள் இருவரும் வைத்ததே டில்லியில் சட்டம் என்னும்படியான நிலைமை அப்போது ஏற்பட்டிருந்தது. ஜும்மா மசூதியில் நடந்த பிரம்மாண்டமான முஸ்லிம்களின் பிரார்த்தனைக் கூட்டத்தில் சுவாமி சிரத்தானந்தர் பேசுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். சுவாமி அவ்விதமே சென்று பேசினார். அவருடைய பேச்சை அவ்வளவு முஸ்லிம்களும் ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்தார்கள்.

இவ்வாறு சரித்திரத்திலேயே கேட்டிராத அளவில் ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம் ஏற்பட்டிருப்பதையும் பொது மக்களின் எழுச்சியையும் ஆவேசத்தையும் கண்டு பிரிட்டிஷ் சர்க்காரின் அதிகாரிகள் மிரண்டு போனார்கள். இந்த நிலைமையை அவர்களால் சகிக்க முடியவில்லை. அதற்குச் சில வருடங்களுக்கு முன்புதான் பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்குச் சென்றிருந்தது. இந்திய ஏகாதிபத்யத்தின் தலைநகரத்தில் ஒரு முஸ்லிம் தலைவரும் ஹிந்து தலைவரும் சேர்ந்து பொது மக்களின் மீது ஆட்சி நடத்துவதைப் பிரிட்டிஷ் அதிகாரிகளால் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? அன்று நடந்த ஊர்வலங்களில் ஒன்று டில்லி ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

போலீஸ் அதிகாரிகள் வந்து ஊர்வலத்தை வழி மறித்தார்கள். ஊர்வலத்தினர் கலைய மறுத்தார்கள். சமயம் பார்த்துச் சில கற்கள் எங்கிருந்தோ வந்து விழுந்தன. அதை வியாஜமாக வைத்துக் கொண்டு போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். கூட்டத்தில் சிலர் மாண்டு விழுந்தார்கள். பிறகு ஊர்வலம் கலைந்து போயிற்று. இந்தச் சம்பவம் டில்லியில் பெருங் கலக்கத்தை உண்டு பண்ணியிருந்தது. மக்களின் உள்ளம் கொந்தளித்தது. எந்த நிமிஷத்தில் என்ன நடக்குமோ என்ற கவலை தலைவர்களுக்கு ஏற்பட்டது. நிலைமையைத் தங்களால் சமாளிக்க முடியுமா என்ற ஐயமும் அவர்களுக்குத் தோன்றியது. சுவாமி சிரத்தானந்தர் மகாத்மா காந்திக்கு "உடனே புறப்பட்டு வரவும்" என்று தந்தி அடித்தார்.

டில்லியில் நடந்தது போலவே லாகூரிலும் அமிருதசரஸிலும் மார்ச்சு மாதம் 30-ந் தேதி ஹர்த்தால் நடைபெற்றது. அந்த இரண்டு இடங்களிலும் டில்லியில் நடந்தது போலவே பொது ஜனங்கள் மீது போலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது; உயிர்ச் சேதமும் நிகழ்ந்தது. அமிருதஸரஸில் அச்சமயம் இரண்டு தலைவர்கள் ஒப்பற்று விளங்கினார்கள். இவர்களில் ஒருவர் டாக்டர் சத்தியபால்; இன்னொருவர் டாக்டர் கிச்லூ. ஒருவர் ஹிந்து; இன்னொருவர் முஸ்லிம். இந்திய தேசத்தில் அச்சமயம் ஏற்பட்டிருந்த மகத்தான ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்துக்கு அறிகுறியாக டாக்டர் சத்தியபாலும் டாக்டர் கிச்லூவும் விளங்கினார்கள். மார்ச்சு 30உ சம்பவங்களுக்குப் பிறகு அந்த இரு டாக்டர்களும் மகாத்மா காந்திக்கு "உடனே புறப்பட்டு வரவும்" என்று தந்தி அடித்தார்கள்.

காந்திஜி பம்பாய் வந்து இறங்கிய உடனே மேற்கூறிய இரு தந்தி அழைப்புகளும் அவருக்குக் கிடைத்தன. மகாத்மா யோசித்துப் பார்த்தார். டில்லியிலும் அமிருதசரஸிலும் நடந்தது நடந்து போய்விட்டது. ஆனால் பம்பாயிலோ ஏப்ரல் 6-ந் தேதி ஹர்த்தால் நடந்தாக வேண்டும். ஆகையால் 6-ந் தேதி பம்பாயில் தங்கிவிட்டு மறுநாள் புறப்பட்டு வருவதாக மகாத்மா மேற்கூறிய நண்பர்களுக்குப் பதில் தந்தி அனுப்பினார்.

• • •

1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ந்தேதி இந்தியாவின் சரித்திரத்தில் மிக முக்கியமான ஒரு தினம். இந்தியாவின் சுதந்திரப் போரின் சரித்திரத்தில் அதைப் போன்ற முக்கியமான தினம் வேறு எதுவும் இல்லை என்றே சொல்லலாம். அன்றைக்கு இமய மலையிலிருந்து கன்னியாகுமரி வரை இந்தியாவில் உள்ள நகரங்களிலும் பட்டணங்களிலும் ஹர்த்தால் நடந்தது. காங்கிரஸைப் பற்றியோ சுதந்திரப் போரைப் பற்றியோ அது வரை கேள்விப்பட்டிராத பட்டிக்காட்டுக் கிராமங்களில் கூட மக்கள் விழித்தெழுந்தார்கள்; கடை அடைத்தார்கள்; வேலை நிறுத்தம் செய்தார்கள்; ஊர்வலம் விட்டார்கள்; பொதுக் கூட்டம் நடத்தினார்கள். ரவுலட் சட்டத்தை எதிர்த்துச் சட்டமறுப்புச் செய்வோம் என்று ஏகமனதாகத் தீர்மானம் செய்தார்கள்.

அன்றைக்குச் சென்னைமாநகரின் கடற்கரையில் இரண்டு லட்சம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். இவ்வளவு பெரிய பொதுக் கூட்டத்தைச் சென்னை நகரம் அதற்கு முன் என்றும் கண்டதில்லை. மதுரையிலும் திருச்சியிலும் பொதுக் கூட்டத்தில் ஐம்பதினாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். கல்கத்தாவிலும் நாகபுரியிலும் லக்னௌவிலும் அலகாபாத்திலும் பூனாவிலும் ஆமதாபாத்திலும் அவ்வாறே ஹர்த்தால்களும் பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. இந்த நிகழ்ச்சிகளில் ஆங்காங்கு லட்சக்கணக்காக ஜனங்கள் கலந்து கொண்டார்கள்.

சத்தியாக்கிரஹ இயக்கத்தின் தலைமை ஸ்தலம் பம்பாய் நகரம். அன்றைக்கு மகாத்மா காந்தியும் பம்பாயிலேதான் இருந்தார். ஆகையால் பம்பாயில் அன்று நடந்த சம்பவங்கள் மிகவும் முக்கியத்தைப் பெற்றிருந்தன.

பம்பாயில் அன்றைக்குப் பூரண ஹர்த்தால் நடைபெற்றது. கடை கண்ணிகள் மூடப்பட்டன. ஆலைகள் மூடப்பட்டன. வண்டிகள், டிராம்கள் ஒன்றும் ஓடவில்லை. பள்ளிக்கூடங்களும் நடைபெறவில்லை. ஹர்த்தால் பூரண வெற்றியோடு நடந்தது; பூரண அமைதியுடனும் நடந்தது. டில்லியில் நடந்தது போல் துப்பாக்கிப் பிரயோகம் முதலிய விபரீத சம்பவம் எதுவும் பம்பாய் நகரில் நடைபெறவில்லை.

அன்று காலையில் பம்பாய் நகரவாசிகள் ஆயிரக்கணக்கில் சௌபாத்தி கடற்கரைக்கு வந்தார்கள். கடலில் நீராடினார்கள், பின்னர் ஊர்வலமாகக் கிளம்பித் தாகூர் துவாரம் என்னும் கோவிலுக்குப் போனார்கள். ஊர்வலத்தில் பெருந்திரளான முஸ்லிம்களும் ஒரு சில ஸ்திரீகளும் குழந்தைகளும் கூட இருந்தார்கள். தாகூர் துவாரத்தில் ஊர்வலம் முடிந்த பிறகு பக்கத்திலிருந்த மசூதிக்கு வரும்படியாகத் தலைவர்களை சில முஸ்லிம்கள் அழைத்தார்கள். அதற்

ணங்கி மகாத்மா காந்தியும் ஸ்ரீமதி சரோஜினி தேவியும் பக்கத்திலிருந்த மசூதிக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் பிரசங்கம் செய்தார்கள்.

அன்றைய தினம் ஏதேனும் ஒரு முறையில் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்று காந்திஜி தீர்மானித்திருந்தார். அதற்கு ஒரு வழியும் கண்டு பிடித்திருந்தார். காந்திஜியின் நூல்களாகிய "இந்திய சுயராஜ்யம்" "சர்வ தயை" என்னும் இரு நூல்களுக்கும் சர்க்கார் ஏற்கனவே தடைவிதித்து அவற்றைப் பிரசுரிக்கக் கூடாது என்றும் தடை உத்தரவு போட்டிருந்தார்கள். மேற்படி புத்தகங்களை அச்சுப் போட்டு அன்றையதினம் பகிரங்கமாக விற்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்விதம் தடுக்கப்பட்ட புத்தகங்களைப் பிரசுரிப்பது சாத்விக முறையில் சட்டத்தை மீறுவது ஆகுமல்லவா?

அன்று சாயங்காலம் உண்ணாவிரதத்தைப் பூர்த்திசெய்து உணவருந்திவிட்டுப் பொது மக்கள் கடற்கரையில் பெருந்திரளாகக் கூடினார்கள். அங்கே மகாத்மா காந்தியும் ஸ்ரீமதி சரோஜினி தேவியும் மற்றும் சத்தியாக்கிரஹப் பிரதிக்ஞையில் கையெழுத்திட்ட தொண்டர்களும் தடுக்கப்பட்ட மேற்படி புத்தகப் பிரதிகளுடன் வந்து சேர்ந்தார்கள். கொண்டு வந்திருந்த ஆயிரக்கணக்கான பிரதிகளும் அதி சீக்கிரத்தில் செலவழிந்து விட்டன. பிரதி ஒன்றுக்கு நாலணா விதம் விலை வைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒருவராவது நாலணா கொடுத்துப் புத்தகம் வாங்கவில்லை. ஒரு ரூபாயும் அதற்கு மேலேயும் கொடுத்துத்தான் வாங்கினார்கள். ஐந்து ரூபாயும் பத்து ரூபாயும் சர்வ சாதாரணமாய்க் கொடுத்தார்கள். ஒருவர் மகாத்மாவிடம் ஐம்பது ரூபாய் கொடுத்து ஒரு புத்தகத்தை வாங்கிக் கொண்டார். இந்தப் புத்தகங்களை வாங்குவது சட்டப்படி குற்றம் ஆகும் என்றும், வாங்குவோர் சிறைக்கு அனுப்பப்படலாம் என்றும் ஜனங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி எச்சரிக்கப்பட்டது. ஆயினும் ஆயிரக் கணக்கானவர்கள் துணிந்து வாங்கினார்கள்.

இவ்வாறாக இந்திய சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற 1919-ம் வருஷம் ஏப்ரல் மீ 6உ முடிவுற்றது.

• • •


மறுநாள் 7உ காலையில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு முதல் காலைப்

போல் பெருங் கூட்டம் வரவில்லை. பொறுக்கி எடுத்தவர்களே வந்திருந்தார்கள். மகாத்மாவின் ஆணைப்படி அவர்கள் சுதேசி விரதமும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைப் பிரதிக்ஞையும் எடுத்துக் கொண்டார்கள்.

7வ இரவு மகாத்மா காந்தி டில்லி வழியாக அமிருதசரஸ் போகும் நோக்கத்துடன் ரயில் ஏறினர். மறுநாள் 8வ மாலை ரயில் வடமதுரை ஸ்டேஷனை யடைந்தபோது மகாத்மாவின் பிரயாணம் தடை செய்யப்படலாம் என்ற வதந்தி அவருடைய காதுக்கு எட்டியது. டில்லிக்கு முன்னுல் உள்ள பால்வால் ஸ்டேஷனை ரயில் அடைந்ததும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் மகாத்மா ஏறியிருந்த வண்டியில் ஏறினர். அவரிடம் ஒரு உத்தரவை சாதரா செய்தார். காந்திஜி பஞ்சாபுக்கு வருவதால் அமைதிக்குப் பங்கம் நேரக்கூடுமாதலால் அவர் அந்த மாகாணத்துக்குள் நுழையக் கூடாது என்று உத்தரவில் கண்டிருந்தது. முன்னொரு தடவை சம்பாரனில் கொடுக்கப்பட்டது போன்ற உத்தரவுதான். ஆனால் சூழ்நிலையில் மிகவும் வித்தியாசம் இருந்தது. முன்னர் ஒரு குறிப்பிட்ட சிறு பிரதேசத்தின் புகாரைப் பற்றி விசாரிப்பதில் மகாத்மா ஈடுபட்டிருந்தார். இப்போதோ இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியையே எதிர்த்து ஒரு பெரிய அகில இந்திய இயக்கத்தை ஆரம்பித்திருந்தார். அதிகார வர்க்கத்தினர் முன்னைப்போல் இந்தத் தடவை இலகுவாக விட்டு விடுவார்களா?

காந்திஜி தாம் அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படியப் போவதில்லையென்றும், பஞ்சாபில் அமைதியைக் காப்பதற்காகவே தாம் போவதாகவும் அந்த உத்தியோகஸ்தரிடம் தெரிவித்தார். "அப்படியானுல் உம்மைக் கைது செய்கிறோம்" என்று சொல்லி ரயிலிலிருந்து இறக்கி விட்டார்கள். காந்திஜி தம்முடன் வந்த ஸ்ரீ மகாதேவ தேசாய்க்கு நேரே டில்லிக்குப் போய்ச் சுவாமி சிரத்தானந்தரிடம் எல்லா விஷயங்களையும் தெரிவிக்கும்படி கட்டளையிட்டார்.

சிறிது நேரம் காந்திஜியும் போலீஸ் அதிகாரிகளும் பால்வால் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் காத்திருந்தார்கள். டில்லியிலிருந்து ஒரு வண்டி வந்ததும் அதில் ஏற்றி அழைத்துப் போனார்கள். மறுநாள் உச்சிப் பொழுதில் மாதோபூர் என்னும் ஸ்டேஷனில் மீண்டும் இறக்கினார்கள். அங்கே லாகூரிலிருந்து வந்த மிஸ்டர் பௌரிங் என்னும் போலீஸ் இன்ஸ்பெக்டர் மகாத்மாவைத் தம் வசப்படுத்திக் கொண்டார். மெயில் வண்டியில் முதல் வகுப்பில் அவரும் மிஸ்டர் பௌரிங்கும் ஏறினார்கள். மிஸ்டர் பௌரிங் மகாத்மாவுக்கு ஹிதோபதேசம் செய்தார். "பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் ஸர் மைக்கேல் ஓட்வயருக்கு உங்கள் பேரில் விரோதபாவம் ஒன்றும் இல்லை. பஞ்சாபில் ஏற்கெனவே அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் வந்தால் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியதுபோல் ஆகிவிடும் என்று பயப்படுகிறார். அவ்வளவுதான். நீங்களே அமைதியாகப் பம்பாய்க்குத் திரும்பிப் போய் விடுவதாக ஒப்புக் கொண்டு விடுங்கள். நாங்கள் நடவடிக்கை ஒன்றும் எடுக்க அவசியம் இல்லாமற் போய் விடும்!" என்று பௌரிங் சொன்னார். அதற்கு மகாத்மா இணங்கவில்லை. "நானாகப் பம்பாய்க்குத் திரும்பிப் போகும் உத்தேசம் இல்லை. உங்கள் இஷ்டம் போல் செய்யலாம்!" என்றார் மகாத்மா. சூரத் ஸ்டேஷன் வரையில் மிஸ்டர் பௌரிங் மகாத்மாவோடு வந்து அங்கே இன்னொரு போலீஸ் அதிகாரியிடம் ஒப்புவித்து விட்டுப் போனார்.



திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயரின் குமாரர் ஸ்ரீ டி. கே. நாகலிங்கம் B. Sc. அவர்களுக்கும் திருச்சி ஸ்ரீ கே. கே. நடராஜன் அவர்களுடைய செல்வக் குமாரி சௌ. அனந்த லக்ஷ்மிக்கும் திருச்சிராப்பள்ளியில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸர் என். வரதாச்சாரியார் முதலிய பிரமுகர்கள் பலர் திருமணத்துக்கு விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

ஸார், ஒரு வார்த்தை

நெருக்கடி குறைய, சௌகரியமாகப் பிரயாணம் செய்ய

- டிக்கட்டில்லாதோரை சுட்டிக் காட்டுங்கள்
- கூட வரும் சாமான்களை கார்டு வானில் போடுங்கள்
- படியில் பிரயாணம் செய்வோரை தடுங்கள்
- சாரி சாரியாக நின்று டிக்கட் வாங்குங்கள்

செய்வனத் திருந்தச் செய்

சாமான்களை அனுப்பும்போது, நாசம், நலிவு, நஷ்டம், தாமதம், தவறுன விலாசதாரிடம், சேர்தல். இவற்றைக் குறைக்க.

- சீராக கட்டுங்கள்
- தெளிவான விலாசம் ஒட்டுங்கள்
- சொந்த அறிகுறியைக் காட்டுங்கள்
- லஞ்சத்தை ஒழிக்க உதவுங்கள்

(ரயில்வே வெளியீடு)

சிந்தித்துப் பார், என் தோழா!

காட்டூர் கண்ணன்

மந்திர தந்திரத் தாலே—போய்
மாங்காய் விழச் செயும் வித்தையைப் போலே
வந்த சுதந்திரம் அல்ல—இதை
வாங்கநாம் பட்டதை முடியாது சொல்ல!

சிந்தித்துப் பாருஎன் தோழா!—இங்கே
சிதறினால் பின்ஏதும் சேர்ந்து ஒட்டாது
யந்திரம் போல் நடக்காதே—நாடு
ஏற்காத கொள்கைக்கு இடம் கொடுக்காதே!

சிறைசென்று செக்கு மிழுத்தார்—பலர்
சிந்தினார் ரத்தம் தடியடி பட்டார்
காந்தியின் நனவுகள் எல்லாம்—வெறும்
கனவாகிப் போய்விட்டால் சுதந்திரம் ஏது?

குறைநூறு சொன்னாலும் தோழா—நிறை
குடம்மிஞ்சித் தளும்பாது குணமாகக் கேளு!
மறைவாகத் தீயை வைக்காதே—அந்த
மண்டிடும் புகையுன்னைக் கொன்றிடும் தோழா!


ஆயிர மாயிரம் காலம்—பலர்
அருமையாய்க் காத்திட்ட சுதந்திரப் பயிரு
நோய்படப் பார்த்திருக் காதே—பின்
நொந்து கொண்டாலொரு பயனும் வராதே!

காயில் அடித்துப் பழுத்தால்—தோழா!
கனி வெதும்பிப் பயனற்றுப் போகும்
பாயும் சுதந்திர வெள்ளம்—இதைப்
பாத்திகள் கட்டித்தான் தேக்கிட வேணும்!

ஆக்கப் பொறுத்தஎன் தோழா!—சற்று
ஆறப் பொறுத்துநீ அருந்தக் கூடாதா?
ஊக்கம் தளரா ஜவாஹர்—நெஞ்சில்
உறுதி குலையாத வீரராம் சர்தார்

வாக்கிலே சத்தியம் ஓங்கும்—அன்பு
வடிவமாய் வந்தநம் தலைவர் ராஜாஜி
ஆட்சியைப் பழுது சொல்லாதே—காந்தி
ஆணையில் நின்றிடு அச்சம் கொள்ளாதே!

சிந்தித்துப் பாரு என் தோழா!



காட்டில் சுதந்திரம்

விஜயம்


அந்தக் காட்டில் வசித்த மிருகங்களுக்கெல்லாம் ஒரே ஆனந்தம். ஏனெனில், சிங்க ராஜாவின் முடி ஆட்சி முடிந்து, மிருகங்களின் சுய ஆட்சி ஆரம்பமாகிவிட்டது. அதாவது, நம்மைப் போலவே அந்தக் காட்டு மிருகங்களும் சுதந்திரம் அடைந்து விட்டன.

காடு முழுவதும் எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக இருந்தது. ஒட்டைச் சிவிங்கியின் கழுத்தில் மாலை போட முடியாமல் முயல் தவித்தது. முயல் கழுத்தில் மாலை போட முடியாமல் ஒட்டைச் சிவிங்கி தவித்தது. பறவைகளுக்கோ ஆனந்தம் தாங்கவில்லை. அவை பறந்து கொண்டே தேசிய கீதம் பாடின. ஆனால் அச்சமயம் ஒரு வருந்தத் தக்க காரியமும் காட்டில் உருவாகி வந்தது. எத்தனையோ வன மிருகங்கள் சிறைவாசம் செய்து, பட்டினி கிடந்து உயிரையும் கொடுத்துச் சம்பாதித்த சுதந்திரம் சில மூர்க்க மிருகங்களின் அடாத செயல்களினால் பறிபோய் விடுமோ என்று அஞ்சும்படியாயிருந்தது.

சுதந்திர அரசாங்கத்துக்கு எதிராக, குரங்கார் ஒரு கூட்டத்தைச் சேர்த்திருந்தார். அந்தக் குரங்காருடைய நோக்கம் எப்படியாவது காட்டில் குழப்பம் உண்டாக்கி அரசாங்கத்தைக் கவிழ்த்து விட வேண்டும் என்பதுதான். அதற்காகக் குரங்காரும் அதன் கூட்டத்தாரும் கையாண்ட குரங்குத்தனமான காரியங்கள் மிகவும் பயங்கரமாயிருந்தன.


எத்தனையோ பாடுபட்டு மிருகங்கள் பயிராக்கியிருந்த தானியங்களையெல்லாம் அழித்து வந்தார் குரங்கார்; காட்டு மிருகங்களின் பொது உபயோகத்துக்காக அரசாங்கத்தார் சேமித்து வைத்திருந்த தானியங்களையெல்லாம் தீயிட்டுக் கொளுத்தினர். தொழிலாளர்களையெல்லாம் அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டி விட்டுச் சதி செய்தார். அதற்கு உட்படாத மிருகங்களையெல்லாம் சுட்டு வீழ்த்தச் செய்தார். தண்டவாளங்களைப் பெயர்த்து ரயில் போக்கு வரத்தையெல்லாம் தடை செய்து பிரயாணிகளுக்கும் உணவுப் பொருள்களுக்கும் சேதம் ஏராளமாக விளைவித்தார். தந்திக் கம்பியை அறுத்து அவசரச் செய்திகளையெல்லாம் போகவொட்டாமல் தடுத்தார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு பிரதம மந்திரி யானையார் சும்மா இருந்துவிடவில்லை. ஏராளமாகப் போலீஸ் படையை அந்தக் காடு முழுவதும் அனுப்பி, நாசவேலையில்ஈடுபடும் ராட்சத மிருகங்களையெல்லாம் கைதுசெய்ய ஏற்பாடு செய்தார்.



"சுதந்திரம் பெற்றது பெரிதல்ல: அதைக் காப்பாற்ற நேர்மையும் நீதியும் வேண்டும். அவரவர் இஷ்டப்படி, தங்கள் மனம் போன போக்கில் நடப்பதுதான் சுதந்தி

ரம் என்று சில மூடர்கள் நினைத்து, காட்டு மிருகங்களைத் தவறான பாதையில் செலுத்த முயற்சி செய்கின்றனர். அது பெருந் துரோகம். அந்தத் துரோகத்துக்குப் பொது மிருகங்களால் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கம் ஒரு போதும் தலை வணங்காது. எல்லா மிருகங்களும் இது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு உதவி செய்ய வேண்டும். குழப்பத்தையும் அநீதியையும் ஒடுக்க வேண்டும்!" என்று காடு முழுவதும் பிரதம மந்திரியின் அறிக்கை பறந்தது.



காட்டு மிருகங்களெல்லாம் ஒற்றுமையாக அரசாங்கத்துக்குத் துணை செய்யவே, குரங்குக் கட்சியினரில் பல மிருகங்கள் பிடிபட்டன. குரங்கார் மாத்திரம் அகப்படவில்லை; போலீஸாரிடமாவது காட்டு மிருகங்களிடமாவது அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்று குரங்கார் பதுங்கிப் பதுங்கித் தலை மறைவாகவே வாழ்ந்து வந்தார்; பல நாள் வீட்டை விட்டு வாசலை விட்டுப் பட்டினி கிடந்தார்.

"சதிவேலைகளில் ஈடுபட்டுக் காட்டு மிருகங்களுக்குப் பெருந் துன்பம் விளைவிக்கும் கோணல் கட்சித் தலைவர் குரங்காருக்கோ அல்லது அவரைச் சேர்ந்தவர்களுக்கோ இடங்கொடுத்து ஆதரிக்கக் கூடாது. அவர்களுக்குப் பொருளோ ஆகாரமோ கொடுக்கக் கூடாது. அவர் அகப்பட்டுக்கொண்டால் சர்க்காரிடம் ஒப்புவிக்க வேண்டும்!" என்று சர்க்கார் உத்தரவிட்டனர். மிருகங்களெல்லாம் சர்வ ஜாக்கிரதையாயிருந்தன.

இதனால் குரங்கார் ரொம்பக் கஷ்டப்பட்டார். பசி காதை அடைத்தது. வெளியில் தலைகாட்ட முடியவில்லை. கஷ்டம் தாங்க முடியாமல் குரங்கார் திருட்டுத்தனமாக ஆகாரம் தேடினார். வீடு வீடாகப் பதுங்கிப் பதுங்கிச் செல்லும்போது, நரியார் வீட்டுப் பின்புறத்துக்கு வந்தார். அங்கே ஒரு மூட்டை வேர்க்கடலை ஒரு மூலையில் குவிந்திருந்தது. காவல் ஒருவரும் இல்லை. குரங்கார் கீழே இறங்கி மெதுவாகப் பதுங்கி வந்து வேர்க்கடலையைத் தின்ன ஆரம்பித்தார். மாதக் கணக்காகச் சரியான ஆகாரம் சாப்பிடாத குரங்காருக்கு வேர்க்கடலையைக் கண்டதும் ஆனந்தம் தாங்க முடியவில்லை. வயிறு புடைக்கத் தின்றுவிட்டார். என்ன அதிசயம்! சொல்லி வைத்தாற் போல் ஒரு பெரிய தொட்டியில் ஜலமும் இருந்தது. ஜலத்தையும் வேண்டிய மட்டும் குடித்தார். அப்புறம் குரங்காரால் நகரக் கூட முடியவில்லை!

இந்தச் சமயம்தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்துவிட்டது. எங்கிருந்தோ வந்த நரியார், பல போலீஸ்காரர்களுடன் தோன்றிக் குரங்காரைக் கைதுசெய்துவிட்டார்.

சர்க்கார் குரங்காருக்கு ஆயுள் கைதியாக இருக்கும்படி தண்டனை விதித்தனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அந்தக் காட்டில் நரியாரைப் பாராட்டாத மிருகங்கள் இல்லை. சுதந்திர சர்க்காரில் அவருக்குப் பொறுப்பான வேலை வேறு கிடைத்தது.

"தேச சுதந்திரத்துக்கு ஆபத்து வராமல் ஒவ்வொரு மிருகமும் பொறுப்பேற்றுக் கொண்டு நரியாரைப்போல சர்க்காருடன் ஒத்துழைத்தால் நம் சுதந்திரத்தை யாராலும் அபகரிக்க முடியாது!" என்று பிரதம மந்திரி யானையார் தம் துதிக்கையைத் தூக்கி நரியாரைப் பாராட்டினார்.

வாழ்க சுதந்திரம்!

சுதந்திரத் திருநாளில்

ஓர் நற்செய்தி!

•

கோவை முனிசிபல் ஹைஸ்கூல்

வெள்ளி விழாவையொட்டி

கோவையில்

சுதேசிப் பொருட்காட்சி

நடைபெறும்

விவசாயம்
விஞ்ஞானம்
குடிசைத்தொழில்
மீன் வளர்ப்பு
கால் நடைகள்
கலைக் காட்சி
சங்கீதம்
நாடகம்
வேடிக்கை
விநோதம்

இன்னும் அநேக அம்சங்கள் நிறைந்தது

ஆரம்ப நன்னாளை எதிர்பாருங்கள்

ஸீதாலக்ஷ்மி சங்கரய்யர் இயற்றிய

ராமன் நூல் வேலை

புஸ்தகங்கள்

(தமிழில்)

•

மொத்தம் வெளியிடப்பட்டிருக்கும் புஸ்தகங்களாவன:

1.	ஆரம்ப புஸ்தகம் 8 படங்கள் அடங்கியவை	0—2—0
2.	புஸ்தகம் நம்பர் 1: 3 வயதிலிருந்து 4 வயது வரையுள்ள பெண் குழந்தைகளின் ஜம்பர்	0—6—0
3.	நம்பர் 2: 9 வயதிலிருந்து 11 வயது வரையுள்ள பிள்ளைகளின் ஸ்வெட்டர்	0—6—0
4.	நம்பர் 3: ஒரு வயதிலிருந்து இரண்டரை வயது வரையுள்ள குழந்தைகளின் கோட்டும் ஸாக்ஸும்	0—6—0
5.	நம்பர் 4: 9 வயதிலிருந்து 11 வயது வரையுள்ள பெண் குழந்தைகளின் ஸ்வெட்டர்	0—6—0
6.	நம்பர்கள் 5-ம் 6-ம் சேர்ந்த ஒரு புஸ்தகம்: 6 மாதம் வரையுள்ள குழந்தைகளின் ஸ்வெட்டர் குல்லா, ஸாக்ஸும் பெரிய புருஷர்கள் ஸ்வெட்டரும்	0-10-0
7.	நம்பர்கள் 7-ம், 8-ம் சேர்ந்த ஒரு புஸ்தகம்: பிறந்ததிலிருந்து 6 மாதம் வரையுள்ள குழந்தைக்கு 'கோட்' நிக்கர், ஸாக்ஸ், குல்லாயும் 6 மாத குழந்தையிலிருந்து ஒன்றரை வயது வரையுள்ள குழந்தையின் பிராக்கும்	0-10-0
8.	நம்பர்கள் 9-ம் 10-ம் சேர்ந்த ஒரு புஸ்தகம்: சிறியவர்களின் ஜம்பரும் பெரிய புருஷர்களின் மூடு கழுத்து ஸ்வெட்டரும்	0-10-0
9.	நம்பர் 1: இங்கிலீஷில் ஸ்ரீ மீனாக்ஷி ஸீதாராமனால் மொழிபெயர்க்கப்பட்டது	0—6—0

(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

•

இந்த புஸ்தகங்கள் கீழ்க்கண்ட விலாஸத்தில் எப்பொழுதும் கிடைக்கும்:

MRS. RAMABHAI RAMASUBBAN
Secretary, 'Raman Knitting' Series
SANKARA NILAYAM-MANNARPURAM
TIRUCHIRAPPALLI



நாட்டியக் கலை உலகில் மிகப் பிரசித்திப் பெற்ற, சிறந்த நடனங்களை விற்பன்னர்களான நடன ராணி ரமணியும் நிருத்ய சம்ராட் கோபாலகிருஷ்ணனும், நமது சுதந்திர இந்தியாவின் தலைநகரான டில்லியில் அதிகாரபூர்வமாக நடனக் கலைத் தொண்டு புரிந்து வருகின்றனர். இவர்களின் 'ரமணிய கலா' கேந்திரத்தில் அநேக மங்கையர்கள் நடனம் பயிலுகின்றனர். மீண்டும் நம் பாரத நாட்டின் பல முக்கிய நகரங்களில் நடனக் கச்சேரிகள் செய்து விட்டுப் பிறகு நடன கோஷ்டியுடன் மேல் நாடுகளுக்குப் போகத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

● ★ ●

(ரமணி—கோபாலகிருஷ்ணனுக்கு பரதநாட்டியக் குருக்கள்: பந்தணைநல்லூர் பெரியார் நாட்டிய கலாநிதி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையும் திருவிடமருதூர் மகாலிங்கம் பிள்ளையுமாவர்)

● ★ ●



சிறு பிராயத்திலிருந்தே பரம பக்தியுடன், பரத நாட்டியக் கலைக்குத் தொண்டாற்றி வரும் இந்த நடன மணிகளின் கலைத் திறன், உலக அரங்கு மேடையிலும், வெள்ளித் திரையிலும், மக்கள் இதயத்திலும் என்றும் மாறாத சோபையுடன் விளங்கி நீடூழி சுடர் விட்டுப் பிரகாசிக்கட்டும் என்று நல்லாசி கூறுகிறோம்.

சுவாமி விவேகானந்தர்

ரா. வி.

“மஹாராஜ்! தங்களைப் பேட்டி காண்பதற்காக ராஜாக்களும் மகா ராஜாக்களும் வந்து காத்திருக்கின்றனர்!” என்றான் மெய்க் காவலாளன்.

“என்ன, என்னையா! என்னைப் பேட்டி காண ராஜாக்கள் வந்திருக்கின்றனரா? ஆச்சரியமாயிருக்கிறதே! எதற்காக வந்திருக்கிறார்களாம்?”

“வேந்தருக்கும் வேந்தரான தங்களைக் கண்டு ராஜ்ய பாரத்தை நிர்வகிப்பது சம்பந்தமாக ஆலோசனை கேட்பதற்காகவும், மரியாதை செலுத்துவதற்காகவும் அவர்கள் வந்திருக்கின்றனர்.”

இதைக் கேட்டதும் அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவர் தம் சரீரத்தை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார். சக்கரவர்த்திக்குள்ள ஆடை ஆபரணங்களுடன் பட்டுப் பஞ்சணையில் தாம் அமர்ந்திருப்பதைக் கண்டார். வியப்பு மிகுதியினால் அவர் முறுவலித்துக்கொண்டே புரண்டு படுத்தார்.

அடுத்த கணம் வேறொரு காட்சி. அவர் காஷாய உடை தரித்துக் கையில் கமண்டலமும், தண்டமும் ஏந்தி முற்றும் துறந்த முனிவராகக் காட்சி அளிக்கிறார். அவரைச் சூழும் கோடானு கோடி மக்கள் அவருடைய உபதேசங்களையும், அருள் வாக்குகளையும் பெறுவதற்காக வணங்கி நிற்கின்றனர்.

அடே! இதென்ன இது! சற்று நேரத்துக்கு முன்பு சகல சௌபாக்கியங்களுடனும் கூடிய அரசர் பெருமானாக விளங்கினேனும்; அதற்குள் இப்படிக் காவியுடை உடுத்திய சந்நியாசியாக எப்படி மாறினேன்! —அதிசய மிகுதியினால் அவர் திடுக்கிட்டுக் கண் விழித்தார். தாம் கண்டது கனவு என்பதையும் தாம் படுக்கையில் படுத்திருப்பதையும் உணர்ந்தார்.

உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகள், பூர்த்தியுறாத ஆசைகள்—இவைதான் கனவாகப் பரிணமிக்கின்றன என்கிறார் மனோதத்துவ ஆராய்ச்சியாளரான ஸிக்மண்ட் ப்ராய்ட் என்னும் பேராசிரியர்.

ஆனால் அவர் கண்ட கனவு நனவாயிற்று. அல்வார் சமஸ்தானத்து அரசர் என்ன! கேத்திரியின் மகாராஜா என்ன? மைசூர் மகாராஜா என்ன? ராமநாதபுரம் சமஸ்தானத்துச் சேதுபதி என்ன?—எல்லோருமே அவரைப் பேட்டி காணத் தவமிடந்தனர். மாபெரும் மகான்களும் பொது மக்களும் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். அவர் வேந்தராக-துறவி வேந்தராகத் திகழ்ந்தார். உலகமே அவருடைய மேதையை மெச்சியது; அவருடைய அடிகளைப் பணிந்தது. அவருடைய உபதேசங்களை மனமுவந்து ஏற்றது. அம்மகான்தான் ராஜ களையும், ஆத்ம தேஜஸும் ஒருங்கே அமையப் பெற்ற சுவாமி விவேகானந்தர் என்னும் நரேந்திரர்.

• • •

சுவாமி விவேகானந்தர் 1863-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சிமுலியா என்னும் கிராமத்தில் அவதரித்தார். அவருடைய தந்தை விசுவநாத தத்தரும், தாயார் புவனேசுவரியும் தவம் கிடந்து பெற்ற பிள்ளையாதலால் அவர் மிகவும் செல்வமாக வளர்ந்தார். ‘தாயின் குணம் சேய்க்கும் படியும்’ என்பதற்கேற்ப, குழந்தைப் பருவம் முதற்கொண்டே அவருடைய மனம் தியானத்திலும் நிஷ்டையிலும் ஈடுபடலாயிற்று. விளையாடுவது, படிப்பது போன்ற காரியங்களிலும் அவர் ஒருமைப்பட்ட உள்ளத்துடன் ஈடுபட்டார்.

அவர் பள்ளியில் படித்து வந்த காலத்தில் ஒரு நாள் பூகோளப் பாடம் நடந்து கொண்டிருந்தது. கண்களை மூடிக்கொண்டு பாடத்தைக் கவனிப்பதில் அவர் சுவாரஸ்யமாக ஈடுபட்டிருந்தார். உபாத்தியாயருக்கு அவர் தூங்கிவழிந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஆகவே அவர், ‘வகுப்பில் என்னடா தூக்கம்?’ என்று கேட்டுப் பிரம்பினால் அடித்து விட்டார். விவேகானந்தர், ‘நான் பாடத்தைக் கவனித்துக்கொண்டுதான் இருந்தேன்’ என்று சொன்னார். அதற்கு ஆதாரமாக உபாத்தியாயர் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதிலையும் சொன்னார். ஆனால் கோபாவேசத்தில் இருந்த உபாத்தியாயருக்கு அவருடைய பதில் ‘சரியா, தப்பா?’ என்று யோசிக்க எங்கே பொழுதிருந்தது? அடிமேல் அடி அடித்துக்கொண்டே யிருந்

னார். விவேகானந்தர் அவ்வளவு அடியையும் பொறுத்துக் கொண்டார். அடிக்குப் பயந்து தாம் சொன்ன பதிலை மாற்றிக் கொள்ளவில்லை. ஆத்திரம் அடங்கிய பின்னர்தான் உபாத்தியாயருக்குத் தம் பிழை தெரிய வந்தது. அவர் தம்முடைய செய்கைக்காக விவேகானந்தரிடம் மன்னிப்புக் கோரினார்.



விவேகானந்தர் பிறருடைய முடிவைக் கொண்டே எந்தக் காரியத்தையும் தீர ஆலோசித்துச் செய்பவர். எந்த விஷயத்தையும் தமக்குத் தாமே கேட்டு அலசிப் பார்த்த பிறகு தான் அவர் ஒரு முடிவுக்கு வருவது வழக்கம். அவர் எப். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்னும் தத்துவப் பேராசிரியர் எழுதிய நூல் ஒன்றைப் பார்க்க நேர்ந்தது. அதில் பல குற்றம் குறைகள் இருந்தன. அவற்றை எடுத்துக் காட்டி, ஹெர்பர்ட் ஸ்பென்ஸருக்கு விவேகானந்தர் ஒரு விமரிசனம் எழுதி யனுப்பினார். ஆசிரியர் அவருடைய மேதையை மெச்சிப் பதிலும் எழுதினார். அப்படிப்பட்ட விவேகானந்தரின் மனம் ஏனோ கொஞ்சம் கொஞ்சமாக ஆஸ்திகத்தை விட்டு நாஸ்திகத்தை நம்பத் தொடங்கிற்று. அதற்குப் பின் அவர் தாம் சந்திக்கும் பெரியார்களையும் மகான்களையும் 'கடவுள் என்றால் என்ன? நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டுத் திகைக்க வைக்கலானார். கடைசியில் தக்ஷிணேசுவரம் என்னும் இடத்தில் மோனத் தவத்தில் ஆழ்ந்திருந்த ஒரு பக்தரை அவர் சந்திக்க நேர்ந்தது. அந்தப் பெரியாரிடமும், "என் ஸ்வாமி, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?" என்று அதே கேள்வியைக் கேட்டார் விவேகானந்தர்.

"ஓ! கண்டிருக்கிறேனே!" என்று பளிச்சென்று பதில் அளித்தார் அந்தப் பெரியார். அவருடைய பதிலில் உறுதியும் திட நம்பிக்கையும் இருந்தன. அந்தப் பதிலைக் கேட்டதும் ஸ்வாமி விவேகானந்தருடைய உடலில் மின்னொளி பாய்ந்தது போன்ற ஒரு உணர்ச்சி பரவியது; உரோமம் சிலிர்த்தது; உள்ளத்தின் ஆழத்திலிருந்து, "ஆம், கடவுள் இருக்கிறார்! என்னும் இருக்கிறார். உலகமே கடவுள்; கடவுளே உலகம்!" என்று யாரோ அழுத்தமாக அடித்துச் சொல்லுவது போலிருந்தது.

அந்தக் கணமே ராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்னும் அம் மகானின் சிஷ்யரானார் நரேந்திரர்.

விவேகானந்தரின் தாயார் அவருக்கு மணம் செய்து விட வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அவருக்கோ மண வாழ்க்கையில் மனம் நாட்டம் கொள்ளவில்லை. ஆகவே அவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அனுமதி பெற்றுத் துறவு பூண்டார். அவரிடம் பல விஷயங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சமாதி யடைந்த பின்னர் விவேகானந்தர் ஹிமாலய பர்வதத்துக்குச் சென்று யோக சாதனையில் ஈடுபட்டார். வேத-வேதாங்கங்களின் உட்கருத்துக்களை நன்கு உணர்ந்திருந்த விவேகானந்தர் பிற மதங்களில் உள்ள மேம்பாடுகளையும் கற்றுத் தேர்ந்தார். பிறகு உலகத்தில் உள்ள எல்லா மதங்களிலும் தலைசிறந்தது ஹிந்து மதம்தான் என்பதை அறிந்தார். ஏனெனில் மற்றெல்லா மதங்களிலும் இல்லாத ஒரு விசேஷம்—பிற மதங்களை ஒற்றுமைப்படுத்தும் தன்மை—ஹிந்து மதம் ஒன்றில்தான் இருந்தது. ஆகவே பாரத நாட்டின் பழம் பெருமையை நிலை நாட்டுவதற்காகவும், அடிமைத் தளையில் கட்டுண்டு அல்லலுறும் பாரத மக்களை விழித்துக் கொள்ளச் செய்து இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்காகவும், ஸ்வாமி விவேகானந்தர் பாரத தேசமெங்கும் வீரமுழக்கம் செய்வதற்காகப் புறப்பட்டார். பாரமார்த்திகத்தின் அடிப்படையில் இந்திய சுதந்திரத்தை நிர்மாணிக்க வேண்டும் என்பது அவருடைய அவா. சுற்றுப் பிரயாணத்தில்—இத் விஜயத்தில் — அறிவாற்றலும் தேச பக்தியும் நிறைந்த சொற்பொழிவுகளால் அவர் தம் நோக்கத்தை உலக மெங்கும் எடுத்துச் சொல்லி வலியுறுத்தினார்.

அறிவுத் திறனில் உயர்ந்த தென்னாடு அவருடைய அறிவாற்றலைக் கண்டு குதூகலமாக வரவேற்பளித்தது. அமெ


சிக்க நாட்டில் நடந்த சர்வ மத மகா சபைக்கு அனுப்பி வைத்தது. இந்தியாவின் பெருமையை எடுத்துரைப்பதற்கான ஏற்பாடும் செய்து வைத்தது. சிகாகோ நகரத்தில் நடந்த சர்வ மத மகாசபையில் அவர் செய்த பிரசங்கங்கள் உலகத்தாரையே அதிசயிக்கச் செய்து இந்தியா தேசத்துக்கு மங்காப் புகழையும் அளித்தன. 'நியூயார்க் ஹெரால்ட்' என்னும் பத்திரிகை அவரைப் பற்றி எழுதும்பொழுது 'சுவாமி விவேகானந்தர் மாபெரும் மகான். அவருடைய பிரசங்கத்தைக் கேட்ட பின்னர், இந்தியா போன்ற உயர்ந்த கல்வியறிவு படைத்த நாட்டுக்கு நம் நாட்டுப் பாதிரிமார்களை அனுப்புவது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பது நிதர்சனமாக விளங்குகிறது' என்று எழுதியிருந்தது என்றால் அவருடைய மேதையை என்னவென்பது?

மேல் நாட்டில் வேதாந்த வெற்றிக் கொடி நாட்டிவிட்டுத் விவேகானந்தர் தம் தாய்நாட்டுக்கு திரும்பினார். தேச நலனை உத்தேசித்து, கல்கத்தாவிலும் சென்னையிலும் இரு மடங்களை ஸ்தாபிக்க வேண்டும், அதன் மூலம் தேச சேவை புரிய தேசத் தொண்டர்களைத் தயாரிக்க வேண்டும் என்று விவேகானந்தர் விரும்பினார். அதன்படியே கல்கத்தாவுக்கருகில் உள்ள பேலூர் என்னுமிடத்திலும், அல்மோராவுக் கருகில் உள்ள மாயாவதி என்னுமிடத்திலும், சென்னையிலும் ராமகிருஷ்ண மடம் ஸ்தாபிக்கப் பெற்றது.

• • •

1902-ம் ஆண்டு வரை பாரத நாட்டின் பெருமையை நிலை நாட்டுவதற்காகவும், தேசாபிமானத்தை ஊட்டி மக்களை விழிப்படையச் செய்வதற்காகவும் பாடுபட்டுவிட்டு ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் சமாதி நிலையை அடைந்தார்.

விவேகானந்தர் போன்ற மகான்களின் பெரு முயற்சியினால்தான் இன்று நம் நாடு சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவில் நடந்த ஆசிய மகா நாட்டுக்கு நமது இந்தியாதான் நாயகமாகவும் விளங்கியது. இதையெல்லாம் கண்டு சுவாமிகளின் ஆத்மா பரம மகிழ்ச்சி அடைந்திருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. 'உலகத்திலேயே உயர்ந்த நாடு பாரத நாடுதான்' என்னும் அவருடைய திருவாக்கு நிறைவேறுமாக!



பெண் பார்க்க வந்தவர் :—என்ன ஐயா? பெண் சும்மா வாயைத் திறந்து கொண்டு இருக்கிறாள். பாட்டு வேறு எங்கேயிருந்தோ வருகிறதே!


மற்றவர் :—இந்தப் பெண் சினிமா ஸ்டார் ஆகப்போகுதுங்க. அதுக்கு வேண்டிய தயாரிப்பெல்லாம் ஆகியிருக்கிறது!

"முதலாளிகளையும், தொழிலாளிகளையும் ஒரு ஆற்றின் இரு கரைகளாய்க் கருத வேண்டும். இதில் ஏதேனும் ஒரு கரை உடைத்துக் கொண்டு போனால், ஆற்றிலிருக்கும் தண்ணீர் வற்றி விடும். ஊரிலிருக்கும் பொது ஜனங்களுக்கும் ஆபத்து உண்டாகும்.

—ராஜாஜி



சந்தணம்
குளிர்ந்த மணம்
மைசூர்
சந்தண சோப்
சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே
B-I-Tm


அலுமினிய பெட்டிகள்!
இலேசானவை, அழகானவை, உறுதியானவை
ஏர் ட்ராவல் கேஸஸ்
18" முதல் 28" வரை
ரூ. 18 முதல் 40 வரை
டாகுமெண்ட் பாக்ஸ்
15"x10½"x3" ரூ. 13/-
PURE ALUMINIUM
THE CROWN
HALL MARK
OF QUALITY
டாய்லட் பாக்ஸ்
7"x5¼"x3" ரூ. 2/4
ஸ்டூடண்ட் பாக்ஸ்
12"x9"x3" ரூ. 10/-
பீட்டல் பாக்ஸ்
7"x4"x1½" ரூ. 2/4
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.
★
வாங்குவதில் ஏதாவது சிரமம் ஏற்பட்டால்
கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள் :—
ஜீவன்லால் (1929) லிமிடெட்
(புகழ்பெற்ற "க்ரௌன் பிராண்டு" அலுமினியப் பாத்திர உற்பத்தியாளர்கள்)
127, தங்கசாலைத் தெரு :: மதராஸ்
மானேஜிங் டைரெக்டர் :
ராவ்பகதூர் ஹிராசந்த்
கல்கத்தா பம்பாய், ராஜமஹேந்திரம் ஏடன். டில்லி ரங்கூன்
ஆகிய இடங்களில் ஆபீஸ்களும் பாக்டரிகளும் உள்ளன.


இன்னும் ஒரு சினிமா நட்சத்திரத்தை வசியப்படுத்திவிட்டது
—இந்த லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய பரிமளம்!
"மகிழ்ச்சியுடன் அதிக மலர்ச்சியைத் தருவது லக்ஸ் டாய்லட் சோப்பின் இந்த புதிய பரிமளம் தான்"
. . . என்கிறார் கே. ஆர். செல்லம்
LUX
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 203-172 TM

உங்களுக்கு

எடை குறைந்து தளர்ச்சி,
அதைரியம், பலவீனம்
வெறுப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டால்

கீழுள்ள எச்சரிக்கைகளை கவனியுங்கள்!



இல்லையேல் ஏதேனும் விபரீதம் ஏற்படும்!

இன்றே மருந்துகளை உபயோகிக்காமல் உடனடியாகவே உங்கள் ஆரோக்கியத்தையும் சரீரத்தையும் நீடப் பதிந்துங்கரு

இயற்கையில் போதிய அளவில் தாதுப் பொருள்களும் விடாமின்களும் இல்லை என்பதை எச்சரிக்கத்தான் "தாதுவும் விடாமினும்" குறைந்து விட்டது என்று வைத்தியர்களும் கூறுகிறார்கள். சமைத்த உணவுப் பதார்த்தங்கள் உங்களுக்குப் போதிய தாதுக்களை அளிக்கின்றன என்று கூற முடியாது.

இந்த விஷயத்தில் நீங்கள் வெகுவாய் சிரத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால்— உங்கள் தேகத்தின் வியூக சக்தி குறைந்து, துன்பமளிக்கும் வியாதிகள் வெகு சுலபமாக உண்டாகும். பிற்பாடு வாரக் கணக்கில் வைத்தியமும் மருந்தும்தான்.

யோசனை செய்யாமல் விகெல்ப் சாப்பிடுங்கள். மனித வளர்ச்சி வியூகத்திற்கு, இன்றியமையாத அத்யாவசியமான தாதுக்களில்— கால்ஷியம், பாஸ்பரஸ், கந்தகம், இரும்பு, மக்னீஷியம், அயோடின் ஆகாரம் போன்ற 9 தாதுக்கள் அடங்கி யிருக்கின்றன.

விகெல்ப் ஒரு சாதாரண முறையில், தாதுப் பொருள்கள் அனைத்துக்கும் இருப்பிடமான கடல் மூலிகையிலிருந்து தயாரிக்கப் பட்டது தான். — தயாரிப்பில் விடமின் B 1, D 2 வும் கொஞ்சம், இரும்பும் சேர்க்கப் பட்டிருப்பதைத் தவிர வேறு மருந்து எதுவும் சேர்க்கப் படவில்லை. இன்றே விகெல்ப் உபயோகியுங்கள். எவ்வளவு விறுவிறுப்பாகவும், ஆரோக்யத்துடனும், ஆவலுடனும் வேலை செய்ய முடிகிறது என்பதை உணர்வீர்கள். விகெல்ப் ஒரு டானிக்குடன் ஆகாரமுங்கூட.

VIKELP டானிக் ஆகாரம்
விகெல்ப்

V. 22

இந்தியன் மெர்கண்டைல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்: பம்பாய்

பிராஞ்சு ஆபீஸ்: கோயமுத்தூர்

●

ஆயுள், தீ, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸுகள் வழங்கப்படுகின்றன

●

கம்பெனியின் சில சிறந்த அம்சங்கள்:

- ★ உன்னதமான பொருளாதார நிலை
- ★ திறமை மிக்க டைரக்டர்கள்
- ★ சிக்கனமான நிர்வாகம்
- ★ பல வகைப்பட்ட பாலிஸி வசதிகள்
- ★ குறைந்த பிரிமியா விகிதங்கள்
- ★ துரிதமாக கிளெயிம்களைத் தீர்த்தல்

இத்துறையில் நிடித்து நடக்கும் ஸ்தாபனம், எனவே இக் கம்பெனியில் வேலை செய்வதும் பாலிஸி எடுப்பதும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது.

விவரங்களுக்கு பிராஞ்சு மானேஜருக்கு எழுதுங்கள் அல்லது நேரில் காணுங்கள்


கோயமுத்தூர்

தபால் பெட்டி நெ. 4

●

C. சுப்பிரமணியம், B. A.
பிராஞ்சு மானேஜர்


GOOD
ADVICE
for
EVERY
MOTHER
ஜலதோஷம் குழந்தைகளுக்கு
வெகு எளிதில் பிடித்துவிடுகிறது.
அதற்கு உடனே பரிகாரம்
தேடாவிடில் பின்பு அதிக தொந்தரவு! என்பதை
ஒவ்வொரு தாயும் அறிவாள். நோய் பரவுவதையும்,
இருமலையும், டஸ்ஸனால் விரைவில் தடுக்கிறது.
குழந்தைகளுக்கு டஸ்ஸனால் மிக ருசிகரமானது.
TUSSANOL
TUSSANOL
COUGH SYRUP
REGISTERED TRADE MARK



ஆதார ரஸாயனங்கள் -

தொழிலுற்பத்தியின் முக்கிய ஆதாரம்

காவேரி பிராண்ட் ஆதார ரஸாயனங்கள் நவீன உற்பத்தித் தொழில்களில் முக்யஸ்தானத்தை வகிக்கின்றன சமூக ஆரோக்யத்திற்கும், சுகாதாரத்திற்கும் அவை இன்றியமையாதவை. மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான தண்ணீரை சுத்தப்படுத்த கிருமி நாசினி **குளோரின் திரவம்** முதல் தேவையாயுள்ளது. ஸோப், ரேயான், காகிதம், ரப்பர் இவற்றின் உற்பத்தியில் முக்யமானது **காஸ்டிக் ஸோடா.** நாள்தோறும் பெருகி வளர்ந்து வரும் ஆடை உற்பத்தி தொழிலுக்கு **பிளீச்சிங் பவுடர்** அதி அவசியமான பொருள். இவ்வகை ஆதார ரஸாயனங்களின் உற்பத்தியில் தனிச் சிறப்புடன் விளங்குவது மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை :: சேலம்

மானேஜிங் ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்
திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜண்டுகள் :
அல்லைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்
120, அரண்மனைக்காரத் தெரு,
மதராஸ்

உங்கள் குழந்தைகளுக்கு
மிகவும் இன்றியமையாத
காந்தி சோப்.



காந்தி

டாய்லட் சோப்.




ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


கல்கி
சந்திரா
KALKI ஆகஸ்ட் 15, 1949 8 அணா

சிந்தாமணி டாக்கீஸ் லிமிடெட்

கீழவெளி வீதி மதுரை




★

- இந்தத் தியேட்டரில் நவீன R. C. A. High Fidelity தொனிப் பரப்பி ஸிஸ்டமும், மேன்மையான, உயர்ந்த & தாழ்ந்த Frequency யூனிட்டுகளுடன் கூடிய ஒலிப்பெருக்கிகளும், மிகுந்த பிரகாசத்துடன் கண்களுக்கு குளிர்ச்சியைத் தருவதுமான (High Intensity) ஆர்க் விளக்குகளும் நன்கு அமைக்கப்பட்டுள்ளன.


- நவீன சுகாதார முறைப்படி அமைக்கப்பட்டதும், மிகுந்த வசதி கூடியதும், உயர்தர படங்களை காண்பிக்கப்படுவதுமான தியேட்டர் எங்களுடையதுதான்.

REGD. NO. M. 4392



வேலை செய்யும் கைகளில் அழுக்குப்படிகின்றது...
எங்கு அழுக்கிருக்கிறதோ அங்கு கிருமிகளாலான
அபாயம் ஏற்படும்!

அடிக்கடி லைப்பாயினால் சுத்தம்
செய்துகொள்ளுங்கள்!



லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுகிறது

L. 109-172 TM